
இலண்டன்

# சுடரொளி

£1.00 / இலங்கை ரூ. 35.00 / RM 4

CHUDEROLI JAN - FEB மார்கழி - தை 2009



## அமெரிக்க புதிய ஜனாதிபதியின் பார்வை ஈழத் தமிழருக்கு விடியலை உருவாக்குமா?



## புத்தாண்டு - பொங்கல் திருநாள் ஈழத்தமிழர் வாழ்வில் அமைதியையும் சமாதான வாழ்வையும் கொண்டு வரட்டும்

வாசகர்களுக்கும், சந்தாதாரர்களுக்கும்,
விளம்பரதாரர்களுக்கும் சுடரொளியின்
பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# Lakshmi Jewellers

## HOUSE OF FINE JEWELLERY

திருமண வைபவத்திற்குத் தேவையான
வைரத் தாலிக்கொடி முதல் பட்டுச் சேலைகள் வரை
ஒரேஇடத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய
முதலாவது தமிழர் களஞ்சியம்

பொன்னுருக்கல் செய்வதற்கான
சகல வசதிகளும் முறைப்படி
செய்து கொடுக்கப்படும்





**276, High Street North, London E12 6SA UK.**
**Tel: 020 8470 5600, Fax: 020 8470 5600**







# Priya
## *Restaurant*





Fully Licenced & Air Conditioned
Sri Lankan & South Indian Restaurant

We do outdoor Catering Please Contact

விசேட விலைக்கழிவில் திருமணம், பிறந்தநாள் வைபவங்களை
மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

209 High Street North,
Eastham, London E6 1JG
Tel: 020 8471 5552
(Close to Underground Station)

256 Hoe Street, Walthamstow,
London D17 3AX,
Tel: 020 8520 5552
(Close to Underground Station)




இலண்டன்

# சுடரொளி
# CHUDEROLI

கலை இலக்கிய அரசியல் சமூக இதழ்

சுடர் 6 ஒளி 1 தை-மாசி 2009



**கௌரவ ஆசிரியர் :**
திரு. சி. சரவணபவன் (சிற்பி), M.A.,

**பிரதம ஆசிரியர் :**
திரு. ஐ.தி. சம்பந்தன்

**சிரேட்ட ஆலோசகர்கள் :**
திரு. பொன் பாலசுந்தரம்
திரு. என். செல்வராஜா (நூலகவியலாளர்)

**ஆசிரியர் குழு ஆலோசகர்கள் :**
திரு. மயில் மனோகரன்
திரு. எஸ். கருணானந்தராசா
திருமதி. திருச்செல்வஉமா ஜெயக்குமார்

**பதிப்பாசிரியர் :**
திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,

**நிர்வாகம் :**
திருமதி. செல்வதி சம்பந்தன், B.A,(Hons)

**வடிவமைப்பு :**
உலகத் தமிழர் பதிப்பகம், சென்னை
Email : utpmathi@yahoo.co.in

**கணினி :**
திருமதி. சரோஜா இலட்சுமணன்

**வெளியீடு :**
Chuderoli Publication Society,
15, Rutland Road, London E7 8PQ UK
Tel : 0044 208 552 6992
Mob : 07957 666 598
Email : itsampanthan@hotmail.com

**தமிழகப் பிரதிநிதி :**
திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,
4, Sourashtra Nagar, 7th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Tel : 0091 44 65180155/0 9444 111 951
E-mail : eramathi@rediffmail.com

**இலங்கைப் பிரதிநிதி :**
திரு. V. தருமலிங்கம்

**மலேசிய தொடர்பாளர் :**
திரு. தி. மணிவண்ணன், Tel : 017-2294368



| Subscription | | Annual | Life |
|---|---|---|---|
| UK | : | £ 12 | 120 |
| Europe | : | £ 15 | 150 |
| India | : | Rs. 200 | 2000 |
| Sri Lanka | : | Rs. 300 | 3000 |
| Malaysia | : | RM 30 | 300 |
| Singapore | : | SG$ 15 | 150 |
| Other countries | : | £ 20 | 200 |




படைப்பின் கருத்துகளுக்குப் படைப்பாளரே பொறுப்பு


## இந்த இதழில்


1. எமது நோக்கு - வீழ்ச்சியை நோக்கி மகிந்த அரசு - 3
2. ஈழத்து நாடக மேதை வைரமுத்து - காரை சுந்தரம்பிள்ளை 5
3. உயிர்த் துறக்க தயார் : கலைஞர் கருணாநிதி 9
4. அரசப் பணியிலிருந்து ஆத்மிகத்துக்குப் பொன் வல்லிபுரம் 10
5. நோற்றலின் ஆற்றல் - கோத்திரன் 14
6. தைப் பொங்கல் - குரும்பசிட்டியூர் யோகேஸ்வரி நவரத்தினம் 18
7. **Causes for conflict in Sri Lanka - Justice C.V. Wigneswaran** 20
8. நூல் அறிமுகம் - திசையெல்லாம் தமிழ்க் கவிதை 23
8. விண்ணை அடைந்த விந்தை மனிதர் டாக்டர் இந்திரகுமார் 32
9. பராக் ஒபாமா தமிழர்களுக்கு விடியலைக் கொண்டு வருவாரா? 34
10. க.சி. குலரத்தினம் வாழ்வும் எழுத்தும் - என். செல்வராசா 38
11. ஏன் வேண்டும் தமிழ் ஈழம்? 43
12. திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!! - சோம. வள்ளியப்பன் 45
13. கதை நேரம் - முதலில் தூக்கி எறி - தி.க. சந்திரசேகரன் 52


## தமிழ் வளர்த்த செம்மல் தமிழ்வேள் கந்தசாமி



பிரம்மச்சாரிய விரதம் பூண்டு, தமிழ்த்தாயை உளமார நேசித்துத் தமிழை வளர்த்த அறிவு மேதை தமிழ்வேள் கந்தசாமி அவர்கள். சைவமும் தமிழும், கலாச்சார வளமும் மிகுந்த இணுவிலில் 1-9-1919இல் பிறந்த பெருமகன். இவ்வுலகில் 90 ஆண்டுகள் வாழ்ந்து 19-10-2008 அன்று இறைவனடி சேர்ந்தார். வாழ்நாளில் பெரும்பகுதியைத் தமிழ்ப்பணி, சமூகப் பணிக்காக அர்ப்பணித்த தமிழ்முனி. தமிழை உயிராக நேசித்த மாமனிதன்.

தமது ஆரம்பக் கல்வியைக் கோண்டாவில் சைவத்தமிழ் வித்தியாலயத்திலும் உயர்கல்வியைக் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றார். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று ஆசிரியரானார். 1946இல் மதுரைப் பண்டிதர் தேர்வில் சித்தியடைந்து பண்டிதரானார். 1957இல் சென்னை சைவ சித்தாந்த மகா சமாசத்தின் சைவப்புலவர் தேர்வில் சித்தி பெற்று சைவத் தமிழ் அறிஞரானார். நிறைந்த தமிழ் அறிவுடன் ஆசிரியர் உலகில் புகுந்த திரு. கந்தசாமி அவர்கள் பல பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். இறுதியாகக் கொழும்பு றோயல் கல்லூரியில் நீண்ட காலமாகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். கொழும்பில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் தமிழ்ப்பணியோடு, சமய, சமூக, தமிழ் ஆய்வுப் பணிகளையும் மேற்கொண்டு வந்தார்.

நேர்மையாகவும், பற்றுறுதியோடும், நம்பிக்கையுடனும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு நற்பெயரைத் தேடிக்கொண்டார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் 40 ஆண்டுகளுக்கு மேலாக இணைந்திருந்த இவர் 20 வருடங்களாக சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றியுள்ளார். 1983 இனக் கலவரத்தின் போது அச்சங்கத்தைப் பாதுகாத்தார். இன்று கொழும்பில் விருட்சம் போல் வளர்ச்சியடைந்திருக்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் உயர்வுக்குத் தமிழ்வேள் கந்தசாமி அவர்களின் பங்களிப்பு மிகக் காத்திரமாக அமைந்துள்ளது. தமிழ் மீதும், தமிழ்ப் புலவர் மீதும் அளப்பரிய பக்தி கொண்ட தமிழ்வேள் 2003 இல் புலவர் கழகத்தை உருவாக்கித் தமிழ் மாநாடுகள் நடத்தி வந்தார்.

இவரது தமிழ்ப் பணிக்கும், சமூகப்பணிக்கும் சான்றாக, ''தமிழ் வேள்'', ''தமிழ்மணி'', ''தமிழ்க் காவலன்'' எனும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படார்.

தமிழ் வளர்த்த சான்றோர்களின் வரலாறுகளைப் பதிவு செய்வதில் ஆர்வம் காட்டி வந்தார். பல்கலைப் புலவர் க.பி. குலரத்தினம் அவர்கள் எழுதிய ''செந்தமிழ் வளர்த்த செம்மல்'' என்னும் நூலைச் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினால் வெளிவருவதற்குக் கந்தசாமி அவர்கள் முன்னின்று உழைத்தவர். அன்னார் மறைவுக்கு முன் கொழும்பில் நடாத்திய ''சிலப்பதிகார விழா'' ஈழத்தமிழக அறிஞர்கள் ஒன்றிணையும் பெருவிழாவாக அமைந்தது. தமிழக அறிஞர்களிடையே ஒரு சிறந்த நல்லெண்ணத்தை உருவாக்கிய விழாவாக அதனைப் பத்திரிகைகள் பாராட்டியிருந்தன.


அன்னார் வாழும் பொழுது ஆற்றிய தமிழ்ப் பணிகளால் அவர் என்றும் தமிழ் உலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பார். அன்னாருக்கு இலண்டன் சுடரொளி அஞ்சலி செலுத்திக் கௌரவிக்கின்றது.

– ஐ.தி. சம்பந்தன், ஆசிரியர்

சிந்தனைப் பகுதி

# வேற்றுமொழிச் சொற்கள்

சி. மாசிலாமணி



**வே**ற்று மொழிச் சார்பின்மையும், தரமும், பழைமையும் கொண்ட இலக்கியங்களே தமிழைச் செம்மொழி என்ற தரத்திற்கு உயர்த்தியவை. இந்தத் தரமான இலக்கியங்களில் கூடுதலானவை சங்க காலத்தில் வடிவம் பெற்றதால் தமிழையே சங்கத் தமிழ் என்று அழைத்துப் பெருமை கொள்ளுகிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றைக் கவனத்திற்கு எடுக்க வேண்டி உள்ளது. இந்தச் சங்கம் என்ற சொல்லே வடமொழியிலிருந்து இரவல் வாங்கிய ஒரு சொல்தான். அதில் தவறு ஒன்றும் இல்லை. ஒரு மொழி மற்றொரு மொழியுடன் தொடர்பு கொள்ளும்போது சொற்கள் கலத்தல் தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாகும். வடமொழிகூடத் தமிழிலிருந்து பல சொற்களை இரவல் வாங்கியுள்ளது. எடுத்துக்காட்டிற்கு அனல், உலக்கை, குடம், மயில், மாலை, முரசு, களம், பழம், உடுக்கை ஆகிய சொற்கள் தமிழிலிருந்து சென்றவை. மொழித் தொடர்பால் கலக்கும் சொற்கள் அதிக அளவில் பெருக மாட்டா. ஆனால், இந்து சமயத்தின் உயர் செல்வாக்கினால் வடமொழியிலிருந்தும் கற்பித்தல் மொழியாக இருந்த காரணத்தாலும் ஆங்கிலம் பேசுவதைப் பெருமையாகக் கருதும் ஒரு சூழல் உள்ளதாலும் ஆங்கிலத்திலிருந்தும் பெருவாரியான சொற்கள் தமிழுள் புகுந்துவிட்டன. எம்மொழியின் தோற்றத்தையே மாற்றுமளவுக்கு அவ்விரு மொழிகளின் சொற்கள் ஊடுருவி உள்ளன.

இன்று நாம் தமிழ் நாட்டு வர்த்தக நிறுவனப் பெயர்ப் பலகைகளை நோக்குவோமானால் அவை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருந்தாலும், உற்றுநோக்கும்போது எழுத்துகள்தாம் தமிழும் ஆங்கிலமுமாய் இருக்குமே அன்றி அநேக சொற்கள் தமிழில் எழுதப்பட்ட ஆங்கிலச் சொற்கள் என்பதை அவதானிப்போம். தேவையற்று நூற்றுக்கணக்கில் ஆங்கிலச் சொற்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இப்படியான ஒரு சூழலில் மருத்துவர் இராமதாசு போன்றோர் தமிழ் விளம்பரப் பலகைகளுக்காகத் தொடங்கும் போராட்டம் நியாயமானது.

ஈழத்தில் இன்று வெதுப்பகம், உந்துருளி போன்ற பல தமிழ்ச் சொற்கள் உபயோகத்தில் உள்ளதைப் பார்க்க எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றது. அதே வேளை அங்குத் தமிழ் மாதங்களை இழிவுபடுத்துவது போல் ஆங்கில மாதங்களுக்குத் தமிழ் மாதங்களின் பெயரைச் சூட்டுகிறார்கள். எடுத்துக்காட்டிற்கு ஜனவரி மாதத்திற்கு தை என்ற பெயரைக் கொடுத்தால் தைப் பொங்கல் எந்த முதலாம் திகதி பிறப்பதாக அறிவிப்பது? சிந்தனையின் தரமும் சற்று உயர வேண்டும்.

பண்டைய தமிழில் சமயம், கலைகள் தொடர்புடைய சொற்கள் போதியளவு இருந்திருந்தபோதிலும், வடமொழி தேவபாஷை என்ற ஒரு பொய்த் தோற்றத்தைக் காட்டிக் கலைகளுக்குரிய சொற்களும் வழிபாட்டிற்குரிய சொற்களும் தேவபாஷையில் அமைய வேண்டும் என்ற பிரசாரத்தின் மூலம் பல சொற்கள் தமிழுள் புகுத்தப்பட்டுவிட்டன. எங்கள் உடன்பிறப்பு மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது தமிழ் குறைந்த எண்ணிக்கையில் இரவல் வாங்கி இருக்கிறது என்று திருப்திப்படலாம். ஆனாலும், நிச்சயமாகத் தமிழ் பாதிப்புக்கு உள்ளாகித்தான் உள்ளது.

எம் மொழியுடன் இரண்டறக் கலந்த வேற்று மொழிச் சொற்களைத் தேவையற்றுத் தவிர்ப்பது நன்றன்று. அது இலகுவான, மன்னிக்கவும் எளிதான செயல் இல்லை. அந்த அளவுக்குச் சிரமும் எடுக்கத் தேவையில்லை. அதே வேளை நாம் நிராகரித்து உட்புகுத்தும் தமிழ்ச் சொற்கள் எவ்வளவுக்கு எளிதாக உச்சரிக்கக் கூடியவை என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். அஞ்சலி என்பது எளிதான சொல். அதற்குப் பதிலாக நாம் அகவணக்கம் என்ற தமிழ்ச் சொல்லை உபயோகிக்கலாம். அது சற்றுத் தேவை குன்றிய செயல். அதற்கு முன் தேவபாஷையில் இருந்து வேண்டுமென்றே புகுத்தப்பட்ட சொற்கள் எத்தனையோ உண்டு. அவற்றைத்தாம் முதலில் தூக்கி எறிய வேண்டும்.

''எல்லோரும் பிற மொழிச் சொற்களைத் தவிர்க்கவும்'' என்று பேச்சளவில் மட்டும் நின்று விட்டால் அது பெரிய பயனைத் தராது. தமிழ் நாடு அரசு ஒரு தமிழ் அறிஞர் அவையை நியமித்துத் தமிழ் மேம்பாட்டுக்காகச் செயற்பட வேண்டும். ஆங்கில அகராதிகளின் தரத்திற்கு ஒப்ப வேற்றுமொழிச் சொற்கள் இனங்காட்டப்பட்டு அவை எந்த மொழியிலிருந்து வந்தவை என்று கூறும் அகராதிகள் எல்லோரது கைக்கும் கிடைக்க வழி செய்ய வேண்டும். புதிது புதிதாக எத்தனையோ அறிவியற் சொற்கள் வந்த வண்ணமே உள்ளன. தமிழ்க் கலைச் சொற்கள் அடங்கிய வெளியீடுகளோ அரிது. ஆகையால், ஆங்கிலத்தில் உள்ள கலைச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் அடங்கிய வெளியீடுகள் ஒவ்வோர் அறிவியற் பிரிவுக்கும் வெளியிடப்படவேண்டும். அறிஞர் அவையின் விதிகளுக்கமைந்து அவர்களின் ஒப்புதல் பெறும் நூல்களுக்குப் பரிசில்கள்கூட வழங்கலாம். *

# எமது நோக்கு

## வீழ்ச்சியை நோக்கி மகிந்த அரசு

புத்தாண்டும் பொங்கல் திருநாளும் பிறக்க இருக்கும் இக்கால கட்டத்தில் இலங்கை அரசியலையும், தமிழர் விடுதலைப் போராட்டத்தையும் ஆய்வு செய்யும் அரசியல் ஆய்வாளர்கள் வெளியிடும் கருத்துகள் சிந்தனைக்குரியனவாகும்.

மகிந்த இராஜ பக்ஷ்ச ஆட்சிக்கு வந்ததும் 'பயங்கரவாதத்தை ஒழிப்பேன்' என்று கூறிக்கொண்டுத் தமிழர்களின் இனப் படுகொலை யுத்தத்தைக் கடந்த மூன்று ஆண்டுகளாக முன்னெடுத்து வருகின்றார். சிங்களப் பேரினவாத சக்திகளின் வலையில் சிக்குண்டு சிங்களப் பெரும்பான்மையினரின் ஆதரவைத் தக்க வைப்பதற்கு இராணுவ நடவடிக்கை மூலம் மிருகத் தனமாகத் தமிழர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன் உச்சகட்டமாக இப்போது ஒரு திருப்புமுனை ஏற்பட்டு வருகிறது.

கிளிநொச்சியைப் பிடிப்பதற்கான முனைப்பில் இலங்கை இராணுவத்திற்கு ஏற்பட்டுவரும் பாரிய இழப்புகள், இன்று தென்னிலங்கையில் கசியத் தொடங்கிவிட்டன. நாட்டைப் பாதுகாக்க என்று கூறிச் சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்து வன்னி மண்ணில் சவக்கிடங்குகளில் அவர்கள் புதைக்கப்படுவது அம்பலத்திற்கு வந்துவிட்டது. நன்கு பயிற்சிபெற்ற விடுதலைப் புலிகளின் போராட்ட வீரர்களுக்குச் சிங்கள இராணுவம் ஈடுகொடுக்க முடியாமல், அடைந்துள்ள பாரிய இழப்புகளைச் சிங்கள மக்கள் இன்று அறிந்து கொதிப்படைந்துள்ளனர்.

வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கப் படைகளுக்கு ஏற்பட்ட இழப்பால் கொதிப்படைந்த அமெரிக்க மக்கள் கொடுத்த அழுத்தத்தால் அன்று அமெரிக்க அரசாங்கம் தம் படைகளை வியட்நாம் போரிலிருந்து திரும்பப்பெற வேண்டிய நிலை ஏற்பட்டது என்பது வரலாறு.

புதுவருடம் பிறக்கவிருக்கும் இந்நேரத்தில் மகிந்த அரசும் இப்படியான ஒரு நிலைக்கு வந்து கொண்டிருப்பதாக அறியக் கிடக்கிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியும் பெற்றோல் உள்ளிட்ட அனைத்துப் பொருள்களின் விலை உயர்வும் அரசுக்குப் பெரும் தலையிடியையும் தந்து பெரும் வீழ்ச்சியை நோக்கி அரசு விரைகிறது.

இலங்கையில் நடைபெறும் யுத்தம் பயங்கரவாத ஒழிப்பு அல்ல, இன ஒழிப்பு என்பதைச் சர்வதேச சமூகம் நன்கு அறிந்து வருவதனால் இலங்கை அரசுக்கு அழுத்தம் அதிகரித்து வருகிறது.

இன்று தமிழ்நாட்டில் எழுந்துள்ள ஈழ ஆதரவு அரசியல் அலை அங்கு வாழும் 6 கோடித் தமிழர்களையும் எழுச்சியடையச் செய்துள்ளது. இது ஓயாத அலையாக வளர்ச்சி அடைந்து வருகிறது. இந்த அரசியல் அலை மத்திய அரசின் நிலைப்பாட்டில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தும். விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வருகிறார்கள் என்பதை அவர்களது மரபுவழி போராட்டம் உறுதிப்படுத்தி வருகிறது.

கடந்த 30 வருட ஆயுதப் போராட்டம் நிச்சயம் ஒரு நல்முடிவைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கையுடன் அனைத்துத் தமிழர்களும் மனம் தளராது விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கி வருகின்றனர்.

பிறக்க இருக்கும் புத்தாண்டும், பொங்கல் திருநாளும் மகிந்த அரசின் வீழ்ச்சியையும் தமிழர் போராட்டத்தின் வெற்றியையும் அறிவிக்கும் திருநாள்களாக மலரட்டும். *

## இனஎழுச்சிக் கவிஞர் நெல்லை இராமச்சந்திரன் தமிழ்நாடு அரசின் கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றார்



தமிழ் ஆட்சிமொழி பொன் விழாவையொட்டித் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை 'ஆட்சியில் தமிழ்' எனும் தலைப்பில் கவிதைப் போட்டியை நடத்தியது. உலகத் தமிழர் மையத்தின் துணைச் செயலாளர் இனஎழுச்சிக் கவிஞர் நெல்லை இராமச்சந்திரன் இப்போட்டியில் பொது மக்கள் பிரிவில் மாநில அளவில் முதற்பரிசு பெற்றார். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல் பரிசுக்கான காசோலையையும் சான்றிதழையும் வழங்கிப் பாராட்டினார். சுடரொளி வெளியீட்டுக் கழகமும் இனஎழுச்சிக் கவிஞர் நெல்லை இராமச்சந்திரன் அவர்களை வாழ்த்துகிறது.

# OBAMA GETS TAMIL SUPPORT!

A political action committee of American Tamils, announces its political and fundraising support for Democratic candidate Senator Barack Obama.

Tamils are an ethnic group living mainly in the northeast of Sri Lanka and southern India. They are a minority population in Sri Lanka, and are currently engaged in a civil war they regard as genocide. 'Tamils for Obama' is comprised of Tamils who have settled in the U.S., or who were born here.

The Tamils are the victims in the genocidal civil war in Sri Lanka. They hope that they can draw the world's attention to their problem before they are completely crushed. Focusing America's eyes on their plight will be a big step in the right direction, they think, and political activity is one way they hope to get America's notice.

Tamils for Obama hopes Obama's presidency and policy will help bring a stable and permanent devolution of power in Sri Lanka. They dream of a two-state solution, or at least local self-government, in which they and the majority Sinhalese each are able to nurture and protect themselves. Funding is an important part of politics. It allows campaigns and PACs to raise their voices and be heard. By contributing money through the Tamils for Obama website, politically progressive Americans are helping the Obama campaign to raise its voice, and also helping the Tamils to raise theirs. Tamils for Obama is humbly asking all Americans who support the Obama Biden ticket to contribute to the Democratic campaign through their website (http://www. tamilsforObama.com Contribution. html ).

Tamils for Obama gratefully acknowledges the generous support that Americans sent to Sri Lanka in the wake of the 2004 Tsunami (Even though the national government of Sri Lanka with held most of the Tamils' portion of it.) Tamils are also grateful for Americans' contribution to aid and non-governmental organizations that have assisted war victims in Sri Lanka. Here Tamils for Obama is asking for support not for Tamils but for the Obama-Biden campaign. As politically progressive Americans, many would probably give them these donations happily anyway. Tamils for Obama is just asking that the money be sent via our website. To contact the group, email any communication to info(at)TamilsforObama.com or call at (617) 765-4394 and speak to or leave a message for the PR Director, Tamils for Obama. Visit their website at www.TamilsforObama.com

---



**வேலணை கிழக்கு மகா வித்தியாலயம் பழைய மாணவர் ஒன்றியம் நடத்தும்**


**பொற்பதி வேலணையின் பொங்கல் விழாவும்**

**சிறந்த தமிழ் பத்திரிகை விருது பெற்ற தினக்குரல் அதிபருக்கான பாராட்டு விழாவும்**

இடம் : **Bently Wood High School, Bridge Road, Stanmore HA7 3NA**

காலம் : 24-1-2009 சனிக்கிழமை மாலை 4.30 மணி





**நிகழ்ச்சி நிரல் :**

✧ மங்கள விளக்கேற்றம் ✧ வரவேற்புரை ✧ சிறுவர் நிகழ்ச்சிகள் ✧ நாதவிநோதம்
✧ மெல்லிசைப் பாடல்கள் ✧ நடனம் ✧ விருந்தினர் உரை ✧ கௌரவிப்பு நிகழ்ச்சி

பிரதம விருந்தினர் : **திரு. எஸ்.பி. சாமி** அவர்கள் (சமூக சேவையாளர், தினக்குரல் அதிபர்)

**கௌரவ விருந்தினர்கள் :**

திரு. **தயா இடைக்காடர்** (Harrow Councillor)
திரு. **வ.இ. இராமநாதன்**
(பிரித்தானிய சைவமுன்னேற்றச் சங்கம்)
திரு. **என்.எம்.என். அனஸ்**
(தீபம் தொலைக்காட்சி அறிவிப்பாளர்)
திரு. **டாக்டர் தேவசகாயம்**
(ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயம்)
திரு. **கோவிலூர் செல்வராஜா**
(கவிஞர், எழுத்தாளர்)

திரு. **ஐ.தி. சம்பந்தன்** (இலண்டன் சுடரொளி பத்திரிகை ஆசிரியர்)
திருமதி. **சசிகலா சுரேஸ்கிருஷ்ணா**
(Councillor of Harrow)
திரு. **பாலகிருஷ்ணன்**
(வேலணை மகா வித்தியாலய ப.மா. சங்கம், பிரான்ஸ்)
திரு. **பொன். தியாகராஜா**
(சைவ தமிழ்ப்பண்பாட்டுப் பேரவை, டென்மார்க்)
திருமதி. **நவஜோதி யோகரட்னம்**
(ஊடகவியலாளர்)

ஊடக அனுசரணை : **தீபம் டி.வி** நிகழ்ச்சித் தொகுப்பு : **பரா. காந்தன், IBC** அறிவிப்பாளர்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

# ஈழத்து நாடகமேதை வைரமுத்து

- கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை

# வாழ்க்கை வரலாறு (22)

*இந்த மண்ணிலே, மனிதப் படுகொலைகள் மலிந்துவிட்ட இன்றைய காலகட்டத்தில், இயற்கை மரணம் அதிர்ச்சியைத் தர முடியாதாயினும் நடிகமணி அவர்கள் காலமாகிவிட்டார்கள் என்பதைக் கேட்டதும் உள்ளம் நடுங்க அதிர்ந்து போனேன்.*

**- அ. தாசீசியஸ்**

**விண்ணரங்கப் பிரவேசம்**

9-7-1989 ஆம் திகதி காலை இலங்கை வானொலியில் வெளியான செய்தியொன்று கலை உலகைக் கதிகலங்க வைத்தது. ''ஈழத்துத் தலைசிறந்த இசை நாடக மேதை நடிகமணி வைரமுத்து கொழும்பு மருத்துவ மனையொன்றில் மரணமடைந்துவிட்டார்'' என்பதே அச் செய்தியாகும்.

ஐந்தாறு நாள்களுக்கு முன்னர், தானே என்னுடைய வீட்டிற்கு வந்து ''இலங்கை வானொலியில் 'சங்கீத கோவலன்' ஒலிப்பதிவு செய்யப்படவுள்ளது; அதற்காக நான் கொழும்புக்குச் செல்கின்றேன்'' என்று கூறிவிட்டுச் சென்றாரே அவருக்கு என்ன நடந்தது. அவர் சுகதேகியாகத்தானே இருந்தார். எனவே அச் செய்தியால் நாமெல்லோரும் அதிர்ந்து போய்விட்டோம். உடனடியாகக் காங்கேசன் துறைக்கு விரைந்தோம். நூற்றுக்கணக்கான இரசிகர்களும், கலைஞர்களும், உறவினர்களும் சோகமே வடிவமாக அவருடைய இல்லத்தில் நிறைந்திருந்தனர்.

நடிகமணி வைரமுத்து கொழும்பில் தம்முடைய நண்பர், மிருதங்க வித்துவான் தம்பாப்பிள்ளை இரத்தினம் வீட்டில் தங்கியிருக்கும் போது திடீரெனச் சுகயீன முற்றார். அவரை உடனடியாகக் கொழும்பு பெரியாஸ் பத்திரிக்கு எடுத்துச் சென்று அவசர சிகிச்சையளிக்க இரத்தினம் குடும்பத்தினர் உதவி செய்தனர். ஆயினும் காலன் தன்னுடைய கடமையைச் செய்து முடித்து விட்டான்.

*''வாரான் ஒருவன் மானே - அவன்*
*வாவென்று அழைக்கின்றானே''*

என்று ஆயிரக்கணக்கான மேடைகளில் பாடிய வைரமுத்துவை, உண்மையாகவே அந்த எமதருமராஜன் வாவென்றழைத்துச் சென்று விட்டான்.

*''விதியே உனக்கொரு முடிவில்லையா?''*

என்று விதியை நோக்கிக் கேட்ட நடிகமணியை அந்த விதிவென்றுவிட்டது. ஈழத்து மூலைமுடுக்குகள் எல்லாம் தேமதுரத் தமிழால் கானமிசைத்த அந்தக் கலைமாமணி, கலைஞர்களையும், சுவைஞர்களையும் கண் கலங்க விட்டுச் சென்றுவிட்டார்.

*''யார் போய்ச் சொல்லுவார்*
*இந்த ஏழை - வருந்தும் வேளை*
*அரனிடத்தில் யார் போய்ச் சொல்லுவார்''*

என்று மேடை தோறும் பாடி எங்கள் கண்களில் நீரைச் சொரிய வைத்த, அந்த நிகரிலாக் கலைஞனின் பிரிவை எண்ணித் துயருறும் இந்த வேளை, எங்கள் துயரை அரனிடத்தில் யார் போய்ச் சொல்லுவார்.

*''பிறந்தது மண்மேல் இறப்பதற் கென்றே*
*பேசிடும் நூல்''*

என்று மேடைகள் தோறும் முழங்கிய வைரமுத்துவின் வார்த்தையை நாமும் சொல்லி அமைதியடைய முடியுமா? அந்த அற்புதமான நடிகனை, அதியற்புதமான பாடகனை இழந்து விட்டோம் என்று எண்ணும்போது இதயம் கலங்குகின்றது.

*''குஞ்சித பாதத்தைத் தாரும் - மனச்*
*சஞ்சல பாவத்தைத் தீரும்''*

*''செஞ்சிலம்பசையக் கனகசபைதனில்*
*ஜெனுதத்தக ஜெனுதத்திமி திமிதத் தோமென்றாடிய*
*குஞ்சிதபாதத்தைத் தாரும்''*

என்று 'நந்தனார்' வேடத்தில் நின்று வைரமுத்து கேட்டாரே, அதனை அந்த ஆனந்தக்கூத்தன் நிறைவேற்றிவிட்டானே!

*''தாதெய்யென்றாடுவார் - அவர்*
*தத்தித்தெய்யென்றாடுவார்''*

என்று மேடையில் பாடியாட வைரமுத்து இல்லையே என்பதை எண்ணும்போது ஐயகோ! உள்ளம் நடுங்குகிறதே.

அரிச்சந்திரனாகத் தோன்றி ஆயிரக்கணக்கான இரசிகர்களைக் கவர்ந்த ஐயா! நீ பொய்யாய்ப் பழங் கதையாய்ப் போய்விட்டாயா?

*''நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை யுடைத்திவ் வுலகு''*

எனும் வள்ளுவன் வாக்கை நிரூபித்துச் சென்று விட்டாயே! ஆனால்,

***''பொன்றுதல் ஒருகாலத்தும் தவீருமோ! பொதுமைத்தன்றோ***
***இன்றுளர் நாளை மாள்வர் புகழுக்கும் இறுதியுண்டோ?''***

எனக் கூறும் கம்பன் வாக்குக்கு அமைய வைரமுத்து பூதவுடலை விட்டுப் புகழுடம்பை எய்திவிட்டார்.

கொழும்பில் வைரமுத்துவுடைய மரணச் செய்தி மின்னல் வேகத்தில் பரவியது. அங்கேயுள்ள கலைஞர்கள், இரசிகர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் ஒன்று கூடி அந்த மாபெரும் கலைஞனுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

இவர் மரணமடைந்த அந்தக் காலகட்டத்தில் கொழும்பில் பிரச்சினைகளும் குழப்பங்களும் மலிந்து காணப்பட்டன. போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது. சொந்த வாகனங்கள் வைத்திருந்தவர்களைத் தவிர மற்றையோரனைவரும் நடந்து சென்றே தங்களுடைய காரியங்களைச் செய்தனர். ஆயினும் வைரமுத்துவின் மரணச் செய்தி கேட்ட பலரும் அங்கே வந்து குவிந்தனர்.

இலங்கை வானொலியும், ரூபவாஹினி கூட்டுத்தாபனமும் விமானம் மூலம் இவருடைய புனித உடலை யாழ்ப்பாணம் அனுப்புவதற்குரிய முயற்சியில் ஈடுபட்டன. ஆனால் அதற்கு இரண்டொரு நாள்கள் தாமதம் ஏற்படும் என அறிந்த சிறிலங்கா தொழிற்சாலை **(Sree Lanka Industries)** அதிபர் நா.த. துரைராசா தன்னுடைய சொந்த வாகனத்திலே வைரமுத்துவின் புனித உடலை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார்.

11-07-1989 ஆம் திகதி அமரர் வைரமுத்துவின் புனித உடலைத் தாங்கிய பேழை ஆயிரக்கணக்கான இரசிகர்கள் ஊர்வலமாக வர எடுத்துச் செல்லப்பட்டுக் காங்கேசன் துறை மயானத்தில் அக்கினி பகவானுக்கு ஆகுதியாக்கப்பட்டது. தகனத்துக்கு எடுத்துச் செல்வதற்கு முன் அவருடைய இல்லத்தில், இந்நூலாசிரியரின் தலைமையில் இடம் பெற்ற இரங்கல் உரை நிகழ்ச்சியின்போது பேராசிரியர் கா. சிவத்தம்பி உட்பட பல அறிஞர்களும், கலைஞர்களும் இரங்கலுரை நிகழ்த்தினர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி பேசும்போது ''வைரமுத்து எனும் இந்தக் கலைஞனுக்குள்ளிருந்த மனிதன் மிக அற்புதமானவன். நுண்ணிய உணர்வினன், பொறாமையற்றவன், மற்றவர்களின் திறமை வெளிப்பாட்டிலேதான் தன் பூரணத்துவத்தைக் கண்டவன். தமிழின் தலைசிறந்த நடிகர்களுள் ஒருவனின் மறைவோடு ஓர் அற்புதமான மனிதனையும் இழந்து நிற்கின்றோம். இந்த மரணங்கள் மனிதனைப் பலவீனப்படுத்துகின்றன'' எனக் கூறி வருந்தினார்.

''இசைநாடக அரங்கின் மூலப்பண்பு எந்தவகையிலும் மாறுபடாதவாறு, அதனை மேலும் செழுமையுறச் செய்வதற்கு வேண்டிய மாற்றங்களைக் காலத்தை அறிந்து அனுசரித்துச் செய்து வந்தார் வைரமுத்து. அதனால் அவருடைய அரங்கு இருபதாம் நூற்றாண்டின் கடைசிக் கூறு வரை வீரியத்தோடு வாழும் வலுவைப் பெற்றது'' எனக் கூறித் தனது இரங்கலுரையை நிறைவு செய்தார் குழந்தை ம. சண்முகலிங்கம்.

திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) வைரமுத்துவின் பண்பியல்புகளை விதந்து கூறினார்.

''இந்த உயர்ந்த கலைஞரிடம் சிறிதும் தற்பெருமை இருக்கவில்லை. கொஞ்சம் உயரத் தொடங்கியவுடனேயே 'மற்றவர்களுக்கு என்ன தெரியும்' என்று பீற்றித் திரியும் பலர் வாழும் இவ்வுலகில் கொஞ்சமும் இறுமாப்பில்லாது வைரமுத்து வாழ்ந்தார். அவருடைய எளிமை, பொறுமை, எவரையும் போற்றி மதிக்கும் பண்பு என்பனவே அவரைப் புகழின் உச்சிக்கு இட்டுச் சென்றதெனலாம்''.

கலாநிதி சி. மௌனகுரு பேசும்போது: ''இவ்விசை நாடக மரபை வளர்த்தெடுத்த ஈழத்தவர் பலர். இவர்களுள் பேரும் புகழும் பெற்றவராக தமது மயான காண்டத்தை 3000 தடவைகளுக்கு மேல் நடத்தியவராக நடிகமணி தனித்து ஒளி வீசுகினறார். இசை நாடகத்தை ஈழத்தின் தமிழ்-வாழ் பிரதேசங்களிலும், தமிழ் மொழியறியாத சிங்கள மக்கள் மத்தியிலும் கொண்டு சென்றார். இதன்மூலம் தமிழர் மத்தியிலும் சிறந்த ஒரு நாடக மரபு உண்டென்பதை அவர் குறிப்பாகத் தமிழர் அல்லாத பலருக்கும் உணர்த்தினார்'' என்று புகழ்ந்துரைத்தார்.

நடிகமணியின் மறைவையொட்டி இலங்கை வானொலி, ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியன அவருடைய நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்தும், ஒளிபரப்புச் செய்தும் மறைந்த கலைஞனைக் கௌரவித்தன. 'வீரகேசரி', 'தினகரன்' 'முரசொலி' ஆகிய பத்திரிகைகள் அவரைப் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டுக் கௌரவித்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழநாடு', 'உதயன்' ஆகிய பத்திரிகைகளும் 'மல்லிகை' மாத இதழும் ஆசிரிய தலையங்கம் தீட்டி இக்கலைஞனைப் பெருமைப்படுத்தின. இவருடைய 31ஆம் நாள் நினைவு தினத்தன்று 'நாடகதீபம்' எனும் தொகுப்பு நூலும் வெளியிடப்பட்டது. இந்நூலைத் தொகுத்து வெளியிட்டவர் இந்நூலாசிரியரேயாவர்.

பத்திரிகைகள் தீட்டிய ஆசிரிய தலையங்கங்களிலிருந்து எடுக்கப்பட்ட முக்கியமான சில பகுதிகள் வருமாறு:

''கலைஞர் வைரமுத்து தமது வெற்றிக்கு ஒப்பனையை நம்பியிருக்கவில்லை; மேடைக்காட்சிச் சோடனைகளையோ படுதாக்களையோ நம்பியிருக்கவில்லை; புதுவகை இசைக் கருவிகளான டமாரங்களையோ, டப்பாக்களையோ நம்பியிருக்கவில்லை. வர்ணஜால ஒளி மயக்குகளை நம்பியிருக்கவில்லை''.

''இரவற் குரலோடு இன்று சினிமாவிற் பலர் கொடிகட்டிப் பறக்கிறார்கள். ஆனால் நடிகமணியின் குரல்வளம் கேட்கவும் வேண்டுமா?'' ''யாரடி கள்ளி நீதான்'' இந்தப் பாடல் யாரைத்தான் உருக்கவில்லை. யாரிடம்தான் கண்ணீரை வரவழைக்கவில்லை? பொருளுணர்ந்து இசைப்பதற்கு இனி யார்தாம் வருவார்கள்?

*ஈழ நாடு 11-7-89*

''ஈழத் தமிழ்க் கலை உலகின் பிரகாசம் மிக்க பெரும் நட்சத்திரம் ஒன்று மறைந்துவிட்டது. மிகக் குறிப்பாக ஈழத் தமிழ் நாடகத் துறையில் ஒளிர்ந்த ஒப்பற்ற தாரகை ஒன்று இழக்கப்பட்டுவிட்டது. 'மயான காண்டம்' புகழ் நடிகமணி வி.வி. வைரமுத்துவின் இழப்பைக் கலாரசிகர்கள், கலைஞர்கள், கலாபிமானிகள் சார்பில் கவலையுடன் இங்குப் பகிர்ந்து கொள்கிறோம்''.

*உதயன் 11-7-89*

''இதுவரையும் வாழ்ந்து, இயங்கி, இயக்க வைத்து ஒரு தனிக்கலைப் பாரம்பரியத்தை இடைவிடாது கட்டிப் பாதுகாத்து வந்த உயிருடன் திகழ்ந்த நடிகமணியைவிட, மறைந்துவிட்ட நடிகமணி எதிர் காலத்தில் அதிக சக்திவாய்ந்த கலைப் போராளியாகத் திகழுவார் என்பது திண்ணம்.''

''வாழும்போது அலட்சியம் செய்த, கலைக்காகப் போராடியபோது கண்டுகொள்ளாமல் விட்ட உயர்கல்விப் பீடங்கள், பல்கலைக் கழகங்கள், கலாசார நிகழ்வுகள், கலை இலக்கிய மன்றங்கள் அவரது ஆளுமையின் சக்தியையும் வீச்சையும் புரிந்துகொண்டு தக்க மரியாதையையும் கௌரவத்தையும் நல்கத்தான் போகின்றன என உறுதியாகச் சொல்லுகின்றோம்''.

*மல்லிகை சூலை 1989*

மாம்பிராய் ஞானவரவர் அறங்காவலர் அவையகமும் மாம்பிராய் கிராம மக்களும் வெளியிட்ட அஞ்சலிப் பாமாலையிலிருந்து:

*''விண்ணிடிந்து வீழ்ந்ததுவோ?*
*விரிமதியம் சாய்ந்ததுவோ?*
*பண்ணிசைக்கும் யாழ்நரம்பு*
*பட்டென் றறுந்ததுவோ?*
*மண்ணிடையே ஓடுகின்ற*
*மாநதியும் நின்றதுவோ?*
*என்னவென்று யாமுரைப்போம்*
*எழில்வைர முத்திழந்தோம்.''*

வைரமுத்துவால் வளர்க்கப்பட்ட கலைஞனும், இரணியன் நாடகத்தில் வைரமுத்துவுடன் பிரகலாதனாக நடித்தவருமான பொன் கணேசமூர்த்தியின் இரங்கற் பாமாலையிலிருந்து:

*''மரணத்தை வென்றாய் - எங்கள்*
*மனங்களை வென்றாய்; - இந்த*
*மண்ணுக்குக் கலைநீர் வார்த்து*
*விண்ணுக்கு விருந்தாய்ப் போனாய்.''*

வைரமுத்துவின் இனிய நண்பர், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை யாத்த இரங்கற் பாமாலையிலிருந்து:

*''ஐய! நீ ஏற்றிய தீபங்கள் அணையுமோ?*
*ஒப்பிலா உன்புகழ் உலகினில் மறையுமோ?*
*........................*
*நீயோர் அற்புதக் கலைச் சுரங்கம்*
*நம்மவர் புகழ் விளக்கும் நந்தாவிளக்கு.''*

மேலும் பலர் தமது அனுதாபங்களைத் தெரிவித்தும், வைரமுத்துவின் ஆற்றல்களைப் புகழ்ந்தும், கடிதங்களும் கட்டுரைகளும் எழுதினர்.

அவர்களுக்கு நன்றி கூற நாம் கடமைப்பட்டுள்ளோம். எனினும் விரிவஞ்சி அவை முழுவதையும் இங்கே தரமுடியவில்லை.

வைரமுத்துவின் நண்பர்களும் கலைஞர்களும் இரசிகர்களும் அவருடைய நினைவாகப் பல இடங்களில் இரங்கற் கூட்டங்களையும் இரங்கற் பேருரைகளையும் நிகழ்த்தி வருகின்றனர். அந்த வகையிலே 1993 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகக் கைலாச பதியரங்கில் வசந்தகான சபை எடுத்த ''நடிகமணி நினைவஞ்சலி'' விழா மிகவும் முக்கியமானது.

இந்நூலாசிரியரின் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் வைரமுத்துவுடன் கூட நடித்த மூத்த கலைஞர்களாகிய எமன் வி. மார்க்கண்டு, நாடக திலகம் வி.கே. நற்குணம் ஆகியோர் பேராசிரியர் கா. சிவத்தம்பியினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். நடிகமணியின் வளர்ப்புத் தந்தையார் ஆசிரிய திலகம் க. முருகேசனாரும், வைரமுத்துவின் மனைவி இரத்தினம் அம்மையாரும் இவ்விழாவை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தமை முக்கியமான இன்னோர் அம்சமாகும்.

சுருக்கமாகக் கூறுவதானால்;

*''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்''*

என்பதற்கிணங்க வைரமுத்து வாழ்வாங்கு வாழ்ந்தார்; வானுறையும் தெய்வத்துள் மட்டுமன்றி ஆயிரக்கணக்கான இரசிக நெஞ்சங்களின் உள்ளங்களிலும் வைத்துப் போற்றப்படுகின்றார். *

*அடுத்த தொடருடன் நிறைவு பெறும்.*

**மலேசிய எழுத்தாளர்**
**பி. கோவிந்தசாமியின்**
## 'உள்ளே வாருங்கள்'
**நூல் வெளியீட்டு விழா**

மலேசிய எழுத்தாளர் பி. கோவிந்தசாமி அவர்களின் ''உள்ளே வாருங்கள்'' என்ற நூல் வெளியீடு காண இருக்கிறது. கிள்ளான் மாவட்ட வாசகர் இயக்கமும், மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும், வைகறை தயாரிப்பு நிறுவனமும் இணைந்து வரும் 11-1-2009 அன்று கிள்ளான் ஸ்ரீ சுந்தர ராஜ பெருமாள் ஆலய மண்டபத்தில் ஓம்ஸ் ப. தியாகராஜன் தலைமையில் நூலை வெளியிட இருக்கிறார்கள். முதல் நூலை ந. சூரியகுமார் பெற்று கொள்வார். ஆகவே இலக்கிய ஆர்வலர்கள் வருகை தந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

# அமரர் எஸ். கணபதி அவர்களின் தமிழ், சமயப் பணிகளை நினைவுகூருவோம்

ஆ. சுந்தரலிங்கம், ஓய்வுபெற்ற விரிவுரையாளர்.

'**ச**மூகப் பணி எனது மூச்சு, தமிழ்ப் பணி எனது துடிப்பு, சமயப் பணி எனது மனநிறைவு' என்று அடிக் கடி கூறுவார் திரு. கணபதி அவர்கள். எளிமையான வாழ்வு, உயரிய சிந்தனை ஆகியவற்றுடன் நல்வாழ்வு வாழ்ந்து காட்டியவர். மக்கள் மேம்பாட்டுக்காக இரவு பகலாக உழைத்த மேதை. இவர் மக்களுக்கு ஆற்றிய சேவையைப் பெரிதும் பாராட்டி ஓர் தமிழ் மகனுக்குப் பிரித்தானிய அரசு 'நகரத் தந்தை விருதினை' இவருக்கு வழங்கிக் கௌரவித்ததை நாம் என்றும் மறக்க முடியாது. இவரால் தமிழ் இனமே பெருமையடைந்தது.

இவர் தமிழ்நாட்டிலுள்ள கோவில் கோட்டை என்னும் கிராமத்தில் 1934 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தந்தையார் பெயர் சுந்தரம். தாயார் பெயர் மெய் யாத்தாள். இவர் இளமையில் படிக்கும் காலத்தே தமிழ் மொழிப் பற்றும், சமயப் பற்றும் மிகுந்தவராகக் காணப் பட்டார். தமிழ் நூல்களை ஆய்ந்து கற்கும் ஆற்றலும் பஞ்சசீலப் பண்புகளான சத்தியம், தருமம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகியன இவரிடம் நிறைந்து காணப்பட்டன. இதன் பயனாய்த்தான் சீலம் பேணிய உள்ளத்தைத் தெய்வம் தேடிவந்து குடிகொண்டது போலும். முறையான கல்வியை நிறைவாகக் கற்று 1955 ஆம் ஆண்டு சிங்கப்பூர் சென்று 21 ஆண்டு களாகப் பணியாற்றி வந்தார். சிங்கப்பூரில் எல்லா மக்களாலும் நன்கு மதிக்கப்பட்டார்.

1976 ஆம் ஆண்டில் இலண்டனுக்குப் புலம் பெயர்ந்த மக்களுடன் வந்தார். இலண்டனில் வாழ்ந்த தமிழ் மக்களுடன் தமிழ்ப் பணியையும் சமயப் பணியையும் வளர்க்க உழைத்தார். இலண்டன் தமிழ்ச் சங்கத்தில் ஒரு பிரதான இடத்தைப் பெற்று, அதனை மேம்படுத்தும் பணிகளிலும் ஈடுபட்டார். இலண்டன் வாழ் தமிழ் மக்களின் குழந்தைகளுக்குத் தமிழ்மொழி, கலை, கலாசாரப் பண்புகளை வளர்க்கும் நோக்கில் ஒரு தமிழ்ப்பள்ளி ஆரம்பித்து, தானே முன்னின்று முதன் மைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். தமிழ்ச் சங்கத்தில் ஒரு சிறந்த 'தமிழ் நூலகம்' அமைக்கும் பணி யிலும் முன்னின்று அயராது உழைத்தார். வெற்றியும் கண்டார். முதியோருக்காகத் தொண்டாற்றும் வகையில் 'ஒரு முதியோர் நலம்புரி சங்கம்' அமைத்து அவர் களோடு தாமும் பணியாற்றி நின்றார். காலத்துக்குக் காலம் தமிழ் நாட்டிலிருந்து வருகை தரும் தமிழ் அறிஞர்களையும் சமயப் பெரியார்களையும் தமிழ்ச் சங்கத்தில் அழைத்து, அவர்கள் அறிவை எமது மக்கள் பெற்றுப் பயனடைய பலவகையிலும் முன்வந்து உழைத்தார். இவர் ஒரு சிறந்த பேச்சாளர். இவர் வாய்திறந்து பேசும்போது தமிழ் ஊற்றெடுத்து இனிமை சொட்டும். உள்ளத்தின் வெளிப்பாடே சொற்பெருக் கல்லவா? நல்ல கல்வி ஞானம் பெற்றதன் பயனாய் அவர் கூறும் வார்த்தைகளில் சொற்சுவை,பொருட்சுவை மலிந்து காணப்பட்டன. இவர் ஒரு 'நடமாடும் வாசக சாலை'யாய் மக்களிடையே வாழ்ந்தார். மக்களுக்கு நல்லறிவைப் புகட்டினார்.

திரு. கணபதி அவர்கள் தெய்வ வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கையுடையவர். தெய்வத்தை வழிபட் டால் நமக்கு ஒரு தீங்கும் வரமாட்டாது, நன்மையே கிடைக்கும் என்ற மன எழுச்சியுடன் செயற்படுவார். இலண்டனில் உள்ள எல்லா ஆலயங்களையும் அர வணைத்துத் தொண்டாற்றியவர். இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்திற்கும் ஒரு நல்ல ஆலோசகராகச் செயற்பட்டதுடன் அதன் பணிகளிலும் ஈடுபாடுக் கொண்டிருந்தார். சமய நூல்களை முறையாகக் கற்ற றிந்தவர் என்ற திடப்பாட்டுடன் தமது வாழ்வை சமயத் தொண்டுக்காய் அர்ப்பணித்துச் செயற்பட்டார். பல வகையிலும் வெற்றி கண்டார். இந்து முறைப்படி நல்ல டக்கச் சடங்குகளைத் தமிழில் செய்து, தமிழ் மக்களின் பாராட்டையும், நன்மதிப்பையும் பெற்று நின்றார்.

பிரசித்தி பெற்ற இலண்டன் 'திருமுருகன்' ஆல யத்தின் நிர்மாண வேலைகளில் பிரதான பங்கேற்று, அது சிறப்பாக நடந்தேற உதவியாக இருந்தார். அதன் அறங்காவலராகவும் பணியாற்றி வந்தார்.

அமரர் கணபதி அவர்கள் தாம் பிறந்த தமிழ் நாட்டுக் கிராமத்தை மறக்கவில்லை. அக்கிராமத்திற்கு மிகத் தேவையாக இருந்த மண்டபத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றி வைத்தார். நிறைந்த மண்டபத்தினைக் கட்டி முடித்தார். தாமே நேரில் சென்று அதனை வைபவ ரீதியாய்த் திறந்து வைத்தார். அது நன்றாக இயங்க 'மக்கள் கமிட்டியிடம்' ஒப்படை செய்துள்ளார். இவரு டைய அரும்பெரும் சேவைக்கு இஃது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

திரு. கணபதி அவர்கள் இருதயநோய் காரண மாய்ச் சில வாரங்கள் வைத்திய சாலையில் தங்கியிருந் தார். வைத்திய சிகிச்சைகள் பலனளிக்கவில்லை. 16-10-08 இல் அவருடைய ஆத்மா இறைபதம் சென்ற டைந்தது. மக்கள் சேவைக்காய் உழைத்த ஓர் உத்தமரின் உயிர் பிரிந்து சென்றாலும் அவர் ஆற்றிய சமய, சமூகப் பணிகள் என்றும் மக்கள் மனத்தில் நிலைத்துவிட்டன. கணபதி அவர்களுக்கு நான்கு மகன்களும் ஒரு மகளும் இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் நற்கல்வி கொடுத்து, சீரும் சிறப்புடனும் வாழவைத்ததன் பயனாய் 11 பேரப் பிள்ளைகளைக் கண்ட பெருமை அன்னாருக் குண்டு. அவருடைய அன்புத் துணைவியார், மக்கள் குடும்பம் அனைவருக்கும் எங்கள் உளம் நெகிழ்ந்த அனுதாபங்களைக் கூறி நிற்கின்றோம்.

'பிறப்பும் இறப்பும் இம்மாநிலத்தின் இயல்பன்றோ!'

*

## இலங்கைப் பிரச்சினைக்காக

# உயிர் துறக்கத் தயார் = கலைஞர் கருணாநிதி

இலங்கைப் பிரச்சினைக்காகத் தனது உயிரைத் துறக்கவும் தயாராக இருப்பதாகத் தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி கூறினார்.

இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க வலியுறுத்திச் சட்டப் பேரவை உறுப்பினர் பதவியைத் துறந்தேன். இப் பிரச்சினைக்காக உயிரை விடவும் தயாராக இருக்கிறேன் என்று முதல்வர் கருணாநிதி உருக்கமாகப் பேசினார்.

திமுக பொதுக்குழுக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் 27-12-08 அன்று நடைபெற்றது. கட்சியின் தலைவராக 10ஆவது முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார் கருணாநிதி. இதைத் தொடர்ந்து, பொதுக் குழுவுக்கு நன்றி தெரிவித்து அவர் பேசியதாவது:

பொதுக்குழு தீர்மானத்தில் இலங்கைப் பிரச்சினை குறித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க குறுக்கு வழியில், வன்முறை வழியில் நாட்டுக்கு விரோதமான வழியில் செல்ல விரும்பவில்லை.

### ஏற்றுக் கொள்ளும் முடிவாக...

இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு எடுக்கும் முடிவு. நாம் ஏற்றுக் கொள்ளும் முடிவாக இருக்க வேண்டும். நாம் விரும்புகின்ற அவசரத்துக்கு வேகமாக முடிவெடுக்காமல் இன்னும் தாமதிக்கின்றனர். தாமதிக்கும் ஒவ்வொரு மணி நேரத்திலும், இலங்கையில் ஒவ்வொரு தமிழனின் பிணம் விழுந்து கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது.

இலங்கைப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் தில்லி சென்றபோது, வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று முறையிட்டோம். விரைவில் அவர் இலங்கை செல்வார் என அறிவித்தார்கள். அவர்கள் அதைச் செய்வார்கள் என்று காத்திருக்கிறோம்; நம்பி இருக்கிறோம்.

பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி, அங்குப் போர் நிறுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு மதிப்பளித்து இதைச் செய்து கொடுக்க வேண்டும்.

### மிரட்ட விரும்பவில்லை...

இலங்கைத் தமிழர்களுக்காக இங்குள்ள தமிழர்கள் கதறி அழுது கொண்டிருக்கிறோம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கோரி, குறுக்கு வழியில் மிரட்ட விரும்பவில்லை. இலங்கைப் பிரச்சினையில் திமுகவின் நிலையை, தமிழக அரசின் நிலையை ஏற்கெனவே விளக்கி இருக்கிறேன்.

முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி மரணத்துக்கு முன்பு ஒரு பகுதியாக, அவரது மரணத்துக்குப் பின்பு ஒரு பகுதியாக என இரண்டு பகுதிகளாக இப்பிரச்சினையைப் பார்க்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை, இங்குள்ள தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல; வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் மனத்திலும் ஆறாத ரணமாக உள்ளது. அந்த ரணத்தை ஆற்ற அதற்கு மருந்து போட மத்திய அரசு முன்வர வேண்டும்.

### குடுகுடுப்பைப் பேச்சு...

நம்முடைய குரலைத் திசை திருப்ப, புலிகளுக்கு ஆதரவு என்று சிலர் வக்கிரமான அறிக்கைகளை வெளியிடுகிறார்கள், அவர்களைப் புறந்தள்ள வேண்டும். தமிழ் உணர்வோடு விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு இடம் தந்து அங்கு அமைதியை உருவாக்க வேண்டும்.

இலங்கைப் பிரச்சினை குறித்துப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கண்கலங்க வைத்துள்ளது. இந்தத் தீர்மானத்தை ஏற்று மத்திய அரசு நிறைவேற்றித் தர வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கைப் பிரச்சினை குறித்துச் சிலர் ஆவேசமாகப் பேசுகின்றனர். அந்தக் குடுகுடுப்பைப் பேச்சு, முரசாகாது; பேரிகையாகாது. இந்தக் குடுகுடுப்பைப் பேச்சுக்கு மயங்காமல் இலங்கைத் தமிழர்கள் வாழத் தக்க வழி காண்போம்.

அதுவரை அமைதியாக இருப்பதற்கு வழி இல்லாவிட்டாலும் கூட, எப்படி நம்முடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வது, எப்படி அவர்களுடைய கண்களைத் திறப்பது, அவர்களுடைய காதுகளில் நம்முடைய கருணை மனுவை, அதனுடைய வாசகங்களைத் திணிப்பது என்பதற்காகப் பாடுபடுவோம். பணியாற்றுவோம்.

### உயிரையும் துறப்போம்...

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக, நானும் (கருணாநிதி), பேராசிரியர் அன்பழகனும் சட்டப் பேரவை உறுப்பினர் பதவிகளைத் துறந்தோம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க எதையும் துறப்போம். இலங்கைத் தமிழர்கள் வாழ உயிரைத் துறக்கவும் தயார். இதற்குப் பிறகாவது நம் தமிழர்களைக் காக்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்றார் கருணாநிதி. *

# அரசப் பணியிலிருந்து ஆத்மிகப் பணிக்குப் பொன் வல்லிபுரம் அவர்கள்

*(சமய, சமூகத் தமிழ்த் தொண்டன் திரு. பொன் வல்லிபுரம் கே.பி. அவர்களின் அகவை 80 நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது. )*

**வீ**ர வரலாறு படைத்துவரும் வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பொன் வல்லிபுரம் அவர்கள் இலங்கை சுங்க இலாகாவில் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர். அரசு சேவையில் பணியாற்றிய காலத்தில் சமய சமூகப் பணிகளில் ஈடு பட்டு மக்களின் நற்பெயரைச் சம்பாதித்துக் கொண்டவர்.

அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்து வரும் கலைஞர்களை, சுங்க அதிகாரிகளின் பரிசோதனைகளை இலகுவாக்கித் துரிதமாக அக்கலைஞர்கள் வந்துபோக உதவியாக இருந்தவர். அதனால் பல கலைஞர்கள் இவர் மீது அபிமானம் கொண்டிருந்தனர். திரு. பொன் வல்லிபுரம் சுங்கத் திணைக்களத்தில் பணியாற்றிய காலத்தில் கட்டுரையாளர்களும் துறைமுக அதிகார சபையில் பணியாற்றியதனால் இவருடைய நெருக்க மான உறவு ஏற்பட்டது. 1978 ஆம் ஆண்டு தொடக்கம் அரசு திணைக் களங்களில் சரஸ்வதி பூசை கொண்டா டும் நிகழ்வுகள் இடம் பெற்றன.

சுங்கத் திணைக்களத்தில் இந்து சங்கத்தை உரு வாக்கி சரசுவதி பூசை விழாக்களைச் சிறப்பாக நடத்திட முன்னின்று உழைத்தவர்.

அரசு துறையில் பணியாற்றிய காலத்தில் சமய, தமிழ் உணர்வு மிகுந்தவராக விளங்கினார். அந்த வகையில் இன்று மிகப்பெரிய மயூராபதி அம்மன் ஆலயத்தை ஒரு பிரசித்தி பெற்ற ஆலயமாக ஆக்கியுள் ளார். இன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் வழிபடும் அருள்மிகு அம்பாள் ஆலயமாக விளங்குகிறது.

தெய்வீகச் சிந்தனையும் மனித நேயமும் கொண்ட இவர் இறைபணிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வருகின்றார். 1983 இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு ருத்திரா மாவத்தையிலுள்ள தன சிவ லத்தை விற்று, கொழும்பில் வாழ்வதில் வெறுப் படைந்திருந்த இவரை மயூராபதி அருள் அம்பாள் இவரை மீண்டும் கொழும்பில் வாழவும், தெய்விகப் பணியில் தீவிரமாகவும் ஈடுபட அருள்பாலித்துள்ளார்.

அம்பாளின் கடாட்சத்தினால், கொழும்பு மயூரா பதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் தேவஸ்தான அறங்காவ லராகக் கடந்த 21 ஆண்டுகளாகத் தெய்வீகப் பணியில் ஈடுபட்டு வருகின்றார். இவர் இவ்வாலயத்தைப் பொறுப்பேற்றபோது மிகச் சிறு ஆலயமாக இருந்தது. திரு. வல்லிபுரம் அவர்கள் காலத்தில் பல்வேறு திருப் பணிகள் நடைபெற்று ஒரு பிரசித்தி பெற்ற திருத்தல மாக விளங்குகிறது.

பல சமூகத்தவர்கள் வாழும் இப்பகுதியில் பல எதிர்ப்புகளையும் தடைகளையும் எதிர்கொண்டு அவ் விடத்தில் ஓர் ஆலயத்தை நடத்தி வருவது அம்பாளின் திருவருட் கடாட்சமே. ஆலயப் பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து அதன் வளர்ச்சிக்காகத் தீவிரமாக உழைத்து வருகின்றார்.

மயூராபதி அம்மன் ஆலயம் சிறிய இடத்தில் அமைந்திருந்தாலும் எல்லா இனத்தவர்களும் வந்து வழிபடும் நிலையமாக அதனை ஆக்கிய பெருமை திரு. வல்லி புரம் அவர்களுக்கே உரியது. தாம் நினைக்கும் திருப் பணிகளை நிறைவு செய்ய பல பக்தர்கள் தாமாகவே முன்வருவதைப் பெருமையுடன் என்னிடம் கூறினார். அம்மன் ஆலயத்துடன், திருமண மண்டபம், கலைக் கோயில், அறநெறிப் பாடசாலை ஆகியன சிறப்புடன் அமைந்துள்ளன. திருமண நிகழ்வுகளோடு, கலை, கலாச்சார நிகழ்வுகளும் திருமண மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றன.

மாணவர்களுக்குச் சமய அறிவை வளர்ப்பதற்கு அறநெறிப் பாடசாலையை மிகத் திறம்பட நடத்தி வரு கின்றார். மாணவர்களுக்கான உடை, அடையாளச் சின்னம் ஆலய நிருவாகத்தால் வழங்கப்பட்டுவருகிறது.

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பா பிஷேகத்தையொட்டி வெளியிடப்பட்ட ''மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானக் கும்பாபிடேக மலர்'' ஒரு வரலாற்று ஏடாகும்.

ஆலயத்தின் வரலாறு, மகிமை மட்டுமன்றி ஈழத்து அம்மன் ஆலயங்களின் வரலாறுகளும் இதில் இடம் பெற்றுள்ளன. அறங்காவலர் திரு. பொன் வல்லிபுரம் அவர்களின் சாதனைகளும் பதியப்பட்டுள் ளன. அம்மன் ஆலயங்கள் பற்றி ஆய்வு செய்வோருக்கு இம்மலர் ஒரு வழிகாட்டி நூலாக அமைகிறது.

திரு. வல்லிபுரம் அவர்களின் சிந்தனையில் உரு வான பாற்காவடி இன்று ஒரு முக்கிய நிகழ்வாக நடை பெற்று வருகிறது.

1988ம் ஆண்டு 125 பேருடன் ஆரம்பிக்கப் பட்ட பாற்காவடி இன்று 3000க்கு மேற்பட்டவர்கள்

பங்கு கொள்ளும் பக்திப் பரவச நிகழ்வாகக் கொழும்பில் நடைபெற்று வருகிறது.

அன்னையின் அருட்பார்வை சாதி, இன, மத பேதங்களைக் கடந்து அனைத்து மக்களும் வந்து வழிபடும் திருத்தலமாக நிருவகித்துவரும் பெருமை திரு. வல்லிபுரம் அவர்களுக்கே உரியது.

அவரிடம் எதைக் கேட்டாலும் ''எல்லாம் அம்பாள் அருளால் நடக்கிறது'' என்பார்.

2ஆவது உலக இந்து மாநாடு வெற்றி கரமாக நடைபெற இந்துசமய விவகார அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்களுக்குப் பக்கபலமாக விளங்கியவர் திரு. வல்லிபுரம் அவர்கள். தன்னலம் கருதாச் சமய, சமூகத் தொண்டராக விளங்கும் திரு. பொன் வல்லிபுரம் அவர்கள் அகவை எண்பதை எய்திய நிலையிலும் செயலூக்கம் நிறைந்த ஓர் இளைஞனாகவே காட்சி அளிக்கின்றார்.

இவரது 80ஆவது ஆண்டு நிறைவு விழா மயூராபதி அம்மன் ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

''அகவை 80இல் அறங்காவலர் பொன். வல்லிபுரம்'' என்ற தலைப்பில் பிரபல பத்தி ரிகையாளர் திரு. செல்லத்தம்பி மாணிக்கவாசகர் அவர்கள் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''கொழும்பு மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான அறங்காவலர் பொன்வல்லி புரம் ஐயா அவர்கட்கு அகவை எண்பது (80) என்பதை அறியும் போது மனத்தில் உள்வாங்க முடியாத ஒரு வியப்பு ஏற்படுகிறது. உயர்ந்த, கம்பீரமான தோற்றங் கொண்ட பொன்வல்லிபுரம் ஐயா அவர்கள் தோற்றத்திலும் எழுபது அகவைக் குள் இருப்பவராகவே நாம் கண்டு களித்தோம். ஆனால், இந்த இளைஞருக்கு அகவை 80 என்ற உண்மையின் மேன்மையை நம்பத்தான் வேண்டும்'' என எழுதியுள்ளார்.

சென்றாண்டு கொழும்புத் தமிழ்ச் சங்கம் இவரது சேவையைப் பாராட்டி விருது வழங்கிக் கௌரவித்தது. இதுபோன்ற பல சமூக, சமய அமைப்புகள் அவரது சேவையைப் பாராட்டி யுள்ளனர்.

அறங்காவலர் திரு.பொன் வல்லிபுரம் அவர்கள் நீடித்த ஆயுளுடன் சமய, சமூகப் பணி யாற்ற அம்பாள் திருவருள் பாலிப்பாராக. ✱

# உயிர் ஒன்றுவது இயல்பு

**இனஎழுச்சிக் கவிஞர் நெல்லை இராமச்சந்திரன்**

நள்ளிரவில் நீசிரித்தால் விடியல்! துள்ளும்
நதிநடையே! கால்தடங்கள் மருதம்! என்றன்
பள்ளியறைத் தேன்மழையின் மேகம் நீதான்!
பனிபெய்யும் சொல்லழகே! அமரும் போழ்து
புள்ளிமானே! நீஅசைந்தால் மயிலே தான்!ஆம்!
புல்லரிக்க வைக்கின்றாய் நானென் நெஞ்சில்
அள்ளிவைத்த பொற்குவியே! வா!வா! என்றேன்!
அய்யமொன்று எனச்சொன்னாள் கேள்!கேள்! என்றேன்.

தமிழ்பேசும் காரணத்தால் ஒருவன் இங்கே
தமிழனென ஆவானோ! அத்தான் என்றாள்.
குமிழூற்றுச் சிந்தனையே! இன்பச் சூட்டின்
கொதிகலனின் உணர்வலையே! இனவு ணர்வில்
இமியளவும் பற்றில்லான், தமிழால் பேசி
இருந்தென்ன? அத்தமிழன் செத்தா லென்ன?
நிமிர்தமிழின் உணர்வற்றோன், பேசும் நாவில்
நீர்க்குமிழ்போல் தமிழிருத்தல் எதற்கு என்றேன்?

களப்போர்கள் கண்டதமிழ் வீரம்! இன்று
காணாமல் போயிற்றே! அத்தான் என்றாள்.
வளப்பெரியார் சிந்தனைகள்! தமிழு ணர்வு
வற்றிவரும் காரணந்தான் கண்ணே! என்றேன்!
தலை,தலை,யாய், நாமிருந்தும் தமிழர் சாவைத்
தடுக்காமல் திரிகின்றோம் சரியா? என்றாள்.
அலைகடலாய் அலையுதடி நம்உ ணர்வு!
அத்தனையும் அவர்மீதே! என்றேன்! மேலும்

உலகுதமிழ்ப் பரப்பெல்லாம் உறவா என்றாள்?
உணர்வுதமிழ் கொண்டோர்கள் உறவே என்றேன்!
மதகுமடை திறப்பதுபோல் ஈழ மண்ணில்
மறத்தமிழர் குருதிநதிப் பாய்ச்சல் என்றாள்.
உதவுவது நம்கடமை! தமிழ்இனத்தின்
உயிர்காத்தல் நமைக்காத்தல் போல்தான் என்றேன்!
கதவுநிலை சரிதல்போல் தமிழர் வாழ்வு
காலமெலாம் சரிகிறதே! பகையால் என்றாள்.

உயிர்வந்தால் உக்குறள்தான் மெய்விட் டோடும்
உயர்தமிழின் புணர்ச்சிவிதி! தமிழ்உள் ளத்தில்
அயர்வறியாத் தமிழுணர்வு நமக்கு வந்தால்
ஆர்ப்பரிக்கும் பகைநமைவிட் டோடும் என்றேன்!
துயர்கொண்டே தமிழுயிர்கள் சாகின் றாரே!
துடிக்கின்றோம் நாம்என்றாள்! உடல்மேல் என்றும்
உயிர்வந்து ஒன்றுவது இயல்பே! பெண்ணே!
உலகுதமிழ் உயிர்!நம்மை ஒன்றும் என்றேன்!

# குழப்பியவர்களும் குழம்புகிறவர்களும்!

அரவிந்தன்

'மகெலன்' என்றொரு கடலோடி. உலகத்தின் மிக நீண்ட பயணங்களை மேற்கொண்டவன். அந்த மகெலன் பாக்கு நீரிணையைக் கடந்து போனபோது தென்பட்ட இலங்கைத் தீவை 'இந்தியாவின் கண்ணீர்த் துளி' என்று எழுதிவிட்டுப் போனான். அந்த எழுத்துகள் பொய்த்துவிடாமல் வரலாற்றில் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கும் நாடாகவே இலங்கை இருந்து வருகிறது. அரை நூற்றாண்டுகளாகத் தொடரும் ஈழத்துத் தமிழர்களின் கண்ணீர்த் துளிகள் நிறுத்தப்பட வாய்ப்பே இல்லையோ என வாய்விட்டு அரற்ற வேண்டிய நிலைக்கு வந்துள்ளன.

ஆரம்ப காலத்தின் இலங்கைச் சரித்திரம் என மகாவம்சத்தை எடுத்துக் கொண்டால் அது 'விஜயனின் பரம்பரைதான் இலங்கையின் சிங்கள இனம்' என்கிறது. விஜயன் இந்திய மாநிலமான வங்காளத்தில் இருந்து வந்தவன். அவன் அவனது தோழர்கள் அறுநூறு பேரும் மணம் முடித்தது பாண்டிய நாட்டுப் பெண்களை என்றும் சொல்லப்படுகிறது. அப்படியானால் சிங்கள இனம் தமிழ்த் தாய்மார்களின் கருப்பக்கிரகங்களிலிருந்து வந்த வார்ப்புகளாகத்தான் இருக்க வேண்டும். எனினும் தங்களைச் சிங்க(ள) இனமென்றும் ஆரியர்கள் என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். உரிமை கொண்டாடுகிறார்கள். இங்கேதான் தொப்புள் கொடி உறவுகள் தொலைந்து போய் நிற்கின்றன. இலங்கையின் இனவாதத்தின் ஆரம்பம் 'துட்டகைமுனு' என்ற சிங்கள அரசனின் எழுச்சியாகும். அதையும் மகாவம்சம் சொல்லத் தவறவில்லை. இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர்கள் எவரும் இனபேதம் காட்டியதாக மகாவம்சம் சொல்லவில்லை. அதிலும் 'எல்லாளன்' என்ற சோழன் மனுநீதியானவன் என்று துட்டகைமுனுவே சொல்லியிருக்கிறான், அவனுக்கு நினைவுத் தூபியும் எழுப்பியிருக்கிறான். ஆனாலும் சிங்களவர்களைத் துட்டகைமுனு வழி நடத்திய விதம் வேறானதாக இருந்தது. விபரீதமான இனவாதமாக இருந்தது. இன்றும் தமிழர்களை அழிப்பவர்களைத் துட்டகைமுனுவின் வாரிசுகள் என்று சிங்களம் வாய்விட்டு வாழ்த்துகிறது.

இங்கேதான் தமிழர்கள் விட்ட வரலாற்றுத் தவறுகள் தெரிகின்றன. இவர்கள் ஆட்சிபுரிந்த நாடுகளில் தங்கள் ஆட்சியின் தொடர்களைத் தக்கவைக்கத் தமிழர்கள் முயலவில்லை. அதனால்தான் தமிழ் இன்றும் அழியப்போகும் மொழிகளில் ஒன்றாகக் கணக்கிடப்படுகிறது. காரணம் வளம் இருந்தும் வாழ்வு அற்ற மொழியாக அது ஆக்கப்பட்டுவிட்டது.

தமிழகத்துக்கு வெளியே ஒரு சாம்ராச்சியத்தைத் தக்கவைக்க இராசேந்திர சோழன் முயலவில்லை என்பதுதான் வரலாற்றுத் தவறானது. இன்றும் வியட்நாம், கம்போடியா, சுமத்ரா, தாய்லாந்து, இந்தோனேசியா என்று சைவத் தமிழ்க் கலாசாரத்தின் சின்னங்கள் விரவிக் கிடப்பதற்கு இராசேந்திர சோழனின் ஆட்சியே காரணம் என்பதை நாம் நன்றியுடன் நினைவுகூர வேண்டும். அப்படியான ஒரு சாம்ராச்சியம் கங்கை கொண்ட சோழபுரத்துடன் முடிவுற்றுப் போனது தமிழனின் துரதிஷ்டமாகிப் போன கண்ணீர்க் கதை. ஒற்றுமையின்மை என்ற பலவீனம்தான் தமிழனின் அழிவுக்குக் காரணமாகிப் போனது. தமிழனால் தமிழன் மேல் நடத்தப்பட்ட கொலைகளும் குதறல்களும் அழிவுகளும் அதிகம். 'பரணி' பாடிப் பெருமைப்பட்டதன் பலன் அது. இந்திய சுதந்திரத்தின் பின் வங்காள மாநிலம் தனித்துப் பிரிந்து போக நின்றதும் அங்கே சிந்தப்பட்ட இரத்தமும் காந்தியடிகளின் இதயத்தை வேதனைக்குள்ளாக்கின. அந்தப் பிரிவைத் தடுத்து நிறுத்திய பெருமை இராஜாஜி என்ற தமிழனுக்கு மாத்திரமே உரியது. இந்திய உபகண்ட வரலாற்றில் ஒரு பிரிவினையை ஆதரித்தும் இன்னொரு பிரிவினையைத் தடுத்தும் தன் ஆளுமையைக் காட்டிய தலைமைத்துவம் தமிழகத்தில்தான் இருந்தது. ஆகவே இந்தியா ஒரு நாடாக இருப்பதை எந்தத் தமிழனும் எதிர்க்க மாட்டான். அப்படி ஒரு எண்ணத்தைத் திணிப்பதுதான் இப்போது தமிழக ஈழ உறவுகளைக் கொச்சைப்படுத்த எதிரிகளும் துரோகிகளும் கையாளும் கையாலாகாத் தனங்கள். அவைகளனைத்தையும் புறந் தள்ளப்போகும் புதிய உணர்வுகள் தோன்றி வருவதும் துணிவு பெறுவதும் தமிழனின் தற்கால நிகழ்வுகளாகின்றன.

ஆக, சிங்களத்தை அணைப்பதும் அங்கீகரிப்பதுமாக இந்தியா இதுவரை இருந்து வந்திருப்பதை மனவேதனையுடன் மானமுள்ள ஈழத்தமிழன் நினைவுகூருகிறான். சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்திலிருந்து கச்சத் தீவு வரை நடத்தப்பட்ட விட்டுக்கொடுப்புகள் எதுவும் தமிழனுடன் ஆலோசிக்கப்படாதவை. எனினும் இந்த விட்டுக்கொடுப்புகள் சிங்களத்தால் நினைவுகூரப்பட்டனவா? நன்றியுடன் நடப்பட்டனவா? இந்தோ-சீனா, இந்தோ-பாகிஸ்தான் யுத்தங்களின்போது இலங்கையின் சிங்களம் எந்தப் பக்கம் நின்றது? நல்லெண்ணத்துடன் வந்த 'ராஜீவ் காந்தி' அவர்களைத் தாக்கிய பட்டாளத்துக்காரனுக்கு 'பட்டி'யைக் கூட்டியதே சிங்களம்! தெரியாதா? எனினும் ஈழத்தமிழனுக்கு எதிராகவே இந்தியா செயற்படுகிறது. இது ஏன்? இயக்கங்களை உண்டாக்கினார்கள், பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்தார்கள். அப்புறம் அவர்களிடையே பிளவு

களை வளர்த்து மோதவிட்டார்கள். அப்புறம் அவர்களில் சில சில்லறைகளைச் சிங்களத்துக்கே ஆதரவு வழங்க வைத்தார்கள். அதன் மூலம் தமிழீழவாதிகளை அழித்தார்கள், துடைத்தார்கள், 1987இல் ஆக்கிரமிப்பு இராணுவத்தை அனுப்பி வைத்தார்கள், பன்னிரண்டு போராளிகளைப் பணயம் வைத்துப் பலியிட்டார்கள், ஆயுதக்களைவு என்று அப்பாவித் தமிழர்களை அழித்தார்கள், யாழ் மண்ணைச் சுடுகாடாக்கினார்கள். திலீபனைத் துடிக்கவிட்டுக் கொன்றார்கள், சர்வதேசக் கடற்பரப்பில் 'கிட்டு'வைப் பலியெடுத்தார்கள், ஆயுதக் கப்பல்களைக் காட்டிக் கொடுத்துவிட்டு அல்லது அழித்துவிட்டு அந்த நல்ல பெயரைச் சிங்களக் கடற்படைக்குக் காணிக்கையாக்கினார்கள். ஆகாயத் தாக்குதலுக்கு ஆய்வுப் பணி அளித்து தமிழ்ச் செல்வனையே கொன்றார்கள். கச்சிதமாகக் 'கருணா'வை வெட்டிவிட்டுக் கிழக்கைப் பிரிக்கக் கண்சாடை காட்டினார்கள். இப்போது தொடங்கியுள்ள போருக்குத் துணை நிற்கிறார்கள். இத்தனைக்குப் பின்னும் ஈழத்துத் தமிழன் இந்தியாவை எதிரியாகப் பார்க்கவில்லை. இது தமிழனின் பெருமையா? பலவீனமா?

இன்று தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் அதிர்வுகள் ஒரு மாறுபட்ட கோணத்திலிருந்து பார்க்கப்பட வேண்டியவை. எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவின் பின் மறைக்கப்பட்டிருக்கின்ற திரை இன்று விலக்கப்பட்டு வருகிறது என்றே எண்ணத் தோன்றுகிறது, இப்போது தெரியும் இந்த ஒளியை அணையாது பாதுகாப்பது தமிழகம் ஈழத்துக்குச் செய்யும் தலையாய பணியாகும். எங்களுக்காகப் பேசுவதற்கு ஏழு கோடித் தமிழ் உறவுகள் உண்டு என்பதே ஈழத் தமிழனின் களத்தில் பெற்ற இன்னொரு பெருவெற்றியாகும். எம்மை எம்மால் காப்பாற்ற முடியும்; இணைந்து நிற்பவனை எதிரியிடமிருந்து பிரித்துவிட்டால், இது தமிழகத்தால் தான் முடியும். அந்தத் தார்மீகமான உதவியைத் தமிழகம் தருமென்று புலம்பெயர்ந்த தமிழன் இன்று புளகாங்கிதம் கொள்கிறான், எதிர்பார்க்கிறான்.

வட்ட மேசை, சர்வகட்சி மகாநாடுகள் சிங்களத்தின் சாதனைகளாகத்தான் இதுவரை இருந்தன. இவை ஆறப்போடத்தான் உதவும். ஆக்கமான சாதனைகளைத் தரா. ஈழத் தமிழனுக்கே புளித்துப்போன செய்திகள் இவை. அரசியல் நோக்குடன் ஆராயப்படுபவை அரங்கேற நாள்கள் தேவை., அவை இப்போது காலம் கடந்த சிந்தனைகள். ஏனெனில் நாங்கள் அழிவின் விளிம்பில் நிற்கிறோம், வாழ்வா? சாவா? தீர்மானிக்கப்பட வேண்டிய இறுதிக்கட்டம், மாற்றுவழி என்று ஒன்று இனி ஆராயப்பட முடியாதது. தீர்வு ஒன்றுதான். அது தமிழ் ஈழமா அல்லவா? அன்புத் தமிழகத்துக்கு ஈழத் தமிழன் தரும் ஒரே ஆத்மார்த்தமான வேண்டுகோள்; குழப்புகிறவர்களைக் கண்டு குழம்பிப்போகாதீர்கள். ஈழத் தமிழினத்தின் போராட்டத்தை அரசியலுக்குள் அமிழ்த்திவிடாதீர்கள்; அங்கீகரியுங்கள். அதுவே மலர்வாகும். ✱


## "தியாகராசா மகேஸ்வரன் அரசியல் வாழ்வும் தமிழர் பிரச்சினையும்"

ஈழத்து அரசியலில் ஒரு வர்த்தகப் பெருமகனாக வளர்ந்து அரசியலில் புகுந்து நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் பணியாற்றிய எட்டு ஆண்டுக் காலத்தில் தமிழ் இனத்திற்கு அளப்பரிய பணிகள் ஆற்றியுள்ளார் மகேஸ்வரன். அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் போல் நாடாளுமன்ற உரைகளால் சாதனை படைத்துள்ளார். தீவிர அரசியல் ஈடுபாடே அவரது உயிருக்கு ஆபத்தாக அமைந்தது. தமிழ்த் தேசியத்தை நேசித்த நாட்டுப்பற்றாளராக அமரத்துவம் அடைந்தார். சிங்கள ஆதிக்கம் கொண்ட அரசியல் கட்சியிலிருந்துகொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு அணுகினார்? எதைச் சாதித்தார்? என்பது ஒரு வரலாறு. அவர் வாழ்நாளில் கடைப்பிடித்த அரசியல் வழி, தமிழர் பிரச்சினைக்கு எவ்வாறு குரல்கொடுத்தார் என்பதை அடிப்படையாக வைத்து "தியாகராசா மகேஸ்வரன் அரசியல் வாழ்வும் தமிழர் பிரச்சினையும்" என்னும் நூல் வெளியிடுவதில் மனநிறைவு அடைகிறோம்.

அவரது அரசியல் வாழ்க்கை, நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் தொடர்பாக அவர் ஆற்றிய உரைகள், இந்து சமய விவகார வரலாறு, இரண்டாவது உலக இந்து மாநாட்டால் சாதித்த சாதனைகள் முதலானவை இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நூல் புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளில் வெளியிடப்படவுள்ளன. இந்நூல் சென்னையில் தயாராகிக்கொண்டிருக்கிறது. மொத்தம் 250 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் 2000 பிரதிகள் அச்சிடப்படும். அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்களின் ஓராண்டு நிறைவின்போது கொழும்பில் முதல் வெளியீடு இடம் பெறும். அதனைத் தொடர்ந்து வெவ்வேறு தினங்களில் இலண்டன், கனடா, சுவிசு, பிரான்சு, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வெளியிடப்படும்.

மேலதிகத் தொடர்புக்கு :

**ஐ.தி. சம்பந்தன்,** (நூல் ஆசிரியர்)
Chuderoli Publication Society,
15, Rutland Road, London E7 8PQ, UK
Tel : 0044 20 8552 6992
E-mail : itsampathan@hotmail.com

# 'நோற்றலின் ஆற்றல்'

**கோத்திரன்**

அந்த நாள் 1987 செப்டம்பர் 17, இந்தியாவின் இராணுவம் சமாதானப் போர்வையுடன் யாழ் மண்ணில் பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்து நின்ற காலம், திலீபன் என்ற தியாக தீபத்தின் உண்ணா விரதம் மூன்றாம் நாளாகத் தொடர்ந்து கொண்டிருந்தது. ஐந்து அம்சத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு ஆயுதக் களைவுக்கு அந்த அந்நிய இராணுவம் ஆயத்தமாகிக் கொண்டிருந்ததன் அதிர்வுகளால் மக்களிடையே இனங் காணமுடியாத ஒரு பரபரப்பைப் பகிர்ந்து கொண் டிருந்த நாள்கள் அவை. அமரர் சிவானந்த சுந்தரம் அவர்களின் அயரா முயற்சியும் தோல்வியுற்றுத் திலீபன் தன்னை மூன்றாவது நாளாக உருக்கிக் கொண்டிருக் கிறான். அவன் மேல் ஆறாத அனுதாபம் கொண்டிருந்த யாழ் மண்ணின் புகழ்பெற்ற அந்தச் சட்ட வல்லுநர், இன்னொரு சந்தர்ப்பத்தை இந்திய அரசுக்கு வழங்க அனுமதி கோரி தேசியத் தலைமையை நாடி வருகிறார்; அவரது ஒப்புதலுக்காக.

காலை 10.30 மணி இருக்கலாம். சுமார் அரை மணி நேரம் தாமதத்துக்குப் பின்னர் அந்தத் தரிசனம் கிடைக்கிறது. யாழ் திருநெல்வேலியில் உள்ள குமார சாமி ஒழுங்கையில் உள்ள வீட்டில் அது நிகழ்கிறது. ''உங்களைக் காக்க வைத்து விட்டமைக்கு மன்னிக்க வேண்டும்'' அந்தக் காந்தக் கண்கள் எங்களை நோக்கி வருகின்றன, வரவேற்கின்றன. எனக்கு ஒரு வரலாற்று நிகழ்வு ஞாபகம் வருகிறது. 17 நிமிடங்கள் தாமதமாக வந்ததற்காகத் தன் மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட கியூபாவின் பிடல் காஸ்ரோ என் நினைவுக்கு வருகிறார். நாங்கள் அமர்ந்ததன் பின்புதான் அவர் உட் காருகிறார். அமைதியாக அண்ணே! என அழைத்துப் பேசத் தொடங்குகிறார். சட்ட வல்லுநரின் கோரிக்கை யைப் பரிவுடன் கேட்டுக் கொள்கிறார். அதன்பின்னான சில விநாடிகள் மௌனத்தின் பின் அமைதியாகப் பதிலும் சொல்கிறார்.

அவரது பேச்சு இந்திய அரசுக்கு அவரால் வழங்கப்பட்ட குறைந்தபட்சத் திட்டம் பற்றியதாக இருந்தது. அந்த ஐந்து அம்சங்கொண்ட திட்டத்தைப் பரிசீலிப்பதாக இந்திய நடுவண் அரசு எழுத்தில் உறுதிப் படுத்துமாயின் திலீபனை நோன்பிலிருந்து நிறுத்த முயற்சிப்பதாக உறுதி தருகிறார். திலீபனுடன் நெருக்க மாகப் பழகிய அனைவருக்கும் அவன் பிடிவாதமான போக்குப் புரியும். அதுதான் தலைவர் அப்படிச் சொல் கிறாரென நான் உணருகிறேன். அன்றைய அந்த உரை யாடலில் அவரது தீர்க்கதரிசனமான பல எண்ணங்கள் இழையோடுகின்றன. அந்த அற்புதமான மனிதரைப் பார்த்த அந்த நாள் மிகவும் பெறுதியான பெருநாளாகத் தெரிகின்றது. ''உங்களது உண்மையான பற்றினை உணருகிறேன். இது பாதிக்கும்படியாக நாம் நடந்து கொள்ள மாட்டோம். முயற்சியுங்கள், முடிவு நல்லதாக அமையட்டும்'' என்கிறார் அவர். அதன் பின்பு அவர் அளித்த கடந்தகால, எதிர்கால நிகழ்வுகளின் உரை யாடல் இன்றும் பசுமையாக இருக்கிறது. அது நடப்பின் முடிவைக் கோடிட்டு, முன்னோக்கியும் காட்டியது. ஆழமான வரலாற்று உண்மைகள் அங்கே கோக்கப் பட்டன. அங்கீகாரம் அமைதியாக அளிக்கப்படுகிறது.

ஏற்கெனவே நடைபெற்ற தொடர்பாடலின்படி மறுநாள் காலை தூதுவர் 'டிக்சித்'துடன் ஒரு நேரடித் தொலைபேசி உரையாடல் ஏற்பாடாகியிருந்தது. அதைப் பலாலி இராணுவத் தலைமையகத்திலிருந்து செய்ய இராணுவம் ஒப்புதல் தந்திருந்தது. முதல் நாளில் ஒப்புக் கொண்ட சரியான நேரத்தில் தொடர்பு கொண்டபோது, கொழும்பில் டிக்சித் இல்லையென அறிவித்த 'பூரி' என்பவர் மறுநாள் நிச்சயமாக ஒழுங்கு செய்கிறோம் என்கிறார். மறுநாள் தொடர்பின்போது பூரி மறைந்து கொண்டு ஒரு 'சாறி'தான் பேசியது. அடுத்த நாளைக் குறிப்பிட்டார்கள். அடுத்த நாளும் அதே கதைதான் அளக்கப்பட்டது. திலீபன் ஆறாவது நாளாகத் தன் அரைவாசி உடலைப் பணயம் வைத்துவிட்டான். இனியும் பேசமுடியுமென்ற நம்பிக்கை அன்றோடு சிதைந்துபோனது. அப்போதுதான், அன்று தேசியத் தலைமை உரைத்த சில உண்மைகள் எமக்குள் உறைத் தன. சட்டவல்லுநரிடமிருந்து வேதனை கலந்த ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. திலீபனைக் காப்பாற்ற முடியாதா? என்று அவரது முகத்தை ஏக்கத்துடன் பார்க் கிறேன். ''இந்திய அரசிடமும் அதன் அதிகார வர்க்கத் திடமுமிருந்து இதைவிட வேறு எதுவும் பெற்றுக் கொள்ள முடியாது என்பதைத் தலைவர் அன்றே சொல்லியிருந்தார். நாம்தாம் அதிகமாக எதையோ எதிர்பார்த்து நின்றோம், அதன் பலன் இப்படி'' என்றார் அவர்.

அதன்பின் நடந்தவை உலகம் அறிந்தவை. தமிழீழ மக்கள் மனத்துள் ஆறாத வடுவாக இன்றும் இருக்கின்றவை. எதையும் உள்ளேவிட அனுமதிக்காத அந்தத் 'தீபம்' செப்டம்பர் 26ஆம் நாள் அணைந்து போனது. அந்த நள்ளிரவின் நகர்வுகளை எழுத இங்கு வார்த்தைகள் வரவில்லை. எனினும் அவன் உணர்வுடன் இருந்தபோழ்து இறுதியாகப் பேசியது; ''எனது மரணத் தின்பின் இது மக்கள் இயக்கமாக மாறும்'' என்பது. அவன் எதிர்பார்த்த அந்த மாற்றம் அதன்பின் ஏற்பட்டது என்பதுதான் வரலாறு.

ஒருமுறை எம்மில் சிலரை இந்திய இராணுவம் தடுத்துவைத்து விசாரித்தது. அந்த உயர் அதிகாரி இப்படிச் சொன்னான்; ''நீங்கள் நினைப்பதுபோல் எங்களை ஏமாற்ற முடியாது. நாங்கள் தெளிவாக இருக்கிறோம். இங்கு மக்கள்தாம் புலிகள், புலிகள்தாம் மக்கள்'' என்று. அப்போது திலீபனின் வார்த்தைகள் ஞாபகத்தில் வந்து போயின. பிற்பாடு, ஓய்வுபெற்ற இந்திய இராணுவ உயர் அதிகாரி ஒருவர் எழுதிய நூலிலும் இத்தகைய கருத்துகளே காணப்படுகின்றன. சமகாலத்தில் வன்னியில் நடக்கும் சமர் இதற்கு ஓர் உதாரணம். எத்தனையோ துன்பங்களுக்கிடையேயும் வன்னி மக்கள் மீண்டும் மீண்டும் உள்ளே சென்று கொண்டிருப்பது வெளியேறி வராதது இலங்கையை விட இந்தியாவையும் அவர்களின் ஆய்வாளர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி வருகிறது. நாலாவது ஈழப்போரின் ஆரம்பமா! முடிவா? குழம்புகிறார்கள் ஆய்வாளர்கள். 1984 பிற்பகுதியின் நாள்களில் திலீபன் என்ற அந்த இருபது வயதுப் போராளியின் ஒரு பேச்சின் சாராம்சம் இப்படி இருந்தது; ''ஈழம் கிடைக்குமா என்கிறார்கள். நான் அது பற்றிய எண்ணங்களை இங்குச் சொல்ல விரும்பவில்லை. ஆனால், தமிழீழத்தில் இருந்துதான்.... சிதைகள் ஆரம்பிக்குமென்பதில் எனக்குத் தெளிவுண்டு. அது பின்னர் வரலாறாக அமையும். நான் இருக்க மாட்டேன். நீங்கள் குறித்துக் கொள்ளுங்கள். அது நடக்கும் ''தன்னுயிர் தான் அறப்பெற்றவன்'' அவன் என்பதால் அந்தக் காலம் நெருங்கி வருகிறது என்ற நம்பிக்கை எனக்குண்டு.

மீண்டும் அவன் பிரிந்த அந்த நள்ளிரவின் ஞாபகம் வருகிறது. என்புக் கூடாகத் தன்னை உருக்கி உயிர்விடுகின்ற அந்த இறுதிநேரம். அவனது உணர் விழந்த நிலையில் அறிவுகளை விஞ்சிய அவன் ஆத்மா கடைசி நிமிடத்தில் தண்ணீர் கேட்கிறது. அவன் அருகே இருந்த அந்த மருத்துவ மேதை மனம் கலங்கியவராகத் தந்தை இராசையா மாஸ்டர் அவர்களிடம், ''இந்த இறுதி நேரத்திலாவது அவனது ஆத்ம சாந்திக்காக இரண்டு துளி நீர் கொடுக்கலாமா?'' என்று கேட்கிறார், அந்தத் தியாகியின் தந்தையோ; அவனது இலட்சியத்தை இறுதி நேரத்தில் கொச்சைப்படுத்திவிடாதீர்கள். அவனை அப் படியே போகவிடுங்கள்'' என்கிறார். இப்படி ஒரு ஒப் பற்ற தந்தையையும் மகனையும் இந்த உலகம் இதுவரை எங்காவது கண்டிருக்கிறதா? இந்த வேள்வியின் பெரு மையைக் காந்தியடிகளின் வரிகளில் பார்ப்போம்.

''..... காலை 8.30 மணிக்கு என் மவுனப் பிரார்த் தனை முடிந்தவுடன் இக்கடிதத்தை 'டிக்டேட்' செய் கிறேன். நடுநடுவே எனக்குச் சிபாரிசு செய்துள்ள உண வையும் சாப்பிட்டு வருகிறேன். என்ன அதிர்ச்சியில் திகைக்கிறாயா? எனது உணவு என்பது எட்டு அவுன்சு சுடுதண்ணீர். அதைச் சிரமத்துடன் மெள்ள மெள்ள உறிஞ்சி அருந்த வேண்டியுள்ளது. விஷத்தைக் குடிப் பது போல அதை அருந்த நேரிடுகிறது, என்றபோதும் அதுவே அமுதமும் ஆகும். ஏனெனில், ஒவ்வொரு வாய் அருந்தும்போதும் நான் சற்றுத் தெம்பு பெறு கிறேன். சொன்னால் ஆச்சரியப்படுவாய்! இந்தத் தடவை அதுபோன்று ஒரு நாளைக்கு எட்டுத் தடவை இந்த விஷம் போன்ற கசப்பான அதே சமயம் அமிர்த பானம் போன்று உடலுக்குத் தெம்பு ஊட்டும் உணவை உட் கொண்டு ஜீவித்து வருகிறேன். இவ்வாறாயினும் நான் உண்ணாவிரதம் இருந்து வருவதாக உரிமை கொண்டாடுகிறேன். அப்பாவி ஜனங்களும் அப்படியே நம்புகிறார்கள். என்னே விசித்திர உலகம் இது''.

மேலே உள்ள வாசகங்கள் காந்தியடிகளால் அவர் உண்ணாவிரதம் ஆரம்பித்த நான்காம் நாள் (16-1-1948) அன்று 'மீராபென்' அம்மையாருக்கு எழுதிய மடலில் உள்ளது. இதில் நீர் அருந்துவதுகூட உண்ணாநோன்பின் கோட்பாட்டிற்கு ஏற்புடையது அல்ல என்பது தெளி வாக்கப்பட்டுள்ளது. அப்படியானால் இந்த உலகின் இணையற்ற உண்ணா நோன்பாளன், நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவன் திலீபன்தானோ! ''மரணம் வாழ்வின் முடிவு அல்ல'' என்ற சத்திய வேதத்தின் வரிகள் இங்கு மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. தமிழீ ழத்தின் சரித்திரத்தில் இது ஒரு ''கூற்றம் குதித்தலும்'' ஆகும். இதோ வள்ளுவம் -

*''கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்*
*ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு''*

- குறள் : 29

✱

## பொங்கலே! வருக!

**புதுமைக் கவிஞர் ப. சங்கரலிங்கனார், மதுரை**

**பொங்கலே! வருக!**
**புதுமையே வருக!**
**எங்குமே இன்பமே**
**இனிதாய்ப் பொங்கிட! (பொங்)**

**கன்னெலும் செந்நெலும்**
**கழனியில் விளைந்திட!**
**நன்மையும் உண்மையும்**
**நாட்டினில் நிலைத்திட! (பொங்)**

**உழவரே உயர்ந்திட!**
**உழைத்தவர் ஓங்கிட!**
**தழைத்திடப் பொதுமையே!**
**தமிழினம் சிறந்திட! (பொங்)**

**ஈழமே மலர்ந்திட!**
**இனிமையே குவிந்திட!**
**காலமே புகழ்ந்திட!**
**காசினி வாழ்த்திட! (பொங்)**

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தமிழக நடிகர்-நடிகைகள் உண்ணாநிலைப் போராட்டம்

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும் தமிழகத் திரையுலக நடிகர்-நடிகைகள் ஒருநாள் உண்ணா நிலைப் போராட்டத்தினை 1-12-08 அன்று நடத்தி யுள்ளனர்.

சென்னை, தியாகராயர் நகர், அபிபுல்லா சாலை யில் உள்ள தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டட வளாகத் தில், நடிகர் நடிகைகளின் உண்ணாநிலைப் போராட்டம் தொடங்கி நடைபெற்றது.

இதற்காகப் பிரமாண்டமான பந்தல் அமைக்கப் பட்டு சுமார் ஆயிரம் இருக்கைகள் போடப்பட்டிருந்தன. நடிகர், நடிகைகள் அனைவரும் கறுப்பு உடை அணிந்து உண்ணாநிலைப் போராட்டத்தில் பங்கேற்றனர். தென் னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நடிகர் சரத்குமார் மெழுகுவத்தி ஏற்றி உண்ணாநிலைப் போராட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

இலங்கையில் சிங்கள இராணுவத்தால் படு கொலை செய்யப்பட்ட அப்பாவி ஈழத் தமிழர்களின் ஆன்மா சாந்தி அடைவதற்காக நடிகர்-நடிகைகள் எழுந்து ஒரு நிமிடம் மௌனமாக நின்றனர்.

உண்ணாநிலைப் போராட்டம் தொடர்பில் நிருபர்களிடம் நடிகர் சரத்குமார் கூறியதாவது:-

''இலங்கையில் அமைதி ஏற்பட்டு, ஈழத் தமிழர் கள் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்பதை வலி யுறுத்த இந்த உண்ணாநிலைப் போராட்டம் நடக்கிறது. அந்த வகையில் இன்று நம் உணர்வுகளைப் பதிவு செய்யும் நாள் ஆகும். ஈழத் தமிழர்களுக்கு எல்லா வகை நிவாரண உதவிகளும் சென்று சேரும் வகையில் நடிகர், நடிகைகள் கருத்துகளைப் பதிவு செய்வார்கள்'' என்றார் அவர்.

உண்ணாநிலைப் போராட்ட மேடையில் இருந்த நடிகர், நடிகைகளை நடிகர் சங்கப் பொதுச் செயலாளர் இராதாரவி ஒவ்வொருவராக அழைத்து உரையாற்ற வைத்தார். முதலில் பல்வேறு மாவட்ட நாடகக் கலை மன்ற நிருவாகிகள் உரையாற்றினர். அதன் பின்னர் நடிகர், நடிகைகள் உரையாற்றினர்.

ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிப் பேசும்போது, உணர்ச்சிவசப்பட்டு விடுதலைப் புலிகள் பற்றியோ அல்லது மத்திய-மாநில அரசுகளை விமர்சனம் செய்தோ உரையாற்றக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தது. எனவே நடிகர், நடிகைகள் எல்லாரும் சுருக்கமாக உரையாற்றினர். உண்ணாநிலைப் போராட்டத்துக்குத் தங்களது தார்மீக ஆதரவைத் தெரிவித்து மட்டுமே உரையாற்றினர்.

தேசிய முற்போக்குத் திராவிட கழகக் கட்சியின் தலைவரும் நடிகருமான விஜயகாந்த்து உண்ணாநிலைப் போராட்டத்தில் பங்கேற்றார். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து அவர் தன் சட்டையில் கறுப்புப் பட்டி அணிந்திருந்தார்.

அவர் நிருபர்களிடம் தெரிவிக்கையில், ''நடிகர் என்ற முறையில் இந்த உண்ணாநிலைப் போராட்டத்தில் பங்கேற்கிறேன். இதன் மூலம் ஈழத் தமிழர்களுக்கு ஒரு நல்ல வழி பிறக்கும் என்று நம்புகிறேன்'' என்றார்.

நடிகர் இரஜினிகாந்த்து, நடிகர் கமலஹாசன், தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச் சந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உண்ணாநிலைப் போராட்டத்தில் நடிகர்களான வி.எஸ். இராகவன், சிவகுமார், விஜய்குமார். விசு, விஜய், அஜீத், சூர்யா, தனுஷ், சத்யராஜ், பிரபு, பிரகாஷ் ராஜ், முரளி, அர்ஜுன், விக்ரம், பார்த்திபன், ஜெயராம், பிரபுதேவா, கார்த்திக், பாண்டியராஜன், சரண்ராஜ், பசுபதி, ஸ்ரீகாந்த்து, கார்த்தி, பரத், நெப்போலியன், மணி வண்ணன், சந்திரசேகர், ஜெயம் ரவி, எஸ்.ஏ. சந்திர சேகர், சுந்தர் சி., பிரசாந்த்து, பிரசன்னா, சாந்தனு, அருண்விஜயம், சிபிராஜ், கரண், எஸ்.ஜே. சூர்யா, ராஜேஷ், அருண்பாண்டியன், வினு சக்கரவர்த்தி, நிழல் கள் ரவி, ஆசீஷ் வித்யார்த்தி, அஸ்வின்சேகர், ரியாஸ் கான், பிருதிவிராஜ், சரவணன், மன்சூர் அலிகான், ஸ்ரீமன், ரித்தீஸ், பாபுகணேஷ், ராஜ்கபூர், ராஜ்கிரண், தலைவாசல் விஜய், சரண், அப்பாஸ், சியாம், உதயா, நரேன், நகுல், ஜெய் ஆகாஷ், மனோஜ், இளவரசன், ஐஸ் அசோக், எஸ்.வி. சேகர், ஒய்.ஜி. மகேந்திரன், கவுண்டமணி, விவேக், வடிவேல், எம்.எஸ். பாஸ்கர், தாமு, குமரிமுத்து, சார்லி, சின்னி ஜெயந்த், கருணாஸ், அலெக்ஸ், மதன்பாப், கஞ்சா கறுப்பு, பாண்டு, குள்ளமணி, சிசர் மனோகர், போண்டா மணி, தியாகு, மயில்சாமி, இலாரன்ஸ் ராகவ், மோகன், தியாகராஜன், கவிஞர் பிறைசூடன், அபிராமி இராமநாதன், கலைப் புலி சேகரன், வி.சி. குகநாதன், நடிகைகள் மனோரமா, சச்சு, இலதா, இராதிகா, ஸ்ரீபிரியா, ரேகா, மீனா, குஷ்பு, நயன்தாரா, திரிஷா, சிநேகா, சந்தியா, கீர்த்தி சாவ்லா, இலட்சுமி ராய், லிசி, சத்யபிரியா, மும்தாஜ், கோவை சரளா, குயிலி, தாரிகா, மோனிகா, சபீதா ஆனந்த், கே.ஆர். வத்சலா, பசி சத்யா, மயிலை கே. தேவி உட்பட திரையுலகமே திரண்டு வந்தது.

நடிகர், நடிகைகள் மேடைக்கு வர மக்கள் தொடர்பாளர்கள் டைமன் பாபு, மௌனம் ரவி, சிங்கார வேலன், நிகில், இராமதாசு, கீர்த்தி செல்வகுமார், பெரு துளசி பழனிவேல், கோவிந்தராஜ், ரியாஸ், கடையம் ராஜு ஆகியோர் உதவி செய்தனர்.

உண்ணாநிலை அறப் போராட்டத்தின் இடையே தமிழக அரசு திரட்டும் நிவாரணத்துக்கு நிதி திரட்டப் பட்டது. நடிகர்-நடிகைகள் ஆர்வத்துடன் நிதி வழங்கினர்.

மாலை 4.00 மணிக்கு உண்ணாநிலைப் போராட் டம் முடிவடைந்தது. பழம்பெரும் நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் உண்ணாநிலைப் போராட்டத்தினை நிறைவு செய்தார். ✱

# அமரர் தியாகராஜா மகேஸ்வரனுக்கு
# கனடாத் தமிழ் மக்கள் நினைவு வணக்கம்

முன்னாள் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், முன்னாள் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் ஆகிய அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் முதலாம் ஆண்டு நினைவு வணக்கக் கூட்டம் 28-12-2008 அன்று நோர்த் யோர்க் சிவிக் சென்ரர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கனடா-காரை கலாசார மன்றம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு அன்னாரை நன்றியுடன் நினைவு கூர்ந்து வணக்கம் செலுத்தினர்.

கடவுள் வாழ்த்தினைக் கனடா-காரை கலாசார மன்ற உபதலைவர் திரு. திருவாதா தருமராசா பாடினார். அமரர் மகேஸ்வரனின் சிறியதாயார் திருமதி பரமேஸ்வரி பரமசிவம் உருவப்படத்துக்குச் சுடரேற்ற, அவரின் ஒன்றுவிட்ட தமையன் திரு. கணபதிப் பிள்ளை நாகரட்ணம் மலர் மாலை சூட்டினார். தாயகத்தில் இயற்கை அனர்த்தத்தின் போதும் இலங்கை, இந்திய இராணுவ நடவடிக்கைகளின் போதும் உயிர்நீத்த போராளிகளுக்கும் பொது மக்களுக்கும் ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அடுத்து சிவஸ்ரீ பொன். பஞ்சாட்சர குருக்கள் ஆசியுரையில் 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் வள்ளுவன் மொழிக்கு உதாரண புருஷன் அமரர் மகேஸ்வரன் எனக் கூறினார். அடுத்து மேருபுரம் ஸ்ரீ பத்திரகாளி தேவஸ்தானத்தின் பிரதம குரு சுரேஷ் ஐயர் அவர்கள் பேசும்போது அமரர் மகேஸ்வரன் அவர்கள் அந்தண குலத்துக்குக் கொடுத்த மரியாதையையும் செய்த சேவைகளையும் குறிப்பிட்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தார். ஒன்ராரியோ இந்து சமயப் பேரவையின் தலைவர் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள், காரைநகர் சைவம் போற்றும் பெரும்பகுதி எனக்குறிப்பிட்டு அதற்கேற்ப காரைநகரில் பிறந்த அமரர் மகேஸ்வரன் அவர்களும் இந்து கலாசார அமைச்சராக இருந்து ஈழத்துத் தலங்களைப் புனரமைத்தமை, இந்து மாநாடுகள் நடத்தியமை, மலர்கள் வெளியிட்டமை, அவர் காரைநகருக்குச் செய்த சைவப் பணிகளையும், சமூகப் பணிகளையும் விரிவாகக் கூறினார்.

நயினாதீவு கனடியா அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ஜெயசிவதாசன் உரையாற்றும்போது அமரர் மகேஸ்வரன் அவர்கள் அரசியலுக்கு வரு முன்னரே மக்கள் சேவை செய்தவர் எனவும் 1991 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் பின்னர் கடற்படை முகாமில் இருந்த காரைநகர் மக்களைச் சந்தித்து அவர்களை விடுவிப்பதற்காகக் கடற்படையினருடன் போராடினார் எனவும் சிவபக்தனான அவர் எல்லா ஆலயங்களுக்கும் உதவியதாகவும் குறிப்பிட்டார். அமரர் மகேஸ்வரனின் சிறிய தாயார் திருமதி பரமேஸ்வரி பரமசிவம் அவர்கள் அவரின் குணவியல்புகளையும் சாதனைகளையும் தமது ஏக்கத்தையும் உருக்கமான கவிதையாகத் தந்தார். அமரர் மகேஸ்வரன் அவர்களின் ஒன்றுவிட்ட தமையனும் இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளருமான திரு. சிவா சுந்தரம் அவர்கள் உரையாற்றும்போது அமரர் மகேஸ்வரன் அவர்கள் வாழும் போது உரிமையுடன் உறவு கொண்டாடியவர்கள், அவர் இல்லாதபோது தமது கடமையைச் செய்ய மறந்தமையை ஆதங்கத்துடன் சுட்டிக் காட்டினார். கனடா-காரை கலாசார மன்றச் செயலாளர் திருமதி. கிருஷ்ணவேணி சோதிநாதன் உரையாற்றும்போது அவரை அவருடைய ஊர் மட்டுமல்ல, ஈழத்தமிழினமும் இழந்து ஆண்டு ஒன்றாகிவிட்ட நிலையில் அவரை நன்றியுடன் நினைவு கூர்ந்து வணக்கம் செலுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

அமரர் மகேஸ்வரன் அவர்களின் சமய, சமூக, அரசியல் வாழ்வின் பதிவுகளிலிருந்து பொருத்தமான காட்சிகள் அவ்வப்போது காணொளியில் காண்பிக்கப்பட்டமை அனைவரின் மனதையும் உருக்குவதாக அமைந்தது. இந்நிகழ்வினை திரு. பா. ஞானபண்டிதன் அவர்கள் மிகவும் உணர்வுபூர்வமாகத் தொகுத்து வழங்கினார்.

மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி தம் உரையில் ஒரே ஒருமுறை அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்ததாகவும் அடக்கம், பணிவு, எளிமையாகப் பழகி அரவணைக்கும் பண்பு கொண்டவர் எனவும், ஆனால் பாராளுமன்றத்தில் மிகவும் துணிச்சலுடனும் ஆவேசத்துடனும் உரையாற்றுவதிலும் பொருத்தமாகக் குறுக்கிட்டுப் பேசுவதிலும் தனித்திறமை கொண்டவர் எனவும் குறிப்பிட்டார். அடுத்ததாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி திருகோணமலை மாவட்ட முன்னாள் அமைப்பாளர் திரு. வீர. சுப்பிரமணியம் அவர்கள் அன்னாரின் அரசியல் பணிகள் பற்றிப் பேசினார். ஸ்ரீலங்காவின் அரசியல் கலாசாரம் தொழுகை நேரங்களில் ஆலயங்களில் படுகொலை செய்யும் வழமை கொண்டது எனவும் குறிப்பிட்டார்.

கனடியத் தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் வன்னித் தமிழ் சமூகக் கலாசார சங்கக் காப்பாளர் திரு. த. சிவபாலு அவர்கள் தனது உரையில் மக்களோடு மக்களுள் ஒருவராக அவர் நின்று மனிதநேயத்துடன் சேவை செய்தார் எனவும் தமிழ்மக்களுக்காகத் தான் சேர்ந்த கட்சியையே எதிர்த்தவர் எனவும் குறிப்பிட்டார். உதயன் பத்திரிகை முதன்மை ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் 'அவர் பல சவால்களுக்கு மத்தியில் நின்று மக்களுக்குச் சேவையாற்றினர்' எனக் குறிப்பிட்டார். கனடா-காரை கலாசார மன்ற முன்னாள் செயலாளர் திரு. கனக. சிவகுமாரன் உரையாற்றும் போது காரைநகருக்குப் பெருமை தந்த பெரியோர் வரிசையில் அமரர் மகேஸ்வரன் அவர்கள் இனப்பற்றும் மொழிப்பற்றும் கொண்டு போராடினார் எனக் குறிப்பிட்டார். ✱

*நன்றி : உதயன் இதழ், கனடா*

# தைப் பொங்கல்

குரும்பசிட்டியூர் திருமதி யோகேஸ்வரி நவரத்தினம்

பொங்கல் ஒரு பொது விழா. அது விழாக்களுள் சிறந்தது; எளிமையால் இனிப்பது; மனத்தூய்மையின் விளக்கப் பொலிவால் மதிப்புறுவது; பல்வேறு சமயத்தினரும் உவந்து ஈடுபட்டுக் கலக்கும் பொதுமையால் தனிப்புகழ் உடையது. இன்பம் ஊட்டும் இவ்விழாவினைத் தமிழர் பெருநாள், உழவர் திருநாள், சூரியப் பொங்கல், மாட்டுப் பொங்கல் என்றெல்லாம் வருணிக்கின்றனர்.

கால வகையினால் பழையன கழிந்து புதியன புகுதலுக்குத் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பதைத் தெரிவிக்கவே பொங்கற் புதுநாள் வருகின்றது. ஆம். ''புதுநாள்'' வருகின்றபொழுதே பொங்கிக்கொண்டு வருகின்றது. அடுப்பில் பால் பொங்குதல் மட்டுமன்று, அனைவருடைய உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கவும் அது வருகின்றது.

இப்பொங்கற் புது நாள் தைத்திங்களின் தோற்றமாக அமைவது ஏன்? அஃது உற்று நோக்க வேண்டிய ஒன்றுதான். நமக்கு ஓராண்டு காலம் தேவர்கட்கு ''ஒரு நாள்'' என்பது. ஓராண்டுக் காலத்தை ''உத்தராயணம்'' ''தட்சிணாயணம்'' என்று பிரிக்கலாம். உத்தராயணம், வடபாற் போக்கு. அஃதாவது, நமது நாட்டில் சூரியன் வடதிசை நோக்கிச் செல்வது போலக் காணப்படுவது, தட்சிணாயணம், தென்பாற் போக்குச் சூரியன்; தென் திசை நோக்கிச் செல்வது போலக் காணப்படுவது, ஓராண்டுக்காலம் தேவர்களுக்கு ஒரு நாளாய் அமைகின்ற நிலையில், உத்தராயணம் பகலாகவும், தட்சிணாயணம் இரவாகவும் அவர்கட்கு அமைகின்றது.

தை முதல்நாள் தொடங்கி ஆனி இறுதி நாள் முடிய உள்ள ஆறு திங்கள் உத்தராயணம், ஆடி முதல் நாள் தொடங்கி மார்கழி இறுதிநாள் முடிய உள்ள ஆறு திங்கள் தட்சிணாயணம். எனவே தேவர்கட்குப் பகற்காலம் தோன்றுகின்ற நாள் தை முதல்நாள் ஆதலின் அந்நாளே நமக்கும் புதுத் திருநாளாய் அமைகின்றது. ஒவ்வொரு நாளிலும் இருள் நிறைந்த இராக்காலம் நீங்கி ஒளியுடைய பகற்காலம் தொடங்கும்பொழுது, உலகமே புதியதாகவும், வாழ்வு புதியதொரு வாழ்வாகவும் தோற்றம் அளிக்கின்றன.

இரவில் உறங்கியெழுந்த பின் காலையில் ஒரு புத்துணர்ச்சி தோன்றுகின்றது. அதனால், தேவர்களுக்குப் பகலின் தோற்றமாகிய தை மாதப் பிறப்பு மக்களுக்குப் புத்தம் புதிய நாளாக விளங்குவதில் வியப்பில்லை.

தை மாதப் பிறப்பன்று சூரியன் தனுர் இராசியிலிருந்து மகரத்திலே பிரவேசிக்கின்றான். மகரத்திலே சூரியன் பிரவேசமாகும் நாள் தைப்பிறப்பு எனப்படும். ஆதலின் மகர சங்கராந்தி எனவும் இந்நாள் அழைக்கப்படும்.

தை மாதப் பிறப்புத் தேவர்கட்குப் பகற்காலத் தொடக்கமாதல் பற்றியே அப்பொருளில் பகலவனை வழிபடுதல் மரபாக உள்ளது. இந்நாள் பகலின் தொடக்கம். எனவே, இதற்கு முற்பட்ட மார்கழித் திங்கள் தேவர்கட்கு வைகறைப் பொழுது என்பது சொல்லாமலே விளங்கும். கூத்தப்பெருமானுக்கு அபிடேக காலம் ஆறும் தேவர் நாளின் வழியே அமைந்தது. அவற்றுள் திருவாதிரையில் நிகழும் அபிடேகம் விடியலில் நிகழும் முதற்கால அபிடேகமாகும். மார்கழித் திங்கள் தேவர்கட்கு விடியற்காலமாதல் பற்றி இத்திங்கள் முழுவதிலும் விடியலில் எழுதலும், திருப்பள்ளி எழுச்சிக் காலத்தில் ஆலயங்களில் வழிபாடு நிகழ்தலும் நியதியாகச் செய்யப்படுகின்றன. இத்திங்கள் முழுவதும் இவை தவறாது நிகழின், ஆண்டு முழுதும் இவை தவறாது நிகழ்ந்ததற்கு நிகராகும். இச்சிறப்பு பற்றியே மார்கழித் திங்கள் முழுவதிலும் உலகியற் செயல்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்றன. முதற்பெருங் கடவுளாகிய சிவ பெருமானுக்கு மிகச் சிறந்த திருநாளாகிய திருவாதிரைத் திருநாளும் மார்கழித் திங்களிலே வருதல் நோக்கத் தக்கது.

தேவர்கட்கும் புதுமையை விளைவிக்கின்ற பொங்கற் பெருநாள் வருதலை முன்னிட்டு மக்கள் பழைய இல்லங்களையும் தூய்மை செய்து பல வகையில் புதுக்கி அமைப்பர். பழங்கலங்களை நீங்கிவிட்டுப் புதுக்கலங்களைக் கொணர்ந்து அடுக்கிவைத்த புதியவற்றையே ஆளத் தொடங்குவர். அரிசி, பயறு, கரும்பு, மற்றும் காய்கனி முதலிய அனைத்தும் புதியனவாகவே விளைந்தவற்றையே கொள்வர். தைப்பிறப்பைப் புது வருடப் பொங்கல் நாளாக, புனித நன்னாளாக, தமிழினத்தின் தனிப்பண்பாட்டை விளக்கும் திருநாளாக, வாழ்வு மலர வழிபிறக்கும் பொன்னாளாகப் போற்றிக் கொண்டாடி வரும் தமிழ்ப்பெருங்குடி மக்கள் இத்திவ்விய தினத்தில் சூரியோதயத்தின் முன் தோரணமணிவித்து வீட்டை அலங்கரிக்கின்றனர். பின்னர் வீட்டு முன்றிலில், சூரிய வெளிச்சம் கும்பம் வைத்துப் பிள்ளையார் பிடித்து வைத்து அறுகம்புல் சூட்டி அதன் அருகில் மார்கழி முழுதும் வணங்கிய முப்பத்தொரு பிள்ளையாரையும் ஒரு தட்டில் வைக்கின்றனர். பின்னர்ப் பால், முக்கனி, பாக்கு வெற்றிலை, இளநீர் முதலியன படைக்கின்றனர். சாணத்தால் மெழுகிய இடத்தைச் சுற்றித் தென்னங் குருத்தோலைத் தோரணம், மாவிலை, தென்னம்பூ முதலியவற்றால் அலங்கரிக்

கின்றனர். தோட்டத்தில் வளர்ந்த கரும்பினையும் கொணர்ந்து அலங்கரிக்கின்றனர். குத்து விளக்கு ஏற்றிய பின்னர்ப் புதிய பானைக்கு மும்மூன்று குறிகளாக அதாவது திரிபுண்டரமாக விபூதியிட்டு சந்தனமும் குங்குமமும் சாத்துவர். பானையின் கழுத்திலே ஐந்து அல்லது ஏழு மாவிலை புதிய நூலாற் கட்டிப் பின்னர் மங்களத்துக்கு அறிகுறியாக மஞ்சள் இலையும் இஞ்சி இலையும் கட்டுவது வழக்கம். இதன் பின்னர்ப் பானையில் நீர்விட்டுக் கழுத்தளவு வரை பால்விட்டு, நெருப்பு மூட்டி பிள்ளையாரையும் பகலவனையும் வழி பட்டுப் புதிய பானையைப் புதிய அடுப்பில் ஏற்றுவர். பால் பொங்கிக் கிழக்கு அல்லது வடக்கு முகமாகப் பானையின் புறத்தே வடிந்து வழிந்தால் அஃது அவ் வீட்டினருடைய வாழ்வும் அந்த ஆண்டு முழுவதும் பொங்கிவருவதற்குரிய நற்சகுனமாகக் கொள்வது மரபு. இதனால் தை மாதப்பிறப்பு தமிழருக்குப் புதுவாழ்வின் தொடக்கமாகக் கருதப்பட்டது என்பது புலப்படும். எனவே தைமாதப் பிறப்பே தமிழருக்குப் புதிய ஆண்டின் பிறப்பாக இருந்திருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.

பால் பொங்கியதும் பருப்போடு கலந்த புதிய பச்சையரிசியை எடுத்து மூன்று முறை வலமாகச் சுற்றிப் பிள்ளையாரைக் கும்பிட்டுப் பானையில் இடுவர். பின்னர்ப் பாற்பொங்கலை மூன்று தலை வாழை இலைகளிற் படைப்பர். முதலாவது இலை பிள்ளையார் எனப் படும் விநாயகக் கடவுளுக்குரியது. இரண்டாவது இலை சூரிய பகவானுக்குரியது. மூன்றாவது இலை ''தேவர் தலைவன்'' என்றழைக்கப்படும் மருதநிலத் தெய்வ மாகிய இந்திரனுக்குரியது. எனவே இத்தகைய பாற் சோறு நாடோறும் தம் இல்லத்தில் யாவருக்கும் கிடைக்கவேண்டும் என்று, பழம்பெரும் பெருங்குடிமக் களாகிய சைவ சமயத்தவர்கள் இத்தெய்வங்களைக் கும்பிட்டு, திருமுறை ஓதி, பூப்போட்டுக் கும்பிட்ட பின்னர், உற்றார் உறவினர் மனைவி, மக்களுடன் உண்டு மகிழ்வர்.

இதுவுமல்லாமல், ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' என்ற சீரிய பண்பினைக் கைக்கொண்டொழு கும் தமிழ் உழவர் அக்கடமையினை முதற்கண் நிறை வேற்றும் பணியில் ஈடுபட்டு மாடுகளையும் குளிப் பாட்டிப் பொட்டிட்டுப் பூமாலை சூட்டி, அவற்றிற்கும் பொங்கலிட்டுப் பூசித்து மகிழ்கின்றனர். அந்தப் பெரு நாளே மாட்டுப் பொங்கலாய்த் திகழ்கின்றது. இனி மாடுகளின் கால்வழி பெருகுதற்கு மாட்டுப் பொங்கலை அடுத்துக் கன்றுப் பொங்கலைக் கொண்டாடுவர். கன்றுப் பொங்கலைக் கன்னிப் பொங்கல் என்றும் சொல்லிக் கன்னியர் கொண்டாடி மகிழ்வர். இவ்வாறு பல வகையிலும் மக்களைப் பழையன கழித்துப் புதியன புகுத்திப் புது வாழ்வில் புகச்செய்வது பொங்கற் பெருநாள். அவ் இனிய நன்னாள் அண்மையில் வர இருக்கின்றது. அதன்கண் பாற்பொங்கல் பாங்குறப் பொங்குவதுடன், சங்கச் சான்றோர் ஓரம்போகியார் தம் ஐங்குறுநூற்றுத் தமிழ் நடையைத் தழுவி, ''மாரி வாய்க்க; விளைக வயலே; நெல் பல பெருகுக; வளம் நவி வளர்க; பொன் பெரிது பூக்க; பால் பல ஊற; பகடு பல சிறக்க; பொங்கல் புது மனை வாழ்க்கை பொலிக; என்று நெஞ்சில் தேனோட அடுக்கி அடுக்கி எண்ணுவது பொருந்தும்.

சுப மங்களம்.


*நன்றி : ''காரை ஒளி'' திக்கரை முருகன் ஆறுமுகசுவாமி கும்பாபிஷேக மலர்*

*

HCPPA (UK) Sports secretary

## Mr. SOORIPPILLAI BALAKRISHNAN PASSES AWAY

Born : 31-7-52 Deceased : 21-12-08



Mr.Soorippillai Bala krishnan passed away due to short illness at the age of 56 on 21st Dec. 2008 at Newham Hospital, London, UK.

Mr Balakrishnan is the son of Soorippillai and Sinnamah, beloved husband of Vasuki, and loving father of Branavan, Banuja and Brakalathan. He is the loving brother of Balachandran, late Balasuntharam, Balayogan, Krishnathevi, Balasothi, Balendran, Balathe vidrathevi, Balasingam, Theivanayaki, Yogathevi and eldest son in law of Karthikesu and Parameswari and brother in law of Kantharuban, Sivaruban, Sivananthi Mathivathani and Bamathi.

Bala was born in Karaveddy East, on 31st July 1952. He Studied at Gnanasariyar school and then he followed his secondary education at Hartley College. After his higher education he worked at Air Lanka at Colombo and Abudabi. Then he moved to London and worked as Employment Initiative Advisor. He was an active member of Hartley College Past Pupils Association (UK) since its formation. He served as sports Secretary of HCPPA(UK) for the past three years. He also was very much involved Saiva Munnetra Sangam and their activities.

'Chuderoli' expresses its condolences to the breaved family.

## DIFFERENT PERSPECTIVES

# CAUSES FOR CONFLICT IN SRI LANKA

**JUSTICE C.V. WIGNESWARAN**

*(Abstract of the speech delivered at the Tamil Lawyers' Association at London on 10-8-08) - Editor*

*(Continued from last issue)*

Next, to say that the Tamils are living in amity among the Sinhalese today and it is a minuscule minority who are indulging in so-called terrorist activities is humour at its best. When you bomb the Northern and Eastern areas, naturally the people have to flee to safer areas. They live as minorities among the Sinhalese wherever they live in the South. Could you expect them to agitate for political rights among a Sinhalese majority environment? For protesting peacefully on the Galle Face Green against the discriminatory Sinhala Only Act in 1956, the Tamil leaders were pummeled and pushed into the Beira Lake. Naturally even today they have to live as slaves among the Sinhalese, not indulging in any seemingly hostile activities for fear they would be hounded out of their residences. Nevertheless let me tell you what happens in reality in these "amity living areas" like Colombo and its outskirts. You pay high advance, say for one year and sometimes "key money" in addition and take residence in a Sinhalese owned house. Before the end of one year the landlord would increase the rent double fold and ask that the increased rental in advance be paid at the end of the first year. If you argue, one telephone call to the Police that there is a Tiger in his house by the landlord could have you arrested and kept incommunicado for days and months. Unless you know someone of standing you may face a charge under section 5 of the Prevention of Terrorism Act, about which draconian law I do not have time to discuss here today. Under Section 5, if you fail to inform the Police that you met a person suspected of indulging in terrorist activities, that is enough. You could be arrested. So the landlord says Mr. 'X' came to see his tenant. Mr. 'X' is a suspected terrorist he would say. No proof is necessary to show that Mr. X is a terrorist. He is suspected of being a terrorist by the landlord is good enough. The tenant is then apprehended and kept for days under the cover of investigation. So the question arises who will not live in 'amity' among the Sinhalese. Even if Tamils live in amity among the Sinhalese in the South, that only speaks well of the Tamils. But what have successive governments and the Sinhalese people done to inquire into the legitimate political grievances of the North Eastern Tamils and take remedial action? Very little.

**The Indian Point of view**

Now let us turn to the Indian perception. There are a number of wrong perceptions among the Indians - especially among the North Indians.

Firstly that the Tamil Tigers are a terrorist group. I would say they are a disciplined army of young Tamil youths. They did not start the cry for separation. That cry was the outcome of the unanimous decision of all major Tamil political parties who met and passed what is called the Vaddukoddai Resolution in 1976. The leaders, who fought for Tamil rights until then in a "passive resistance" manner, in an ahimsic way, came to the conclusion that separation was the only solution since successive Sinhalese Governments had let down the Tamils. It was similar to a decision by Udishtrar of the Pandavas after Krishna's mediation failed. It was not the ex-parte decision of some gun-toting desperados. Most of these young Tamil men and women in militant movements in Sri Lanka are extremely talented, clever youths who forewent their university education and consequently lucrative foreign employment to fight for freedom. Why would they prefer to take up a path of suicide fighting the State military when they could obtain lucrative jobs abroad? They may be brutal. But so is the Sri Lankan Government which from the 1970s sent an occupational Army of Sinhalese soldiers to the North who did not know the local language and thereafter to the East to indulge in State terrorism. I could give you instances of how delicately I dealt with some of those brutal indiscretions on the part of the armed forces when I was a District Judge cum Magistrate in the Northern and Eastern Provinces. But time does not permit it. Those who take up to violence and arms are always brutal, whether governmental forces or others. Therefore, brutality is not the hallmark of one side and not the other.

Next of the wrong perceptions of the Indians, specially among the members of the Bhaarathiya Janatha Party, is that Prabakaran, who leads the Tamil Tigers, is a Christian. He is not. I had to convince some of them that he is a practicing Hindu. His elder son has been named Charles Anthony in remembrance of a dear friend of his who lost his life in the war against the Government forces in the early days.

The other wrong perception is that Tamil Nadu Governments help financially and otherwise the Tigers to fight against the lawful government of the Sri Lankan State. That again is absolutely wrong. It was Indira Gandhi who helped initially. Then MGR as Chief Minister of Tamil Nadu with the blessings of the Central Government helped the Tigers financially. But thereafter the successive Tamil Nadu Governments had been scared of interference by the Central Government under Article 356 of the Indian Constitution and had therefore kept themselves aloof. If they surreptitiously try to help the Tigers the opposition in Tamil Nadu would pounce at the opportunity and make such a din and noise that the Central Government would be forced to intervene. So Tamil Nadu governments do not help the Tigers. Then how they get their arms and ammunition, they ask. As you know it is the Tamil diaspora in Western countries, in South Africa, in Singapore, in - Malaysia, in Australia and many other countries, most of whom ran away during the 1983 riots, who voluntarily finance the Tigers hoping one day they could return to the land of their birth and breathe their last there. The propaganda that the Tigers are "extorting" money from the Tamil diaspora is an exercise in semantics. You know more about it than I do. But I have met so many of my students and friends here and elsewhere who are doing well in these foreign countries, who want to come back to the land of their birth - to the Northern and Eastern provinces of Sri Lanka - not as second class citizens but as first class citizens. How could we come back as first class citizens unless we have a home of our own - they ask? Surely a militant organization need not 'extort' money from such persons.

Next is the murder of Rajiv Gandhi which is no doubt a sore point between the Sri Lankan Tamils and India. None of us condoned such an act. But now it seems to have been the outcome of grave and sudden provocation after certain startling revelations by Major General Harkirat Singh in his recent book "Intervention in Sri Lanka - The IPKF Experience Retold". He has enumerated three facts. Firstly the RAW, the spy network of India, began rearming the groups opposed to the Tigers even while the LTTE was being disarmed in August 1987. Secondly on September 11 th 1987 when Major General Harkirat Singh met Indian High Commissioner to Sri Lanka ,J.N. Dixit the latter had told him that the ultimate objective of the IPKF was to discredit the LTTE in the eyes of the local Tamil population. In this connection the Major General says as follows - (I quote) "I realized that these tactics (of the Indian Government) would not work since the Tamils had already understood that their aspirations for Eelam could be met only by the LTTE. Dixit then turned towards me and said, "General! Please ensure that the actions of the IPKF are in line with my discussions with the Prime Minister in Delhi. You should adopt a posture of gradual change from negotiations to coercion." (unquote)

These words speak for themselves. The Prime Minister in Delhi at that time was no other than Rajiv Gandhi himself. The son never understood the depth of feelings of the Tamil speaking people unlike the mother who, for whatever other strategic reasons may have shown cordiality towards the Tamil cause.

The third matter is shocking. Major General Singh says, (I quote) "On the night of 14/15th September 1987 I received a telephone call from Dixit directing me to arrest or shoot Prabakaran when he came for the meeting." ( unquote) This meeting was to talk settlement with Prabakaran. Arresting or killing a person coming. for negotiations or settlement has been frowned upon from the time of the Mahabharata. Major General Harkirat Singh refused to carry out Dixlt's order thus annoying those in the seats of power.

Again when 17 armed Tigers were arrested by the IPKF at sea in Jaffna and the Sri Lankan Government wanted them to be sent to Colombo for investigations, Dixit did not act prudently. He tried to comply with Colombo's unreasonable request. He did not show off his normal bragging and braggadocio. Unfortunately those youngsters took cyanide and all 17 young men ended their lives instead of facing the humility of being questioned by the Sri Lankan investigators.

So what took place to Rajiv Gandhi must be viewed from a proper perspective.

You don't trifle with youths fighting for freedom as if they are your back garden slaves. Those boys were reflecting the noble spirit of freedom of the Tamils of the North and East of Sri Lanka. In war the man who draws his gun first, wins. I would leave it at that but again stressing no one condoned Rajiv Gandhi"s murder. Rajiv Gandhi never understood the Sri Lankan Tamil problem. He was led up the garden path by the Sri Lankan Government. Yet, I say, killing him was not the answer for his foolhardiness. If only Rajiv Gandhi had retained G. Parthasarathy as his advisor instead of banking on Romesh Bandari, there might have been an early resolution to all our problems.

The other perception of the Indian community is that the LTTE is manipulated by the CIA. No one knows the manner and method of

working of this Intelligence Agency of the Americans. But there is no evidence that the CIA manipulates the LTTE. LTTE is a banned organization in America. The American Government until now has been giving military aid and education in a big way to the Sri Lankan military. It Is only in recent times that annoyance is being shown by America with regard to the open human rights' violations practiced by the present government against the Tamils. But let us not forget that India and America are very close now. Does it mean RAW is now manipulating the LTTE with the assistance received from the CIA? Answers to these questions could still be in the realm of conjecture.

But the Tigers, it must be remembered, are fighting the battle of the Sri Lankan Tamils. As Major General Harkirat Singh said, the Tamils of Sri Lanka genuinely feel that their aspirations could be met only by the L TTE because other groups who initially started with genuine fervour for freedom have all become handmaids of either successive Sri Lankan Governments or External Intelngence Organizations or foreign Governments enjoying many personal perks and privileges at the expense of the suffering of the North Eastern Tamils of Sri Lanka.

Destroying the Tigers would mean destroying the political aspirations of the Sri Lankan Tamils, however unpalatable such an opinion may sound to certain people, both Tamils and others.

The last of the Indian perceptions, which is a very important one, is that if you support the Tamils of Sri Lanka, the Tamils of India may want to separate. This is ridiculous. The DMK gave up its DRAVIDASTAN cry in the 1960s. The successive Indian Governments have not been discriminatory towards Tamil Nadu unless some internal political upheaval in Tamil Nadu necessiated certain actions by the Centre. Why should Tamil Nadu give up being a member of a successful, prosperous, strong and viable confederation of states to take upon itself the task of breaking up and suffering in the long run? The Kaveri waters have their origin in another state. Would Tamil Nadu separate and lose even the chance of going before the Supreme Court if Kaveri's waters are barred from flowing into Tamil Nadu? Why would Andhra Pradesh, Karnataka and Kerala want to join Tamil Nadu? This type of argument is ludicrous. They are planted by interested parties to discredit the struggles of the Tamils. We must not forget that in the later part of the 19th century and early 20th century the Jaffna Tamils competed with the best in Madras Presidency and made their mark in comparison in the fields of medicine, literature and grammar and even sports, to mention a few. Apart from Doctors and literary persons who were my relatives one of my uncles Arjuna Virasinghe captained the Hockey Team of Madras Presidency and later the Ceylon Team. There were many firsts earned by Ceylon Tamils at that time under the British. An aunt-in-law of my sister, who became the Principal of Saiva Mangayer Kalagam in Colombo later, was one of the first to obtain a British Degree among the Tamil women of that time. The first person to galvanise the support of the Hindus in Sri Lanka and Tamil Nadu against the Christian proselytizatlon process was Arumuga Navalar. All the concerns of the Vishva Hindu Parishad and other pro Hindu institutions of today were declared initially around the middle of the 19th century by Navalar.

So, why would Sri Lankan Tamils prefer to join up with Tamil Nadu? After all, we are capable of looking after ourselves. You the Tamil Diaspora, I am sure, are ever willing to help.

India forgets that Sri Lanka has a long heritage of Saivite Hindu culture.

Puranas say Ravana worshipped at the Koneswaram Temple. This temple in Trlncomalee has three temples one over the other. The present temple is about 60 years old. The one below it is about 1,000 years old. And the third one under the sea is over five thousand years old. Mike Wilson, a jet set Englishman who went to produce the film 'Ran Muthu Duuwa' in Trincomalee in the 1950s one day dived in the sea and saw the ancient Shivalingam probably earlier worshipped by Ravana. Within a few years he ended up as a Hindu Swami. A line drawn from Mt. Kanash southwards runs through Chithambaram, Koneswaram temple and ends with Kathirgaamam. Trincomalee is therefore called Dakshina Kailasham.India therefore should not forget its obligations towards the Hindus of Sri Lanka if not for anything else.

So I would submit India has a wrong perception of the problems in Sri Lanka.

By helping a government that is hell-bent on destroying the Tamil speaking people India would be helping the Sri Lankan Buddhists vast majority of whom have ceased to practice Buddhism against genuine Hindus. The Sri Lankan Tamils are not interested in bifurcating India. Doing so would only affect their chance of survival and well-being. On the other hand a closer approach to the problems of the Sri Lankan Tamils by India and its peoples would enlist the support of a grateful nation of Tamils who are at present being decimated by a heartless Sinhala Buddhist regime.

*(to be continued)*

நூல் அறிமுகம்

# முனைவர் வெற்றிச் செல்வனின்
# 'திசையெல்லாம் தமிழ்க் கவிதை'

**ஆர். நல்லகண்ணு,** இந்தியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்

''திசையெல்லாம் தமிழ்க் கவிதை'' என்ற நூலைப் படித்தேன். தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் முனைவர் தெ. வெற்றிச் செல்வன் ஏழாண்டுகள் முயற்சி செய்து ஆய்வு நூலாக வெளியிட்டிருக்கிறார்.

புலம்பெயர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் புகலிடம் தேடிச்சென்ற இலங்கைத் தமிழ் மக்கள் படும் மானிடத் துயரங்களாக உயிர்த்துள்ள பல கவிதைகளைத் தன் ஆய்வுக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதில் மூன்று கவிதைகளைப் படிக்கும்போது, என் நெஞ்சு வலித்தது. உடல் முழுவதும் உதறலெடுத்தது.

*'யாழ் நகரில் என் பையன்*
*கொழும்பில் என் பெண்டாட்டி*
*வன்னியில் என் தந்தை*
*தள்ளாத வயதினிலே*
*தமிழ்நாட்டில் என் அம்மா*
*சுற்றம் பிராங்போர்ட்டில்*
*ஒரு சகோதரியோ பிரான்சு நாட்டில்*
*நானோ*
*வழிதவறி அலாஸ்கா வந்துவிட்ட*
*ஒட்டகம் போல் ஓஸ்லோவில்*
*என்ன நம் குடும்பங்கள்?*
*காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும்*
*பஞ்சுத் தலையணையா?''*

பிராங்போர்ட் ஜெர்மனியிலுள்ளது. ஆஸ்லோ நார்வே தலைநகர் (ஜெயபாலன் கவிதைகள்)

பெண்ணின் வெதும்பல்

*''அன்று*
*கூலிப்படை*
*எனதுடலைப்*
*பதம்பார்த்துப்*
*பின்பு*
*அந்நிய இராணுவம்*
*தன்னைத் திருப்தி செய்தது*
*இவை யாவும்*
*தாய்நாட்டில்*
*...*
*பிராங் போர்ட்டில்*
*வந்திறங்கியும்*
*ஐரோப்பிய சுகத்தில்*
*விரக்தியுற்றவர்கள்*
*தமது கைவரிசையை*
*இங்கும் காட்டத் தவறவில்லை'*

(பாமினி - எழுதிய மறையாத மறுபாதி)

*''ஐந்து வருடங்கள்*
*மனைவியுடனும் சின்ன மகனுடனும்*
*கடிதத்தில் குடும்பம் நடத்தும்*
*என் நண்பன்*
*எட்டு வருடங்கள்*
*தாயின் முகத்தைக்*
*கடிதத்தில் தேடும்*
*என் மச்சான்*
*கடிதங்களில் வாழும்*
*மனிதர்களானோம்''*

கவிஞர் செல்வம் எழுதிய (புலம்பெயர்ந்தோர் கவிதை)

அக்டோபர் 2ஆம் நாள் - மகாத்மா காந்தியடிகளின் 140ஆவது ஆண்டு பிறந்த நாள் - இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வல்ல. அரசியல் தீர்வு காண வேண்டும். இந்திய அரசு அதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநோன்பு நடத்தப்பட்டது. மதுரை, புதுக்கோட்டை, இரண்டு நகர்களிலும் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது. அப்போது இக்கவிதை வரிகளையும் வாசித்துக் காட்டினேன். அனைத்து நண்பர்களும் - கவிதைகளின் கருத்துகளை உள்வாங்கிக் கொண்ட உள்ளுணர்வு முகங்களில் வெளிப்பட்டது.

ஆய்வு நூலில் எடுத்தாளப்பட்டிருக்கும் கவிதைகள் அனைத்தும் மகாகவி பாரதியின் பாடலை நினைவுக்குக் கொண்டு வந்தது. 1910 ஆவது ஆண்டுகளில் பீஜித் தீவிலுள்ள கரும்புத் தோட்டத்தில் தமிழ்ப் பெண்கள் பட்ட துயரப் பாடலின் தொடர் நீட்சியாகவும் நினைவுக்கு வருகிறது.

*'நாட்டை நினைப்பாரோ? - எந்த*
*நாளினிப்போயதைக் காண்பதென்றே அன்னை*
*வீட்டை நினைப்பாரோ? - அவர்*
*விம்மி விம்மி விம்மி விம்மி யழுங்குரல்*
*கேட்டிருப்பாய் காற்றே! - துன்பக்*
*கேணியில் எங்கள் பெண்கள் அழுதசொல்*
*மீட்டும் உரையாயோ? - அவர்*
*விம்மி யழவுந் திறங்கெட்டுப் போயினர்'*

(கரும்புத் தோட்டத்திலே)

19ஆவது நூற்றாண்டில் மொரிசீயசு, ஆப்பிரிக்கா, பீஜித் தீவு, இலங்கை போன்ற நாடுகளுக்கு இந்திய நாட்டிலிருந்து கிராமப்புற ஏழைகளையும், பழங்குடி மக்களையும் ஒப்பந்தக் கூலிகளாக வலுக்கட்

டாயமாக ஆசைகாட்டிக் கப்பல்களில் அழைத்துச் சென்றார்கள். பீஜித் தீவில் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்து வந்த தமிழ்ப் பெண்கள் பட்ட துயரங்களை நினைத்து வேதனைப்பட்டார். மாபெரும் கவிஞனான தால் உழைக்கும் பெண்களின் உள்ளக் குமுறலும், அழு குரலும் காற்றின் மூலம் தமிழ் நாட்டில் கேட்டுக் கதறுகிறார்.

ஈழத் தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளை இந் நூலாசிரியர் ஆழமாக ஆய்வு செய்திருக்கிறார்.

புலம் பெயர்ந்த மக்களின் துயரங்கள், மகாகவி பாரதியின் மூலமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கச் சுரண்டலின் கொடுமையை வெளிப்படுத்தப்பட்டது.

மதக்கலவரங்கள் நடந்தபோது, இந்து-முசுலிம் மக்கள் வெவ்வேறு முகாம்களில் அகதிகளாகத் தங்க வைக்கப்பட்டார்கள். இருபுறத்தாருக்குள்ளும் மொழி ஒன்றாக இருந்தது.

இவ்வரலாற்று நிகழ்வுகளின் பின்னணியில், புலம் பெயர்ந்தோருக்கும், புகலிடம் தேடிய அனைவருக்கும் உள்ள நுண்ணிய இடைவெளியை ஆய்வாளர் மிக நுட்பமாக இனம் பிரித்துக் காட்டியிருக்கிறார். இது ஒரு புதிய ஆய்வுத்தளமாகத் தமிழில் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது, வரவேற்கக்கூடியது; பாராட்டப் பட வேண்டியதாகும்.

ஆய்வாளர் வெற்றிச் செல்வன் இலக்கிய ஆய்வோடு நிறுத்திவிடாமல், உலக அளவில் ஏற்பட்டு வரும் இனமோதல்களில் மனித சமுதாயம் படும் இன்னல்களையும் வேதனைக் குமுறல்களையும் ஆய்வுத் தளமாகக் கொண்டிருக்கிறார். இத்தகைய கள ஆய்வின் மூலம், தனது ஆய்வுரைக்கு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்கிறார்.

''சமூகத்தின் உச்சபட்சக் கொதிநிலையில் இலக்கியத்தின் உடனடி நிகழ்வாக வெளிப்படுவது கவிதை வடிவமாகும். கவிதைக்கான புதிய பாடு பொருளும், அதன் காரணமாகப் பல புதிய படிமங்களும், குறியீடுகளும் முற்றிலும் மாறுபட்ட தொனி முறைகளும், அழகியல் வெளிப்பாடுகளும், இந்தக் கால கட்டத்தில் கவிதை இலக்கியத்தில் வீச்சான பாய்ச்சல்களை முன்னெடுத்தன எனலாம். பாலஸ்தீனக் கவிதை கறுப்புக் கவிதை, (Black Poem) ஈழத் தமிழ்க் கவிதை, புகலிடத் தமிழ்க் கவிதை என முன் மாதிரிகள் நீள்கின்றன' என்ற நூலின் நுழைவாயில் எனும் பகுதியில் வரையறுத்துக் கூறியிருப்பது மிகச் சரியான அணுகுமுறையாக உள்ளது.

பாடு பொருளுக்கும் உள்ளடக்கத்துக்கும் இணைந்து இசைவான உருவமைப்பும் தோன்றி வருவதை இயக்கவியல் அடிப்படையில் தெளிவாக வரையறுத்துக் கூறியிருக்கிறார்.

''பா வடிவங்களாக ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா, விருத்தப்பா, பரிபாடல், வசனக் கவிதை, புதுக் கவிதை, இன்றைய நவீனக் கவிதை வரை ஒரு வளர்ச்சிப் போக்கு காணப்படுகிறது' என்றும் இவற்றின் நீட்சியாகத்தான் புகலிடக் கவிதையைப் பார்க்க முடிகிறது' என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறது.

முனைவர் த. வெற்றிச் செல்வனின் ''திசையெல்லாம் தமிழ்க் கவிதை'' எனும் ஆய்வு நூல் தமிழ் இலக்கிய ஆய்வில் புதிய தளத்தை அடையாளம் காட்டியுள்ளது. பரந்து பட்ட உலக நாடுகளில் புகலிடம் தேடி அலைந்து திரியும் ஈழத் தமிழ் மானிடப் பறவைகளின் அலறல் ஒலிக்கு ஓர் இலக்கிய உருவமாகப் புகலிடக் கவிதையை அடையாளம் காட்டியிருக்கும் முனைவர் வெற்றிச் செல்வனைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். ✱

*நன்றி : தீக்கதிர் இதழ்*

## ''மண்'' சஞ்சிகை அறிமுகம்

ஜேர்மன் நாட்டிலிருந்து வெளிவரும் இச் சஞ்சிகை, கலை இலக்கிய சமூக இருமாத இதழாகக் கடந்த 18 வருடங்களாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

இலக்கியச் சாரல், சிறுகதை, கட்டுரை, உலக வலம், விளையாட்டுச் செய்திகள், சிறுவர் வட்டம், கவிச்சோலை, செய்திக் கண்ணோட்டம், குறளும் பொருளும், அறிவியல் தகவல்கள், சிறுவர் போட்டிகள், துயர்துடைப்போர் ஆதரவற்றோர் நிதி ஆகிய பல்வேறு விடயங்களுடன் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

இலக்கிய உலகில் ஒரு வித்தியாசமான முறையிலும் தனித்தன்மை கொண்டதாகவும் எல்லோருக்கும் பயன்படக் கூடிய பல்துறை விடயங்களும் ''மண்'' இதழில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இச்சஞ்சிகை ஊடாகத் தமிழர் தாயகத்தில் அல்லல்படும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு நிதி திரட்டும் அரும்பணியையும் ஆற்றிவருவது பாராட்டுதலுக்குரியது. இதுவரை 43,997,35 ஜேர்மன் மார்க்குகளையும், 15600,00 யூரோக்களையும் நேரடியாக அனுப்பி வைத்துள்ளது.

**ஈழத்தின் இணைய நூலகம்**

**www.noolaham.net**

**இப்பொழுது 1900க்கும் அதிகமான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், பிரசுரங்களுடன்**


# SRI ATHIPARA SAKTHI JYOTHISHYALYAM

## S.P. Sriram Guruji Aadivasi Mukkiya

## WORLD FAMOUS SPECIAL ASTROLOGIST





**இந்தியாவின் ஸ்ரிகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள பயங்கர வனத்தில், மூன்று குருமார்களின் வழிகாட்டுதலோடு 5 வயது முதல் கடும் விரதம் இருந்து, கடும் பயிற்சி செய்து குரு மந்திரங்கள் மூலம் பில்லி, சூனிய நிவர்த்தி ஆகியவற்றைக் கற்று, 10 வருடத்திற்கு மேல் ஜோதிட அனுபவம் உள்ள ஸ்ரீ ஆதிபராசக்தி அருள் கொண்டு பல வெளிநாடுகள் சென்று மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வருகிறார். உத்தியோக பிரச்சினை, குடும்ப விவகாரம், நிதி நிலை விவகாரம், எதிரிகள் தொல்லை, விசா பிரச்சினை, வியாபார குறைபாடுகள், அத்தோடு மனப்போராட்டங்களையும் போக்கச் செய்வார். இவர் பல நாடுகள் சுற்றி இலண்டன் வந்துள்ளார். சில காலம் இங்கு இருப்பார். உங்களுடைய பிரச்சினைபளை கூறிப் பரிகாரம் தேடுங்கள். திருமணப்பிரச்சினை, காதல் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும்.**

I came from Srikakulam District in India. I trained by three Gurujis in dangerous forest from 5 years old. I had severe prayers and learning experience for jothidams, vashthu for ten years. You will come to know about your past, present and future by hand-prediction, horoscope intending persons may contact for job, family matters, husband and wife relationship, love, education, business, choice of stones, marriage, sickness, promotions, family problems, children problems, visas, abroad, money etc. Witch Craft will be cleared by performing poojas and Devi Upasans. Lakshmi Pooja, prayers and protection from enemies. **Spoken Languages: Tamil, Telugu, Hindi & English**

# ONE STOP BARGAIN SHOP

**218, High Street, North Eastham E6 2JA (Near Eastham Tube Station)**
**Tel: 020 8471 1042, Mobile: 07918 808 855, 07506 933 790**

**Opening Hours: 9.00 am - 8.00 pm - Seven days a week**

# வாழ்க புதுமணத் தம்பதிகள்



அமைதியாக, அடக்கமாகத் தமிழ் இனத்தின் விடுதலைக்குப் பங்காற்றிவரும்
தமிழ் உணர்வாளர் திருநிறை செல்வன் **சிவரஞ்சன்** அவர்களுக்கும்
அவரது கொள்கைகளுக்கு இணைந்து இல்லறம் நடத்த விரும்பிய
திருநிறை செல்வி **நிசாந்தி** அவர்களுக்கும்
பேர்மிங்காம் ஸ்ரீ வெங்கடேஸ்வரர் பாலாஜி ஆலயத்தில்
01.11.08 அன்று திருமணம் சிறப்புடன் நடைபெற்றது.

பல சமய, சமூக, அரசியல் பிரமுகர்கள் வருகை
தந்து தம்பதிகளை வாழ்த்தி ஆசீர்வதித்தனர்.

தம்பதிகள் எல்லா வளமும் பெற்று பல்லாண்டு வாழ்ந்து
தமிழினத்திற்கு நற்பணியாற்ற வேண்டுமென
சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினர் வாழ்த்துகின்றனர்



# சுடரொளி ஆசிரியரைப் பாராட்டி ஆசி வழங்கும் மதுரை ஆதினம்







அண்மையில் தமிழகத்திற்கு வருகை தந்த இலண்டன் சுடரொளி ஆசிரியர் ஐ.தி. சம்பந்தன் அவர்கள், ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு நல்கிவருகின்ற மதுரைமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத பரமாசாரிய சுவாமிகளை நேரில் சந்தித்தார். மதுரை ஆதின சுவாமிகள் அவருக்குப் பொன்னாடை அணிவித்து, பாராட்டுகளைத் தெரிவித்து நல்லாசி வழங்கினார். சுவாமிகளுக்கு இலண்டன் சுடரொளி இதழ் வழங்கப்பட்டது. மதுரைக் கவிஞர் இரா. இரவி உடன் இருந்தார்.



கானக் குயில் விழாவில் அதன் இயக்குநர் தில்லைநாதன் திருமதி. யோகா தில்லைநாதன் ஆகியோருடன் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள்

# கனடாவில் அண்ணா அஞ்சல்தலை வெளியீடு







திராவிட முன்னேற்றக் கழக ஸ்தாபகரும் தமிழக முன்னாள் முதல்வருமான பேரறிஞர் அண்ணா நூற்றாண்டை முன்னிட்டு ரொறன்ரோ-கனடாவில் அண்ணா அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

லிபரல் கட்சியைச் சேர்ந்த ஸ்காபரோ எஜின்கோட் பாராளுமன்ற உறுப்பினர் தமிழ்மக்களின் அன்பர் கௌரவ ஜிம் காரிஜியானிஸ் அவர்கள் முதலாவது அஞ்சல் தலையினை தமிழன் வழிகாட்டி அதிபர் திரு செல்லையா செந்தியிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

'பழம் பெரும் ஜனநாயகவாதி ஒருவருக்கு அஞ்சல் தலை வெளியிடுவதில் கனடிய மண் பெருமை கொள்கிறது' என இவ்வைபவத்தின் போது பேசிய திரு ஜிம் காரிஜியானிஸ் குறிப்பிட்டார்.

மேற்படி வைபவம் கனடா-ரொறன்ரோவில் அமைந்துள்ள உலகின் மிகப்பெரிய வர்த்தகக் கைநூல் வெளியீட்டாளர்களான ஆதவன் பப்பிளிக்கேசன் நிறுவன அலுவலகத்தில் 20.12.2008 நடைபெற்றது.

வெளியீட்டின் போது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் சமூகசேவையாளர் பிரான்சிஸ் சேவியர் ரஞ்சன் அவர்களால் கௌரவிக்கப்பட்டார்.

# பெங்களூரில் ஈழத் தமிழர் ஆதரவுப் பொதுக்கூட்டம்

இந்தியாவின் தென்மாநிலங்களில் ஒன்றான கருநாடகத்தின் தலைநகரான பெங்களூரில் ''ஈழத் தமிழர்களின் இன்றைய நிலை'' எனும் தலைப்பில் 30-11-08 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் நடத்திய இப் பொதுக்கூட்டம் பெங்களூர்த் தமிழ்ச் சங்க அரங்கில் நடைபெற்றது. பெங்களூர்த் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்வேறு தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த தமிழ் உணர்வாளர்கள் கலந்துகொண்டு, சிங்கள அரசின் காட்டுமிராண்டித்தனத்தையும், இனப்படுகொலைக்குத் துணைபோகும் இந்திய அரசின் துரோகத்தையும் கண்டித்துக் கண்டன உரையாற்றினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சிறப்புரையாற்ற, தமிழக சட்டமன்ற முன்னாள் அவைத் தலைவரும், தமிழீழ ஆதரவாளருமான கவிஞர் புலமைப்பித்தன் நிறைவுரையாற்றினார்.

எம்.கே. சிவாஜிலிங்கம் தனது உரையில், தமிழீழத்தில் சிங்களப் பேரினவாதிகளின் கொடூர போர் மற்றும் போரினால் ஈழத்தமிழர் படும் இன்னல்கள் குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

மேலும், தற்போது ஈழத்தில் சகோதரப் போர் என்ற பேச்சுக்கே இடமில்லை. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் அமைச்சர் பதவிக்காக சிங்கள ஆட்சி யாளர்களின் கால் நக்கிப் பிழைக்கும் டக்ளஸ் தேவா னந்தா தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் தங்களின் பிரதிநிதியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை மட்டுமே ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஒட்டுமொத்த ஈழத் தமிழினமே தங்களின் பிரதி நிதியாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை மட்டுமே ஏற்றுக் கொண்டுள்ளனர் என உரையாற்றினார்.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் பெய ரைக் குறிப்பிட்டுப் பேசியபோதெல்லாம், அரங்கில் கர வொலி அடங்க வெகுநேரமாகியது.

கவிஞர் புலமைப்பித்தன் தனது உரையில், சிறீமாவோ ஒப்பந்தம், கச்சத்தீவு ஒப்பந்தம் மற்றும் இராஜீவ்-ஜெயவர்த்தன ஒப்பந்தம் என அனைத்து ஒப்பந்தங்களிலும் இந்தியாவின் பாதுகாப்பிற்காகத் தமிழினம் பலிக்கடா ஆக்கப்பட்டதைப் பட்டியலிட்டுப் பேசினார்.

மேலும், காந்தியாரைக் கொன்ற கோட்சேயின் ஆர்.எஸ்.எஸ். இயக்கம் தடை நீக்கப்பட்டு, பாரதீய ஜனதாவாக உருமாற்றம் பெற்று ஆட்சியைப் பிடித்த தோடு, கோட்சேயின் குரு சாவர்க்கருக்கு இந்திய நாடாளுமன்றத்திலேயே படம் திறக்கப்பட்ட போது காங்கிரசுகாரர்கள் எங்கே போனார்கள்?

இந்திரா காந்தியைக் கொன்ற சத்வந்த்சிங்கு, பியாந்த்சிங்கு ஆகியோர் சீக்கிய இனத்தின் தியாக சீலர்களாகப் போற்றப்படுகின்றனர். அதே சீக்கிய இனத்தைச் சேர்ந்த மன்மோகன்சிங்கு பிரதமராகவும் உள்ளார். இராஜீவ் கொலையை மட்டும் மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம் என்று யாரைத் திருப்திப்படுத்த கதரணிந்து இனமாற்றம் (Racial Conversation) செய்து கொண்ட காங்கிரசுகாரர்கள் கொக்கரிக்கின்றனர்?

பிரெஞ்சு அரசு தலைவர் இந்தியாவிற்கு வந்த போது, சீக்கியர்களின் தலைப்பாகை பற்றிப் பேசும் மன் மோகன் சிங்கே, எங்கள் தமிழர்களின் தலைக்காக நாங்கள் குரல் கொடுப்பது தவறா? என அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினார்.

கூட்டத்தின் இறுதி நிகழ்வாக, ''எமக்காகவும் பேசுங்களேன்'' எனும் இறுவட்டு காண்பிக்கப்பட்டது. சிங்களப் பேரினவாதத்தின் போர்க் கொடூரங்களைக் கண்டு கலங்கிய கண்களுடன் அரங்கை விட்டு மக்கள் வெளியேறினர். *

## பாடகர்களை வளர்க்கும் 'கானக் குயில்'

கடந்த 16 ஆண்டுக் காலமாகக் 'கானக்குயில்' நிகழ்ச்சி மூலம் பல இளம் பாடகர்களை இலண் டனில் உருவாக்கிவரும் திருமதி யோகா தில்லை நாதன் அவர்கள் அண்மைக் காலமாக இளம் பாடகர் களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகின்றார்.

ஆண்டுதோறும் நடைபெறும் 'கானக்குயில்' நிகழ்ச்சியைக் கண்டு களிக்க மண்டபம் நிறைந்த இரசிகர்கள் கூட்டம் இந்த ஆண்டு வருகை தந்தது அந்நிகழ்ச்சியின் சிறப்பு அம்சம்.

இவ்வாண்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம். பலருக்கு ரிக்கற் கிடைக்காமல் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது என்றால் 16 ஆண்டுக் கால வளர்ச்சியின் உயர்ச்சி யையே காட்டுகிறது.

# உலகத் தமிழர்களை மீண்டும் ஒரு முறை நம்பவைத்து ஏமாற்றிவிட்டார் கருணாநிதி

பழ. நெடுமாறன்

உலகத் தமிழர்களை மீண்டும் ஒருமுறை நம்பவைத்து ஏமாற்றிவிட்டார் கருணாநிதி என்பதுதான் வேதனை என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆனந்த விகடன் (12-11-08) வார இதழுக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

**முதல்வர் கருணாநிதி கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நீங்களும் கலந்து கொண்டீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகல் முடிவு எடுக்கப்பட்டது. இப்போதோ, அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொடுத்த வாக்குறுதிகள் திருப்திகரமாக இருந்தன என்கிறார் கருணாநிதி. உங்களுக்கும் திருப்தியா?**

''இது தனிமனிதர்களின் திருப்தி சம்பந்தப்பட்ட விவகாரம் அல்ல. ஓர் இனம் நிம்மதியாக ஈழத்தில் வாழ வழி பிறந்ததா என்பதுதான் முக்கியம்.

அன்று அனைத்துக் கட்சிக்கூட்டத்தில் பேசிய அனைவரும், இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டும். இந்தியா அந்த நாட்டுக்கு எந்த வகையிலும் இராணுவ உதவிகள் வழங்கக் கூடாது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உணவு மற்றும் மருந்துகளை வழங்க வேண்டும் என்றுதான் சொன்னார்கள். அதை முதலமைச்சரும் ஏற்றுக் கொண்டார். அதையே தீர்மானமாகவும் கொண்டு வந்தார். 15 நாள்களுக்குள் இதைச் செய்யவில்லையானால், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகுவார்கள் என்று அனைவர் ஒப்புதலுடன் தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானம், அதன் நோக்கத்தை நிறைவேற்றி இருந்தால், வரலாற்றில் என்றென்றும் பேசப்பட்டிருக்கும்.

ஏனென்றால், கடந்த 40 ஆண்டுக் காலத்தில் ஈழப் பிரச்சினை தொடர்பாக எத்தனையோ போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், அனைத்துக் கட்சிக் கூட்டங்கள், தில்லி சந்திப்புகள் நடந்துள்ளன. ஆனால் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாகப் பதவி விலகச் செய்வார்கள் என்று எடுக்கப்பட்ட முடிவு எடுப்பது இதுதான் முதல் முறை.

அப்படிச் செய்திருந்தால், மத்திய அரசாங்கம் கவிழ்ந்து போகும். அந்த முடிவைக் கேட்டு உலகமெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் பெரும் நம்பிக்கை கொண்டார்கள். தில்லியும் அதிர்ச்சி அடைந்தது. கொழும்பில் இருக்கும் சிங்களக் கட்சிகள் அச்சப்பட்டன. ஆனால், அனைத்தும் வீணானதுதான் பிரணாப் முகர்ஜி சந்திப்பால் கண்ட பலன்!''

**கருணாநிதியின் பதவி விலகல் அறிவிப்பு, போராட்டங்களால்தானே சிறிலங்கா அரசின் தூதுக்குழு தில்லி வந்தது. அது சாதகமானதுதானே?**

''அதனால் என்ன பயன் ஏற்பட்டது? இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவை அனுப்பப் போவதாக சிறிலங்கா அறிவித்தது. ஆனால், அமைச்சர்கள் யாரும் வரவில்லை. இந்தியா போன்ற பலம் வாய்ந்த வல்லரசு நாடு அழைக்கும்போது, சிறிலங்காவின் அரச தலைவரோ, பிரதமரோ, தில்லிக்கு வந்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் வெளிநாட்டு அமைச்சராவது வந்திருக்க வேண்டும். ஆனால், பிரதமரின் ஆலோசகர் என்ற பொம்மைப் பதவியில் இருக்கும் பசில் ராஜபக்ச இங்கு அனுப்பப்பட்டார். வல்லரசான இந்தியாவைச் சின்ன நாடான சிறிலங்கா அதிகார பூர்வமாக அவமானப்படுத்தியது.

முடிவெடுக்கும் எந்த அதிகாரமும் இல்லாத பசில் ராஜபக்சவை அனுப்புவதன் மூலம் இந்தியாவின் தலையீட்டை நாங்கள் விரும்பவில்லை என்று சிறிலங்கா வெளிப்படையாகச் சொல்லிவிட்டது. மூன்றாம் தரமான ஒரு நபர் அனுப்பப்பட்டபோது, அவரை மூத்த அமைச்சரான பிரணாப் முகர்ஜி சந்திக்கலாமா? மகிந்த ராஜபக்சவின் ஆலோசகரைச் சந்திக்க மன்மோகன்சிங்கின் ஆலோசகர்தாம் போயிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், தமிழர்கள் விவகாரத்தில் இந்தியா கடுமையாக இருக்கிறது என்பதையாவது சிறிலங்கா உணர்ந்திருக்கும்!''

**பிரணாப் முகர்ஜியின் சென்னை வருகையாலும் எந்தப் பயனும் இல்லை என்கிறீர்களா?**

முதல்வர் கருணாநிதியைச் சந்தித்த பின், நிருபர்களைச் சந்தித்தார் பிரணாப் முகர்ஜி. போர் நிறுத்தம் பற்றியோ, சிறிலங்காவுக்கு இந்தியா செய்துவரும் இராணுவ உதவிகள் பற்றியோ எதையும் அவர் பேசவே இல்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இந்த இரண்டு தீர்மானங்களைப் பற்றி அவர் வாயே திறக்கவில்லை. எதை வைத்துப் பிரணாப் முகர்ஜி கூறியது தனக்குத் திருப்தி தருவதாகக் கருணாநிதி சொல்கிறார் என்றும் புரியவில்லை. அப்படிக் கருணாநிதி சொல்வதே. அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் முடிவுகளுக்கு எதிரானதாகும்.

அனுபவமிக்க முதலமைச்சரான கருணாநிதி என்ன செய்திருக்க வேண்டும்? இது அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து முடிவெடுத்த தீர்மானம். இதில், நானாகத் தனிப்பட்ட முறையில் முடிவெடுக்க முடியாது. எனவே, மீண்டும் அனைத்துக் கட்சிகளையும் கூட்டி இது குறித்து விவாதித்து, எங்கள் முடிவை உங்களுக்குச் சொல்கிறேன் என்றுதான் பிரணாப் முகர்ஜியிடம் சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லாததால், அன்று எடுக்கப்பட்ட முடிவுகள் கருணாநிதியால் அர்த்தமற்றதாக்கப்பட்டு விட்டன. உலகத் தமிழர்களை மீண்டும் ஒரு முறை நம்பவைத்து ஏமாற்றிவிட்டார் கருணாநிதி என்பதுதான் வேதனை!''

**40 ஆண்டுப் பிரச்சினையை 4 நாள்களில் தீர்த்துவிட முடியாது என்கிறாரே அவர்?**

''இது வேதனை தரத்தக்க பதில்!

40 ஆண்டுப் பிரச்சினையைத் தீர்க்க நாளாகும் என்பது உண்மைதான். ஆனால், போரை நிறுத்துங்கள் என்று சொல்லி நிறுத்த, சில மணி நேரமே போதும்.

சிங்களவர் கைவசம் இருந்த ஆனையிறவு முகாமைக் கைப்பற்றிய புலிகள், யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறினார்கள். அங்கு 30 ஆயிரம் சிங்கள இராணுவ வீரர்கள் அப்போது இருந்தார்கள். புலிகள் முன்னேறியிருந்தால், சிங்கள இராணுவ வீரர்கள் மொத்தமாக அழிந்திருப்பார்கள். அப்போது இந்தியா தலையிட்டுப் புலிகளை முன்னேற வேண்டாம் என்று கேட்டுக்கொண்டது. புலிகளும் சம்மதித்தார்கள்.

அன்று, சிங்களச் சிப்பாய்களைக் காப்பாற்று வதற்காகப் புலிகளிடம் கோரிக்கை வைக்கத் தெரிந்த இந்தியாவுக்கு, இன்று அப்பாவித் தமிழர்களைக் காப் பாற்றப் போர் நிறுத்தம் செய்யவைக்க சில நிமிடங்கள் போதாதா? எவ்வளவு வேதனையான பதில்!''

**ஒரு நாடு, பக்கத்து நாட்டுக்கு இராணுவ உதவி செய்வது சாதாரணமானதுதான் என்கிறாரே பிரணாப்?**

''சாதாரண காலத்தில், சாதாரணமாக உதவி செய்யலாம். ஆனால், ஒரு நாட்டில் உள்நாட்டுப் போர் நடந்துகொண்டு இருக்கும்போது ஒரு தரப்புக்கு மட்டும் ஆயுத உதவிகள் செய்வது எப்படிச் சரியாக இருக்க முடியும்?

காஷ்மீரில் இராணுவத்துக்கும் சில அமைப்பு களுக்கும் தொடர்ந்து சண்டை நடக்கிறது. அந்த அமைப்புகளுக்குப் பாகிஸ்தான் உதவி செய்வதை இந்தியா குற்றம் சாட்டுகிறது. ஆனால், இலங்கையில் சிங்களவர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்துத் தமிழர் களைக் கொல்ல இந்தியா உதவி செய்கிறது. பிறகு எப்படிப் பாகிஸ்தானை இந்தியா குற்றம் சாட்ட முடியும்?''

**பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவிப் பொருள்கள் அனுப்ப முதல்வர் எடுத்து வரும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கதுதானே?**

''மருந்து மற்றும் உணவுப் பொருள்களைச் சேகரிக்கலாம். ஆனால் யார் மூலமாகக் கொடுப்பீர்கள்? சிறிலங்கா அரசாங்கத்திடம் கொடுப்போம் என்பது தெரிந்தே செய்யும் தவறு. தமிழர் பகுதியில் இருந்த செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா. தொண்டு அமைப்புகளை வெளியேற்றியவர்கள் அவர்கள். எனவே, நாம் அனுப்பும் பொருள்கள் தமிழர்களுக்குப் போய்ச் சேராது. விரக்தி யாக இதைச் சொல்லவில்லை. அனுபவ உதாரணம் இருக்கிறது.

ஆழிப் பேரலையால் பல ஆயிரம் தமிழர்கள் இறந்தார்கள். மிகப்பெரிய அளவில் அழிவும் ஏற்பட்டது. இதற்கு உலக நாடுகள் பல்லாயிரம் கோடி பணத்தைக் கொட்டியது. இந்தப் பணத்தை வைத்து நிவாரண உதவிகள் சரியாக நடக்கின்றனவா என்று பார்க்க, நோர்வே நாட்டைத் தலைவராக ஏற்று, சிங்களப் புலிகள் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக நியமிக்கப் பட்டார்கள். ஆனால், அதைச் சந்திரிகா ஏற்கவில்லை. ஒரு கைப்பிடி உதவிப் பொருள்கள்கூடத் தமிழர் பகுதிக்குள் வரவில்லை.

ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்க வந்தபோது, தமிழர் பகுதிக்குள் செல்ல சிறிலங்கா அரசாங்கம் விடவில்லை. அப்படிப்பட்டவர்களிடம் பொருளைக் கொடுத்தால், தமிழர்களுக்குக் கொடுக்கமாட்டார்கள். எனவே, நாம் அனுப்பும் பொருள்களைச் செஞ்சிலுவைச் சங்கம், ஐ.நா. அமைப்பு மூலமாகத்தான் வழங்க வேண்டும். அதைத் தமிழகக் குழு கண்காணிக்க வேண்டும்.

**தமிழர் தாயகம், சுயநிர்ணயம் ஆகிய வார்த்தைகளைப் பயன்படுத்தி ஜெயலலிதா முதலில் அறிக்கை விட்டார். மறுநாளே மாறி அறிக்கை விட்டாரே?**

''தமிழ் மக்களின் கொந்தளிப்பைப் பார்த்து முதலில் அப்படி அறிக்கை விட்டார் ஜெயலலிதா. மத்திய உளவுத்துறை அதிகாரிகள் வந்து அவரைப் பார்த்தார் கள். அதன்பிறகு மாறிவிட்டார். காங்கிரசுடன் கூட்டணி ஏற்பட, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அவரும் திட்டமிடுகிறார். அதுதான் உண்மை.''

**கருணாநிதி, சிறிலங்காவுக்கு வரவேண்டும் என்று ராஜபக்ச அழைப்பு விடுகிறாரே?**

''சிங்களத் தலைவர்கள் அத்தனை பேரும் நரித் தந்திரம் படைத்தவர்கள். அதில் ராஜபக்ச விதிவிலக்கல்ல. உலகத்தை ஏமாற்ற அவர்கள் அப்படித்தான் ஆரம்பத் தில் பேசுவார்கள். அதன் பிறகு நம்மை ஏய்த்துவிடு வார்கள்.''

**புலிகளை எதிர்த்துத் தமிழகக் காங்கிரசார் கொந் தளிப்புடன் பேச ஆரம்பித்து உள்ளார்களே?**

''மக்கள் உணர்வைப் புரிந்துகொள்ளாமல் காங்கிரசு மீண்டும் மீண்டும் அந்நியப்பட்டுக்கொண்டே போகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும் என்பதுதான் ராஜீவ்-ஜெயவர்த் தன ஒப்பந்தத்தின் மையக் கருத்து. அந்த இரண்டு மாகாணங்களையும் பிரித்துவிட்டார் ராஜபக்ச. ஆகவே, இராஜீவ் காந்தியின் கனவை நிறைவேற்ற முதலில் அவர்கள் குரல் கொடுக்கட்டும்.''

**இன்றைய நிலையில் உங்களின் ஒட்டுமொத்தக் கோரிக்கை என்ன?**

''மூன்று விடயங்கள்... அப்பாவித் தமிழர்களைப் பலியிடும் சிறிலங்கா அரசாங்கம் உடனடியாகப் போரை நிறுத்த வேண்டும். இந்திய அரசு, சிறிலங்காவுக்குத் தரும் இராணுவ உதவி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தமிழக மீனவர்களைச் சிறிலங்கா கடற்படை சுட்டால் இந்திய கடற்படை திருப்பித் தாக்கும் என்று அறிவிக்க வேண்டும். இங்கே... முதல்வர் கருணாநிதி, உடனடியாக மீண்டும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். நமது அரசியல், அபிப்பிராய பேதங் களை அப்பாவி ஈழத் தமிழனின் வாழ்க்கையுடன் சேர்த்துப் பார்ப்பதை நிறுத்தவேண்டும்!'' என்றார் பழ. நெடுமாறன். ✱

*நன்றி : ஆனந்த விகடன் 12-11-08*

# விண்ணை அடைந்த விந்தை மனிதர் டாக்டர் க. இந்திரகுமார்

பேராசிரியர் கோபன் மகாதேவா



பிரபல எழுத்தாளர் டாக்டர் க. இந்திரகுமார் 20-12-2008 அன்று அமரத்துவம் அடைந்தார். அவரைப் பற்றிய எனது நினைவுகளை அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நினைவு கூருவோமாக. சென்ற ஆண்டு தமிழக முதல்வர் கலைஞரிடம் ஈழத்தமிழரின் உரிமைப் போருக்கு உதவி கோரி ஒரு விண்ணப்பக் கடிதம் அனுப்ப எண்ணுவதாகவும் அதில் தனக்கு அடுத்ததாக என்னை ஒப்பமிடும்படியும் கேட்டு தொலைபேசித் தொடர்பு கொண்டார். நான் உடனே இணக்கம் தெரிவித்த பின்னரும்கூட (அவருடைய இயல்பின்படி) சுமார் ஒரு மணித்தியாலம் வரை உலகையும் பலதையும் பற்றி அலசினோம். அந்தச் சம்பாசணை என்னால் மறக்கமுடியாது.

கொழும்பில் மருத்துவக் கல்வியை முடிக்கும் தறுவாயில், 20-7-1969 தினம், தானும் இலங்கை வானொலி ஒலிபரப்பைக் கேட்டு ஒரு விண்வெளி ஆராய்ச்சியின் தாசனாக மாறியதாகவும், பின் வானொலி மஞ்சரியிலும் தம் பல்கலைக்கழக மாணவர் சஞ்சிகையாகிய கலைக் கதிர் இதழிலும், விண்வெளிப் பயணங்கள் பற்றிய என் கட்டுரைகள் மிகச் சுவைத்துப் படித்ததாகவும் சொன்னார்.

அதே உந்துசக்தியுடன் வெளியிட்ட 'மண்ணிலிருந்து விண்ணுக்கு' எனும் நூலுக்கு இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதை 1973-இலும், 'விண்வெளியில் வீரகாவியங்கள்' எனும் நூலுக்கு 1996-இல் தமிழகப் பரிசை முதல்வர் கலைஞரின் கையாலேயே பெற்ற பெருமைக்குரியவர் டாக்டர் இந்திரகுமார் அவர்கள்.

**பூர்வீகமும் கல்வியும் பல்துறைத் தொண்டுகளும்**

இந்திரகுமார் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் திரு. கதிரவேலுவுக்கும் திருமதி. சிவபாக்கியத்துக்கும் 3-10-1945 இல் ஒரே மகனாக அவதரித்தார். முதலில் கொழும்பு றோயல் கல்லூரியிலும், 1958-இன் ஈழ இனக்கலவரத்தின் பின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்று, அதன் பின்னர் கொழும்பு மருத்துவக் கல்லூரியில் 1970 ஆண்டளவில் மருத்துவ, சத்திர சிகிச்சைப் பட்டதாரியாகத் தேறி, இலங்கையில் நீதித்துறை சார்ந்த வைத்திய அதிகாரி எனும் உயர்பதவியைச் சில ஆண்டுகள் வகித்தபின் இங்கிலாந்தில் மனநல மருத்துவத்தில் விசேடக் கல்வியும் பயிற்சியும் பெற்றுப் பிரித்தானிய சுகாதார சேவையில் பல்லாண்டு மனநல விற்பன்னராகத் தொண்டாற்றி, வழமையான வயதெல்லை வரு முன்னரே இளைப்பாறி, அதுவரை அவரது இரண்டாவது காதலியாகவே பின்னிடம் பெற்றிருந்த எழுத்துத்துறை எனும் கட்டழகியுடன் முழுநேர வாழ்க்கையைத் தொடங்கினார். இந்திரகுமாரின் இந்த அபாரக் காதல் வாழ்க்கை அவரின் கடைசி மூச்சுவரை தொடர்ந்தது என அறிகிறோம்.

சென்ற ஓரிரண்டு ஆண்டுகள் காலைக்கதிர் எனும் இலண்டனின் பிரபல இலவச வாரப் பத்திரிகையின் பிரதம தொகுப்பாசிரியராகக் கடமையாற்றினார். முன்னர், இவர் சொந்தத்தில் 1999 ஜூலை தொடக்கம் பிரதம தொகுப்பாசிரியராக நடத்திய மேகம் எனும் இருவாரப் பத்திரிகையின் 16 இதழ்கள் மார்ச் 2000 வரை வெளிவந்தன. இப்பத்திரிகையில் அவருக்கு எம்.ரீ. செல்வராஜாவும் எஸ்.எம். கார்மேகமும் துணை ஆசிரியர்களாகவும் திரு. பாலேந்திரநாதன் (திருமலை பாலா) விநியோகப் பொறுப்புனராகவும், வித்துவான் வேலன், நூலாசிரியர் கலாநிதி சிவா தியாகராஜா, போன்றோர் இலக்கிய நண்பராகவும் உதவினர். நானும் சில கட்டுரைகள் எழுதினேன். 'எனது வாழ்க்கையும் கவிதையும்' எனும் 1991-இன் கவிதை நூலும் மேகத்தில் விமர்சிக்கப்பட்டது.

மேகத்தின் தரத்தைப் பற்றி சிரேஷ்ட நூலகவியலாளர் என். செல்வராஜா, அது சராசரி 967 பக்க, 21.5 x 14 செ.மீ. அளவிலே, தமிழகத்தின் குமுதம், விகடன், இதழ்கள் போன்ற தரத்தில், பலவர்ண ஜன ரஞ்சித இதழாக வெளிவந்தது எனப் புகழாரம் சூட்டிப் பதிவு செய்துள்ளார்.

**டாக்டர் இந்திரகுமாரின் பிரபல, பரிசுபெற்ற நூல்கள்**

டாக்டர் இந்திரகுமார், வாசகர் விரும்பிய மேலும் சில நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள். டயானா வஞ்சித்தாரா? வஞ்சிக்கப்பட்டாரா? வயக்ராவும் ஏனைய சிகிச்சை முறைகளும் (மருத்துவ ஆராய்ச்சி நூல்), புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஒரு அறை கூவல், தீக்குளித்தல் பற்றி எரியும் உண்மைகள் (ஆங்கில நூல்), புதுயுகம் கண்டேன் (ரஷ்ய பிரயாண அனுபவநூல்) என்பவை பிரபல்யம் பெற்றவை. அத்துடன் பண்டிதர் இ. வடிவேல் எழுதிய, திருக்கோணேஸ்வரம் தான் தெட்சணகயிலாயம் எனும் நூலை இவர் புரவலராக வெளியிட்டுள்ளார்.

**பேச்சுத் திறமை**

இந்திரகுமார் ஒரு சிறந்த பேச்சாளரும் கூட. இலங்கை கொமியூனிஸ்ற் கட்சியின் ஒரு முக்கிய அங்கத்தினராகவுமிருந்தார். இலங்கையின் மறைந்த சிகப்பு அரசியல் தலைவர் பீட்டர் கெனமனின் சிங்கள, ஆங்கில மேடைப் பேச்சுகளைத் தமிழில் மொழி பெயர்த்தும் வந்திருக்கிறார்.

**திரைப்படத்தில் கதாநாயகனாக...**

இந்திரகுமார் ஒரு ஈழத்து-முழுநேரத் திரைப் படத்தில் நடித்திருப்பது சிலருக்குத் தெரியாமலிருக்கலாம். அவர் கதாநாயகனாக நடித்த படத்தின் பெயர் வாடைக் காற்று. செங்கை ஆழியானின் அதே பெய

ருடைய நாவலை வைத்து இலங்கை நடிகர்கள், இயக்குனர் (கே.எம். வாசகர்) குழுக்களுடன் இலங்கையிலெடுத்த படம். இதில் கதாநாயகியாக நடித்தவர் இலண்டனின் பிரபல தமிழ் நாடகத் தயாரிப்பாளர் பாலேந்திராவின் மனைவியார் திருமதி ஆனந்த ராணியே. ஆனந்தராணி இன்றோர் உலகறிந்த மேடை நடிகையும் ஒலிபரப்பாளருமாவர். இவர்கள் சேர்ந்து நடித்த வாடைக்காற்றுப் படத்தின் காலம் 1970-ஐ அண்மித்ததென எனது ஊகம். இப்படம் இலங்கை ஜனாதிபதியின் விருதைப் பெற்றுப் புகழீட்டியது. வீரகேசரியிலும் தொடர்கதையாக வெளிவந்தது.

**கட்டுரைகளும் வானொலித் தயாரிப்புகளும்**

மேலும் எம் சுறுசுறுப்பாளர் டாக்டர் இந்திரகுமார், தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆயிரம் கட்டுரைகளுக்கு மேல் எழுதியது மட்டுமல்லாமல், இலங்கை வானொலியில் பல நிகழ்ச்சிகளையும் அந்நாட்களில் தயாரித்துச் சாதனைகள் புரிந்திருக்கிறார்.

**திருமணமும் குடும்பமும்**

இந்திரகுமாரின் திருமணம் 7-10-1978 இல் கொழும்பில் நடந்தது. இவரை வரித்த மனையாள், பின்னாளில் ஆடற்கலையரசி, நடனச் சுடரொளி என்னும் பட்டங்கள் சூட்டப்பட்ட பரதநாட்டிய வல்லுனராகிய விஜயாம்பிகையே. இவர் அண்மைக் காலத்தில் பத்திரிகை நிருபர், பேட்டியாளர், எழுத்தாளர் எனும் துறைகளில் ஈடுபாடு கொண்டு தொழில் புரிகிறார். இவர்களுக்கு வினோதினி எனும் ஒரு மகளுண்டு. வினோதினியும் பரதநாட்டியத்தில் சிறப்புப் பெற்றவர். இப்போது இலண்டனில் சட்டக்கல்லூரியில் இறுதி வருடத்தில் படிக்கிறார்.

**உலகத் தமிழர் பேரமைப்புச் சேவைகள்**

தலைவர் பழ. நெடுமாறன் அவர்களினால் 2001ல் சென்னையில் நிறுவப்பட்ட உலகத் தமிழர் பேரமைப்பின் துணைத் தலைவராக டாக்டர் இந்திரகுமார் பணியாற்றி வந்தவர். நான்காம் ஆண்டு நிறைவு மாநாடு சேலம் அழகாபுரியில் ஆகஸ்டு 27, 28 இல் நடந்தது. இந்த மாநாட்டு மலரையே டாக்டர் இந்திரகுமார் என்னிடம் அனுப்பி விமர்சன உதவியைக் கேட்டிருந்தார்.

**நான்காம் ஆண்டு நிறைவு மாநாட்டு மலர்**

இம்மலர் கருப்பொருளில் இணைந்த, பேனாச் சித்திரங்களுடன் பலவர்ண அமைப்பில் 350 பக்கங்களில் கட்டுரைகளும் சில கவிதைகளும் இடம் பெற்றிருந்தன. இம்மலர் சிறப்புடன் வெளிவர டாக்டர் இந்திரகுமார் பெரும் பங்காற்றினார்.

**முடிவும் மங்களமும்**

அமரர் டாக்டர் க. இந்திரகுமார் அவர்கள் ஒரு விந்தை மனிதர் எனத் தலைப்பிட்டு இக்கட்டுரையைத் தொடங்கியிருந்தேன். அந்த அடைமொழியின் எல்லா அம்சங்களும் அவருக்குப் பொருந்தும். கல்வி, மாயவித்தைத் திறமை, அதிசயம், இலக்குமிகரம், வேடிக்கை, அழகு எல்லாமே பொருந்தும். தமிழறிவும் தமிழ் உணர்ச்சியும் மிக்க இவர் ஒரு துடிப்பான ஆராய்ச்சியாளர். தமிழீழத்துக்கும் தாயகத் தமிழ்நாட்டுக்கும் ஒரு பலமான கலாச்சாரப் பாலமாகப் பல்லாண்டு தொடர்ந்து உழைத்து வாசகரையும் கேளுநரையும் ஈர்த்திழுக்கும் ஒரு எழுத்து ஓவிய ராகவும் பேச்சாளராகவும் வாழ்ந்தார். தன் நடிப்புத் திறமையை வாடைக்காற்றுப் படம் மூலம் நிரூபித்திருந்தார். கடைசிக் காலத்தில் அவர் ஒரு துறவியைப் போலப் பெரும்பாலும் தனித்து வாழ்ந்து தமிழுக்குத் தன் கடைசியான, கனிசமான தொண்டுகளை ஆற்றி மறைந்துள்ளார்.

அவரின் ஆத்மா சாந்தியடையவும், அவரின் மனைவியார் விஜயாம்பிகையும் ஒரே மகள் வினோதினியும் அவரின் பணிகளைத் தொடரவும் இறைவனை வேண்டுவோமாக. ✱

## சுடரொளி வெளியீட்டுக் கழகம் வெளியிட்ட அனுதாபச் செய்தி

பிரித்தானிய நாட்டில் நீண்டகாலமாக வாழ்ந்து வந்த வைத்திய கலாநிதி இந்திரகுமார் அவர்கள் சிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளர், ஆராய்ச்சியாளர். அன்னார் இலண்டனில் மறைந்தார் என்ற செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைந்தோம். புலம்பெயர் நாட்டில் மிகப் பிரபல்யமான எழுத்தாளராக, பத்திரிகையாளராக, இலக்கியக் கர்த்தாவாக விளங்கிய டாக்டர் இந்திரகுமார் தமிழ்த் தேசியத்தை நேசித்தவர்.

இலண்டனில் சில பத்திரிகைகளின் ஆசிரியராக விருந்து தமிழ், கலை, இலக்கியத் துறையை வளர்த்து வந்தவர். இளவரசி டயானா மறைந்தவுடன் அவர் பற்றிய ஒரு நூலைத் தமிழ் உலகிற்கு வழங்கியவர்.

அறிவியல் துறையில் விண்வெளி வீரர் பற்றிய நூல் இவருக்கு விருதைப் பெற்றுக் கொடுத்தது. தமிழர் வரலாற்றை எழுதுவதற்கு நீண்டகாலமாக முயன்று வந்தவர். அதை நிறைவு செய்வதற்கு முன் மறைந்தது தமிழ் உலகிற்குப் பேரிழப்பாகும்.

அரசியல் தலைவர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களின் பெயர்பெற்ற 50க்கு 50 கோரிக்கையை நூலாக வெளிக்கொணர்ந்தவர்.

திரு. பழநெடுமாறன் அவர்களின் தலைமையிலான உலகத் தமிழர் பேரமைப்பின் ஐரோப்பியக் கிளைத் தலைவராகப் பணியாற்றி வந்தவர். வைத்தியத் துறையில் பணியாற்றினாலும், தமிழ்ப் பணி, சமூகப் பணி, எழுத்துப் பணியாற்றிவந்த ஒரு சிறந்த எழுத்தாளரின் மறைவு தமிழ் எழுத்துலகிற்குப் பேரிழப்பாகும்.

அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துக்கும், உறவினருக்கும் பத்திரிகையாளர், எழுத்தாளர்களுடன் இணைந்து சுடரொளி வெளியீட்டுக் கழகம் ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. **ஐ.தி. சம்பந்தன்,** செயலாளர்

# பராக் ஒபாமாவின் வெற்றி ஈழத் தமிழர்களுக்கு விடியலைக் கொண்டு வருமா?



அமெரிக்க அதிபர் தேர்தலைப் பொறுத்தவரையில், புரட்சிகர மாற்றம் என்று கருதப்படுகின்ற திரு. பராக் ஒபாமாவின் வெற்றி ஈழத்தமிழ் மக்கள் மத்தியிலே ஒருவித புளகாங்கிதத்தை ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அந்த வகையிலே, ஒபாமாவின் வெற்றி ஈழத் தமிழருக்குச் சாதகமான செயற்பாடுகளைக் கொண்டுவருமா?

உலக வல்லரசான அமெரிக்கத் தலைவருக்கான தேர்தலில் சனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட திரு. பராக் ஒபாமா வெற்றி பெற்றமையானது வன்னியின் இன்றைய நிலவரங்களால் சோர்வுற்ற நிலையில் இருக்கும் ஈழத் தமிழர்கள் மத்தியில் ஒரு புதிய நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இதன் அடிப்படை எதுவெனப் புரிந்து கொள்ளப் படாவிடினும் தமிழ் ஈழத் தேசத்துக்கான அங்கீகாரம் கிடைத்துவிடும் எனும் அளவுக்குக் கூடச் சிலர் மத்தியில், குறிப்பாகப் புலம்பெயர் தமிழர் மத்தியில் நம்பிக்கை நிலவுவது ஆச்சரியத்தை அளிக்கின்றது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் அரசு தலைவர்கள் யாராக இருந்தாலும் அதிகார மையம் என்பது அரசு தலைவர் என்ற தனிநபர் அல்லர் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும், அமெரிக்காவின் உண்மையான அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் படைத் தலைமை, அமெரிக்கப் பொருளாதாரத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பல தேசிய வர்த்தக நிறுவனங்கள், அமெரிக்க நிதிவளத்தைப் பெருமளவில் தன் கையில் வைத்திருக்கும் யூதர் சமூகம், அமெரிக்கா எத்திசையில் பயணிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் ஊடகங்கள், உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களே அமெரிக்காவின் கொள்கையைத் தீர்மானிக்கின்றன.

இதில் அரசத் தலைவர் என்ற தனிமனிதரின் செல்வாக்கு மிகமிகக் குறைந்த அளவே உள்ளது. இதுவே எதார்த்தம். இதற்கு ஓர் எளிய உதாரணத்தைக் குறிப்பிடலாம். ஆணைப் பெண்ணாக மாற்றுவதைத் தவிர அனைத்தையும் செய்யக்கூடிய அதிகாரத்தைக் கொண்டதாகக் கருதப்பட்ட ஸ்ரீலங்கா ஜனாதிபதி பதவியை வகித்தவர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க. தமிழர் விவகாரத்துக்கு இதுவரை சிங்களத் தரப்பால் முன் மொழியப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தில் மிகச்சிறந்ததெனத் தெரிவிக்கப்படும் பிராந்திய சபைத் திட்டத்தை முன்மொழிந்தவர் அவர். விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அந்தத் திட்டத்தை அமுல்படுத்தியே தீருவது என்ற உறுதியோடு அவர் இருந்ததாக அவரது நெருங்கிய சகாக்கள் பலமுறை கூறியுள்ளார்கள். அது உண்மையாயின், அந்தத் திட்டம் அமலாக்கப்படாமல் போனது எதனால்? ஏனெனில் அதிகாரம் சந்திரிகாவின் கையில் பெயரளவிலேயே இருந்தது. உண்மையான அதிகாரம் வேறு எங்கோ இருந்தது. சிங்கள இராணுவம், சிங்களத் தேசியவாதிகள், பௌத்தமத உயர்பீடம், இப்படிப் பல அதிகார பீடங்களும் இணைந்த மையத்திலேயே உண்மையான அதிகாரம் இருந்தது; தற்பொழுதும் அவ்வாறே இருக்கின்றது. சமாதானம், இல்லாவிட்டாலும் சமாதானம் என்ற சந்திரிகா ஈற்றில் சமாதானத்துக்கான யுத்தத்தில் ஈடுபட வேண்டி வந்தது.

திரு. பராக் ஒபாமாவின் நிலையும் இதைப் போன்றதே. அவரும் சூழ்நிலையின் கைதியே. அவரும் சூழ்நிலையின் கைதியே என்பதை அவரின் முன்னுக்குப் பின் முரணான பேச்சுகளே தெளிவுபடுத்துகின்றன. உதாரணமாகக் கூறுவதானால், ஆப்கானிஸ்தான் பிரச்சினையில் தலிபான்களுடன் பேச்சு நடத்தப் போவதாக முன்னர்த் தெரிவித்திருந்த அவர் தற்போது இரண்டு பட்டாலியன் துருப்புகளை மேலதிகமாக அங்கு அனுப்பி வைத்து பின்லாடனை எப்படியாவது அழித் தொழிக்கப் போவதாகத் தெரிவித்திருக்கின்றார். அதே வேளை, ஈராக் விவகாரத்தை ஜார்ஜ் புஷ் கையாண்ட விதத்தைக் கடுமையாக விமர்சித்திருந்த அவர் ஒரு கட்டத்தில் ஈரான் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதை சாத்தியமான சகல வழிகளிலும் தடுக்கப்போவதாகத் தெரிவித்திருந்தார். இவை யாவும் எதனால் நடைபெறுகின்றன எனில் முதலில் கூறியவை யாவும் திரு. பராக் ஒபாமாவின் நிலைப்பாடு; பின்னால் வருபவை அமெரிக்க ஆளும் குழுமத்தின் நிலைப்பாடு. இதுவே அங்குள்ள வித்தியாசம்.

திரு. ஒபாமா மீது ஈழத்தமிழர்களுக்கு எதனால் நம்பிக்கை ஏற்பட்டது. அவர் ஒரு கலப்பினத்தவர், சிறுபான்மையினர், பாரபட்சமாக நடத்தப்பட்ட ஒரு சமூகத்தின் பிரதிநிதி, சனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர். அனைத்தும் சரி. ஆனால் அவர் என்றாவது ஒரு நாள் ஈழத் தமிழர் பற்றி ஏதாவது வாய்திறந்து கூறியிருக்கின்றாரா? அவரோடு போட்டியிட்ட திருமதி ஹிலாரி கிளிண்டனாவது தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புகளைப் பயங்கரவாத அமைப்புகள் என்ற வரையறைக்குள் வைத்துப் பார்க்கக் கூடாது என ஒரு முறை தெரிவித்திருந்தார். திரு ஒபாமா அதைக் கூடச் செய்யவில்லை. பிறகு எதனை வைத்துக் கொண்டு அவரை நாங்கள் நம்புவது?

எம் போன்ற ஒடுக்கப்பட்ட மக்களின் துயரத்தை அவரால் ஓரளவு புரிந்துகொள்ள முடியும் என்பதைத் தவிர அவர்மீது நம்பிக்கை வைக்க வேறு எந்தவித காரணமும் இல்லை. அதேவேளை, ஒன்றில் நம்பிக்கை

வைப்பதைத் தவறு என்றும் கூறிவிட முடியாது. அதீத நம்பிக்கை வைப்பதே தவறு. ஈழத் தமிழர்கள் தற்போது திரு ஒபாமா மீது கொண்டுள்ள நம்பிக்கை அத்தகையது போன்றே தெரிகின்றது.

முன்னரும் ஒரு தடவை ஈழத் தமிழர்கள் இவ்வாறுதான் இந்தியா மீது நம்பிக்கை வைத்தார்கள். இந்திய இராணுவத்தை மாலைபோட்டு வரவேற்றார்கள். ஆனால் அதே இராணுவம் தமிழ்மக்களைக் கொன்று குவித்தபோது திகைத்துப் போயிருந்தார்கள். அதே நிலைமை ஒபாமா விடயத்திலும் எம்மவருக்கு ஏற்பட்டுவிடக் கூடாது.

அமெரிக்க அரசத் தலைவர் என்பவர் உலகத் தலைவருக்குச் சமமானவர். அவருக்கு உலகின் ஒரு மூலையிலுள்ள ஈழத் தமிழர் பற்றித் தெரிந்திருக்குமா என்பது பற்றித் தெரியவில்லை. ஏனெனில் அவரைச் சூழ உள்ளவர்களோ அவரின் ஆலோசகர்களோ அவருக்குத் தகவல்களை வழங்கும் புலனாய்வு அமைப்பினரோ எம்மவர்கள் இல்லை. எனவே முதலில் ஒபாமாவுக்கு எம்மவர் பிரச்சினையைத் தெரிவிப்பதற்கான முயற்சிகளில் நாங்கள் ஈடுபடுவோம். அதன்பின்பு அவருடைய நடவடிக்கைகளை எதிர்பார்ப்போம். அதுவே சாத்தியமானதும் எதார்த்தமானதும் ஆகும். *

*நன்றி : இவ்வார உலகம், ஐரோப்பிய தமிழ் வானொலி*

# SAIVISM, TO SUIT THE MODERN WORLD

*[As discussed and accepted at the November 2008 Workshop of ELAB, London]*

Professor **KOPAN MAHADEVA**

## SOME GUIDELINES FOR REFORM

1) The Concept of Vegetarianism for All, leading to Live-and-Let-Live Harmony with nature, and with all other living creatures in this world; Science-Based Analyses.

2) Saiva Ceremonies and Social & Ritual Practices: Weddings, Births and Deaths, Anniversaries, Fasts, Pujas, Eliminating Confusions & Time-wasting Non-Essentials.

3) Saiva Literature including Guidelines & Hymns, in English & other Major World Languages: Translations from Tamil, Sanskrit, etc., with newly produced Originals.

4) Integration of the main aspects of Other 'Hindu' Variants (such as Vaishnavism, Kali and Hanuman Worship) with Saivism, aimed at Simplification and Streamlining.

5) Making Saivism Appeal to World's Modernist Young Population over-infatuated with Science and Technology -with particular reference to our 'Saiva' boys and girls.

6) Objective and Harmony-Orientated Comparative Study of World's Main Faiths, aimed at creating Inter-Religious Unity and Mutual Respect Through Saivism.

7) Teaching and Training in Saivism: In the Homes, in Schools & Universities including Research, Training, and Ordaining of Priests; Syllabuses, and Curricula.

8) Saiva Organisations & Establishments including Temples, Inns, and Orphanages - Old and New, with International Co-ordination and Collaboration between them.

9) Streamlining & Jargon-free Simplification of Saiva Concepts, Customs, Rituals, Apparel, Literature, and Mythology, as suited to the busy, ordinary world population.

10) Objective Study of the Caste and Class Systems as practised by some Saivites, and in other religions and cultures of the world, including particular scrutiny of Manu's and similar Forms of Social Justice, and their socio-economic pros and cons.

11) Non-violent Methods of Conflict Resolution Through Dialogue and Mediation, based on Saiva Philosophy, as suitable for application between individuals, families, ethnic groups and countries. Examination of Male and Female Egos that lead to wars.

12) Saivism as practisable and promotable through Computerised New Technology, the WorldWide Web and the Internet; Scientific Scrutiny as Communication Systems.

13) Simplified and Optimised Domestic Saiva Culture, as Models for the Homes, practisable in the Industrialised, Commercial and Fast-Moving Modern World.

14) Development and Promotion of the Concepts that 'Every Heart is an Abode of Siva' and that 'Saivism is Indeed Humanism - a Universal Religion'. *

Law Chambers London

# M. Markandan LLB

## Solicitors & Administrators for Oaths

**For all legal work from magistrates court to court of appeal**
**For all aspects of immigration matters including Asylum, Human rights, Work permits, Highly Skilled Migrants, Marriage Visas, Student Visas, Entry Clearance Appeals, Nationality and Passport Applications**

And for

- Sponsorship & power of attorney documents
- Residential & Commercial Conveyancing
- Employment Law
- Uncontested Divorces
- Last Wills
- Consumer Problems
- Landlord & Tenant matters
- Traffic Offences
- Licensing Applications
- Civil Litigation
- Company Formation

**Please note his new contact details**

**Week days...**

**LAW CHAMBERS LONDON**

232 Bethnal Green Road London E2 0AA
(Near Bethnal Green road tube station, Travelling by tube is convenient)
Telephone No. 020 7033 3402 Fax No. 020 7033 3403
Mobile No. 079 5638 6576 & 079 3955 8850
Email : markandan@markandan.co.uk
markandan2008@yahoo.co.uk

Evenings and Weekends...
(By appointment only)
22 Lynton crescent Gants Hill, Ilford, Essex 1G2 6DH
Telephone No. 020 8554 5477 Mobile No. 079 3955 8850, 079 5638 6576

# ஈழத் தமிழ் மக்கள் படுகொலை
# மலேசியாவில் சிறிலங்கா தூதரகம் முன்பாகக் கண்டனப் பேரணி :

ஈழத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதனைக் கண்டித்து மலேசியாவில் உள்ள சிறிலங்கா தூதரகம் முன்பாக 2 ஆயிரத்துக்கும் அதிக மான தமிழர்கள் ஒன்று திரண்டு 14-11-08 அன்று கண்டனப் பேரணி நடத்தியுள்ளனர்.

இடப் பெயர்வின் துன்பத்தினை அனுபவிக்கும் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்வது தவறாகாது.

மனித உரிமைகள் மீறப்படுகின்ற போது சக மனிதன் என்ற முறையில் அதற்காகக் கண்டனம் தெரி விப்பது ஒவ்வொரு தனிமனிதனின் கடமை.

எமது உறவுகள் அங்கே நாளுக்கு நாள் அழிக்கப்பட்டு வருகின்ற வேளையில் அவர்களுக்காகக் கண்டிப்பாகக் குரல் கொடுக்க வேண்டியது நமது தார்மீகக் கடமை ஆகியவற்றினை முன்னிலைப்படுத்திக் கண்டனப் பேரணி நடைபெற்றது.

மலேசிய அரசியல் கட்சிகளான அம்னோ, மலேசியன் இந்தியன் காங்கிரசு, மலேசிய சீனர் சங்க உறுப்பினர்கள். அரசு சார்பற்ற இயக்கங்களான உலகத் தமிழர் நிவாரண நிதியம், தமிழ் நெறிக் கழகம், தமிழ் அறவாரியம், உலகத் தமிழர் மாமன்றம், தமிழ் இளைஞர் மணி மன்றம், மலேசிய இந்திய இளைஞர் மன்றம், இந்து சங்கம், இந்து இளைஞர் இயக்கம் எனப் பல தரப்பட்ட அமைப்புகளைச் சார்ந்த தமிழ் மக்கள் அணி திரண்டு வந்து கண்டனப் பேரணியில் பங்கேற்றனர்.

'ஈழத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டும்' 'அப்பாவித் தமிழர்களைக் கொண்டு குவிக்கும் சிறிலங்கா அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கும் கண்டனப் பேரணி' எனும் பதாகைகளைத் தாங்கியவாறு ''கொல்லாதே! கொல்லாதே! அப்பாவித் தமிழர்களைக் கொல்லாதே!'' ''போராடுவோம்! போராடுவோம்!! போரை நிறுத்தும் வரை போராடுவோம்!'' ஆகிய முழக்கங் களுடன் மக்கள் கூட்டம் உணர்வுடன் கூடியிருந்தனர்.

*''வாங்காதே! வாங்காதே!*
*சிலோன் தேயிலையை வாங்காதே!''*
*''பறக்காதே! பறக்காதே!*
*ஏயர் லங்காவில் பறக்காதே!''*

போன்ற முழக்கங்கள் தொடர்ந்து எழுப்பப்பட்டன. பேரணியின் இறுதியில் சிறிலங்கா தூதரகத்திடம் மனு கையளிக்கப்பட்டது. பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த 10 பேர் அடங்கிய குழுவினர் இந்த மனுவினைச் சிறிலங்கா தூதரக அதிகாரிகளிடம் வழங்கினர்.

முக்கிய மூன்று கோரிக்கைகளை முன்னிலைப் படுத்தி இந்த மனு வழங்கப்பட்டது.

அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப் பதனை நிறுத்த போர் நிறுத்தம் செய்ய வேண்டும்.

மீண்டும் அனைத்துலகத் தொண்டு நிறுவனங்கள் அனுமதிக்கப்பட வேண்டும்.

அனைத்துலக சமூகத்தின் கருத்தை மதித்து இரு தரப்பும் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும் என்பதே வழங்கப்பட்ட மனுவின் முக்கிய சாரம்சமாக இருந்தது.

சிறிலங்கா அரச தலைவருக்கு மனு அனுப்பி வைக்கப்படும் என சிறிலங்கா தூதரக அதிகாரிகளினால் உறுதியளிக்கப்பட்டது.

''ஈழத் தமிழ் உறவுகளுக்காக மலேசியத் தமிழர் கள் வழங்கும் ஆதரவு தமிழீழ மக்கள் என்றென்றும் தலை நிமிர்ந்து வாழ வழி அமைக்கும்.

எமது உறவுகளின் துயர் துடைக்க நாம் முன்னெடுக்கும் இம்முயற்சி கண்டிப்பாக ஏதாவதொரு வகையில் ஈழத்தில் அமைதி மலரச் செய்யும் என நம்பலாம்.

மலேசிய மக்கள் மத்தியில் எழுந்துள்ள இந்த விழிப்புணர்வு தொடர வேண்டும். மலேசிய அரசின் பார்வைக்கு எட்ட வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்'' என இந்நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். *

## வாழவே வைத்திடுவாய்!

### புலவர் வெற்றியழகன்

**வண்ணத் தமிழினில்**
**எண்ணிலாக் கவிதைகள்**
**கொண்டே குவிக்கின்றாய் - தூவலால்**
**மொண்டே இறைக்கின்றாய்!**

**புதுக்கவி என்றுமே**
**மதுப்பெயர் சூட்டியே**
**மதியைக் கெடுக்கின்றாய் - தமிழாம்**
**நதியைக் குலைக்கின்றாய்!**


**எதுகையும் மோனையும்**
**எதற்கெனக் கூறியே**
**கதவினைச் சாத்துகிறாய் - வேலை**
**இதயத்திற் பாய்ச்சுகிறாய்!**

**கண்ணாம் இலக்கணம்**
**புண்ணாய் விளங்கிட**
**உண்ணா துழைக்கின்றாய் - சிறிதும்**
**எண்ணா தழிக்கின்றாய்!**

**பாழெனச் சிதைத்திட**
**வேழமாய்த் திரிகிறாய்**
**ஆழவே நினைத்திடுவாய் - தமிழை**
**வாழவே வைத்திடுவாய்!**

# அமரர் க.சி. குலரத்தினம் அவரது வாழ்வும் எழுத்தும்

**என். செல்வராஜா,** நூலகவியலாளர், இலண்டன்



**நா**ம் இன்று வாழும் சம காலத்திலேயே வாழ்ந்து, ஈழத்தில் தமிழையும், தமிழரின் கலை, இலக் கிய, அரசியல் சமூக வரலாறுகளை யும் ஆழ்ந்தகன்று கற்றதுடன் அவற்றை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற வேணவாவுடன் அரும்பாடுபட்டுத் தமது சுயமுயற்சியால் ஆய்வுத் தேடலை மேற்கொண்டு வந்தவர்கள் பலர் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். சிலர் தத்தமது பல்கலைக்கழகப் பட்டங்களுக்காகக் குறிப்பிட்ட ஆய்வுகளைச் செய்தார்கள். மேலும் சிலர் தாம் சார்ந்த கல்விசார் நிறுவனங்களின் வேண்டுகோளின்பேரில் அவர்களுக்காகத் தமது ஆய்வுகளை மேற்கொண்டு அரிய தகவல்களைப் பதிவாக்கினார்கள். இவர்கள் அனைவருக்கும் தத்தமது ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை ஆவணமாக்கி நூலாகப் பதிவுசெய்து சமூகத் திற்கு வழங்கவேண்டிய முக்கிய தேவை ஒன்று இருந்தது. அதற்கான நிதிவளங்களையும், திட்டமிட்ட அறிவுசார் வழிகாட்டுதல்களையும் அவற்றைப் பெற்றுக்கொள்வதற் கான பின்னணியையும் இந்த அறிவுஜீவிகள் அவ்வப் போது பெற்றிருந்தார்கள். செழுமையான ஆய்வுப் படைப்புகள் இவர்களால் வெளிக்கொண்டு வரமுடிந்தது.

எமது ஈழத்தின் தமிழ்ச் சமூகத்தில் இங்கு நான் ஏற்கெனவே குறிப்பிட்ட அந்த அறிவுஜீவிகளின் வட்டத்துக்கும் அப்பால் இன்னுமொரு அறிஞர்களின் வட்டமொன்று தான்தோன்றிகளான அறிவுஜீவிகளின் சிறு கூட்டம் ஒன்று எப்போதுமே இருந்து வந்துள்ளது. இவர்களுக்குத் தமது தேடல்களை மேற்கொள்வதற்கான நிர்ப்பந்தம் எதுவும் இல்லை. தமது விருப்பத்துக்குரிய தெரிவாகத் தத்தமது ஆய்வுப்பரப்பை எடுத்துக் கொண் டார்கள். தனது ஆய்வின் முடிவில் தனக்கு ஒரு கலை மாணிப்பட்டமோ, கலாநிதிப் பட்டமோ, காத்திருக்கும் என்ற எதிர்பார்ப்பு எதுவும் கிஞ்சித்தும் அவர்களிடம் இருப்பதில்லை. தமது ஆய்வை சிரமமின்றி முன்னெ டுக்கும் வகையில் இவர்களிடம் பொருளாதாரப் பின் புலங்களோ, தேடல்களுக்கான அறிவு மூலங்களை எளிதில் அடையும் வாய்ப்புகளோ இருப்பதில்லை. பெரும்பாலும் பொருளாதார வளம் கொழிக்கும் குடும்பப் பின்னணி அவர்களுக்கு இராது. ஆனாலும் தேடல் என்பது ஒரு வெறியாக அவர்களிடம் ஊறிப் போயிருக்கும். ஆழமான ஆய்வுகளுக்காகத் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் முழுமையாகப் பயன்படுத்துபவர்கள் இவர்கள். அறிவகங்களையும், நூலகங்களையும் அறிவுசார் மனிதர்களையும் எப்போ தும் தேடியபடியே அவர்களது கண்களும் மனதும் அலைந்தபடி இருக்கும். தமக்கேயுரியதொரு அறிவு வெளியில் அவர்கள் சஞ்சரித்துக் கொண்டிருப்பதால் தமது துறைக்கு அப்பால், தமது ஆய்வுத் தேடல்களுக்கு அப்பால் வெளியுலகத் தொடர்பு பற்றிய அக்கறை அவர்களுக்கு இராது. தேடல் தேடல் தேடல் என்பதே அவர்களது தாரக மந்திரமாக இருக்கும். அதனாலேயே அவர்கள் எம்மிடையே நடமாடியபோதிலும், அவர்கள் தம் வாழ்வை ஆவணமாகப் பதியவைப்பதில் அக்கறை யின்றி அதனைத் தொலைத்துவிட்டு அவர்களின் மரணத்தின் பின் அறியப்படாதவர்களாகவே போய் விடுகின்றார்கள்.

உங்கள் வாழ்விலும் இத்தகைய அரிய மனிதர் களை நீங்கள் அவ்வப்போது சந்தித்திருப்பீர்கள். அவர் களது உருவமும், போக்கும் சில வேளைகளில் அவர் களது உண்மையான ஆளுமைகளை பிரதிபலிப்பதோ வெளிக்காட்டுவதோ இல்லை. ஏனெனில் மற்றவர்கள் தம்மை ஒரு ஆளுமையுள்ள பிரகிருதியாக, ஒரு அறிவு ஜீவியாகப் பார்க்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புத்தான் அவர்களிடம் இருப்பதில்லையே. எமது சமகால சிந்தனையாளர்கள், அறிவுஜீவிகள் பற்றிய எமது மேம்போக்கான பார்வையினால் பல விலைமதிப்பற்ற மாணிக்கங்களை நீங்களும் நானும் மட்டுமல்ல, எமது தலைமுறையே தவறவிட்டுவிட்டோம். இன்று ஒருவழி யாக அத் தவற்றை உணர்ந்த அந்தத் தான்தோன்றி அறிவாளிகளைப்பற்றிய அறியமுற்படும் இந்த வேளை யில் அவர்களைப் பற்றிய ஒரு சில தகவல்களையே நம்மால் பெற்றுக்கொள்ள முடிகின்றது. பெரும்பாலா னவை காலத்தால் அழிந்து போயின. புலம்பெயர் வாழ்க்கையே ஈழத்தமிழரின் இயல்பு வாழ்க்கையாகி விட்ட கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் இத்தகைய ஈழத் தமிழறிஞர்களுடனான தொடர்பின் விரிசல்களும் அதிகமாகிவிட்டன. வரலாற்றின் குறிப்பிட்ட ஒரு கால கட்டம் இவர்களைப் பற்றிய பதிவுகள் எதுவும் இல்லா மலேயே நகர்ந்துவிட்டது. இவர்களைத் தேடி அறிந்து இருக்கின்ற சொற்பத் தகவல்களையாவது கோர்த் தெடுத்து அவர்களின் வாழ்வும் பணியும் பற்றியதொரு ஆவணமாகப் பதிவுசெய்துவிட்டால் மாத்திரமே எதிர் காலத்தில் இவர்களது பெயர் அடுத்த தலைமுறை யினரிடம் எடுத்துச் செல்லப்படலாம். அல்லாது போனால் அவர்களது பழைய தகவல்களையே இரை மீட்டுக்கொண்டு வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

நவாலியில் பிறந்து கந்தரோடையில் வாழ்ந்த பன்னூல் ஆசிரியர் ந.சி. கந்தையாப்பிள்ளை பற்றி ஏற் கெனவே பலமுறை குறிப்பிட்டுவிட்டேன். வரலாறு, இலக்கியம், சமூகவியல் என்று பல்வேறு துறைகளிலும் 80 தமிழ் நூல்களுக்கு மேல் எழுதித் தமிழகத்தில் அவற்றைப் பதிப்பித்துச்சென்ற இந்த ஈழத்து அறிஞர் பற்றிய போதிய தகவல்கள் இன்று எம்மிடையே இல்லை. அவரது வாழ்வு பற்றியும், அவரது பணிகள்

பற்றியும் எம்மைவிடத் தமிழகத்திலும் மலேசியாவிலும் தான் ஒரு சிலர் அறிந்து வைத்திருக்கிறார்கள். அவர் நீண்ட நெடுங்காலம் மலேயாவிலும், தமிழகத்திலும் வாழ்ந்து மறைந்ததால் அவர் பற்றிய வாழ்வும் பணிகளும் ஈழத் தமிழர்களை எட்டாது போய்விட்டதாக நீங்கள் கருதக்கூடும்.

ந.சி. கந்தையாபிள்ளை போன்றே எம்மிடையே வாழ்ந்து மறைந்தவர் அமரர் க.சி. குலரத்தினம் அவர்கள். இவர் மலேயாவுக்கோ, தமிழகத்திற்கோ போய் வாழவில்லை. தான் பிறந்த யாழ்ப்பாண மண்ணிலேயே வாழ்ந்து தமிழ்ப் பணிசெய்து மறைந்தவர். அவரது படைப்புகள் தான் இன்றளவில் அவரது நினைவை எம் முன்னால் நிறுத்தி வைத்திருக்கின்றன. ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தின் பெரியகடை வீதிகளிலோ அங்குள்ள புத்தகக் கடைகளிலோ, யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் உசாத்துணைப் பிரிவிலோ, யாழ்ப்பாணத்தில் நடக்கும் பல்வேறு இலக்கியக் கூட்டங்களிலோ அடிக்கடி சந்திக்கக்கூடிய நபராக இருந்த இவரை அறியாதவர்கள் ஒரு காலகட்டத்தில் இல்லை என்றே சொல்லலாம். இலக்கிய வட்டம், கம்பன் கழகம், சேக்கிழார் மன்றம் போன்ற பல்வேறு இலக்கிய அமைப்புகளுடனும் நெருங்கிய தொடர்பினையும் பேணி வந்தவர்.

1916 இல் யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் பிறந்த க.சி. குலரத்தினம் அவர்கள் திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரியில் தன் ஆரம்ப இடைநிலைக் கல்வியைப் பெற்று பின்னர் பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையிலும், திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் பயின்றவர். திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி, சைவப் பிரகாச வித்தியாசாலை, உட்பட பல கல்லூரிகளில் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1994 இல் மரணிக்கும் வரை தன் தேடலைத் தொடர்ந்தபடியே இருந்தவர்.

க.சி. குலரத்தினம் அவர்கள், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நெருங்கிய தொண்டராக இருந்தவர் என்பது பலரும் அறிந்ததொரு செய்தியாகும். ஒரு ஆவணஞானியாக வாழ்ந்த இவர் தனது சேகரிப்புகளிலிருந்து தேர்ந்தெடுத்த முத்துக்களை சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் ஊடகங்களில் பதிவுசெய்து வந்திருக்கிறார். பத்திரிகைகள், சஞ்சிகைகள், தமிழ் ஆங்கில நூல்கள் என அவரது இல்லத்தில் அவரைச் சூழ்ந்து ஒரு ஆவணச் சுரங்கமே அந்நாளில் இருந்தது. இவற்றை வாசித்துத் தன் தேடலை மேற்கொண்டுவந்ததுடன் தனது அறிவுத்தாகத்தைப் போக்கிக் கொண்டதுடன் மட்டும் அவர் ஓய்ந்துவிடவில்லை. அதை மற்றவர்களுக்கும் வழங்குவதில் அதிக அக்கறையுடனும் முனைப்புடனும் முயற்சி செய்த வண்ணம் இருந்தார்.

யாழ்ப்பாணத்தின் சவர்க்காரத் தொழில் அதிபரான க. கனகராசா அவர்களின் மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகத்தினால் **'மில்க்வைற் செய்தி'** என்ற பெயரில் மாதாந்த இதழ் வெளியிடப்பட்டு வந்தது. யாழ்ப்பாணம், காங்கேசன் துறை வீதியிலிருந்த திரு. ஆலவாய் என்ற அவர்களது பணிமனையிலிருந்து வெளிவந்த இந்த அறிவியல் சமூகச் செய்தி இதழின் ஆசிரியராக க.சி. குலரத்தினம் அவர்கள் ஆரம்பம் முதல் சேவையாற்றி வந்தார். ஒரு வர்த்தக விளம்பர இதழை மிகுந்த தரத்துடனான சமூக அறிவியல் விழிப்புணர்வூட்டும் பத்திரிகையாக நீண்டகாலம் நடத்தியதில் வெற்றிகண்டவர் க.சி. குலரத்தினம். அந்நாளில் இவர் ஆசிரியராக இருந்த மில்க்வைற் செய்திகளில் பல சிறு அறிவியல் கட்டுரைகளையும், துணுக்குகளையும்கூட சுவையாக வெளியிட்டு வந்தார். மில்க் வைற் செய்தியுடன், திரு. க. கனகராசா பல சிறு பிரசுரங்களையும் அவ்வப்போது இலவச வெளியீடுகளாக வெளியிட்டு வந்தார்.

**பனை வளம்** என்ற தனிநூலும் அத்தகைய தொரு பிரசுரமாகும். பனைவளம், க.சி. குலரத்தினம் அவர்களால் எழுதப்பட்டு, மில்க்வைற் தொழிலகத்தினால் 1977 இல் 144 பக்கங்களில் வெளியிடப்பட்டிருந்தது. மில்க்வைற் தொழிலகத்தின் பொன்விழா வெளியீடாக (1927-1977) வெளிவந்திருந்த இந்நூலில் பனைமரம் பற்றியும் பனையின் பயன்பாடு பற்றியும் தேடித்தொகுக்கப்பெற்ற அரிய பல தகவல்களுடன், இலக்கியங்களில் பனை பற்றி வெளிவந்த குறிப்புகளும் தேடித் தொகுக்கப்பட்டிருந்தன. பனையியல் தொடர்பான விரிவானதொரு ஆவணமாக இது இன்றளவில் அமைகின்றது.

மில்க் வைற் தொழிலகத்தின் வழியாக **மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழா நினைவு** என்ற தலைப்பில் க.சி. குலரத்தினம் 1982 இல் மற்றுமொரு நூலையும் தொகுத்திருந்தார். மில்க்வைற் இலவச வெளியீடாக வெளிவந்த இந்நூலில் மகாகவி பாரதியாரின் பாடல்களில் சிலவற்றினை அவரின் நூற்றாண்டு விழா நினைவையொட்டித் தொகுத்துப் பிரசுரித்திருந்தார்.

**மாணவர் சூழல் வாசகங்கள், பொது அறிவுக் களஞ்சியங்கள்** என்ற அறிவு நூல் தொடர்களை பள்ளிச் சிறார்களுக்காக அவர் தமது காலத்தில் படைத்திருந்தார். தான் பண்டிதமணியிடமும் பிற தமிழறிஞர்களிடமும் கற்றுப் பெற்றிருந்த சைவசமய அறிவை மேலும் பட்டை தீட்டிக்கொண்டு உருவாக்கியதே **திருவருட் பயன் விளக்கம், இந்து சமய பாடத் திரட்டு** என்பனவாகும். **சைவத் திருநெறித் தோத்திரத் திரட்டு** என்ற நூல் க.சி. குலரத்தினம் அவர்களால் 1944 இல் அவர் மறைந்த ஆண்டில் வெளியிடப்பட்ட சைவ சமய நூலாகும். அகத்தியர் தேவாரத் திட்டு, உமாபதி சிவாச்சாரியார் அருள்முறைத் திரட்டு உட்பட பன்னிரு திருமுறைகளும் திருப்புகழ் பாடல்களும் அடங்கிய இந்த நூலில், ஆசிரியர் பாட்டுடை ஊர், பாட்டு முதற்குறிப்பு, ஆகியனவற்றினை உள்ளடக்கிய சுட்டியையும் பின்னிணைப்பில் இவர் தேடித் தொகுத்திருந்தார்.

க. வைத்தீஸ்வரக் குருக்கள் பதிப்பாசிரியராக விருந்து, காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழகம், 1987 இல் **திருமுறைப் பெருமை** என்ற நூலை வெளியிட்டது. இந்நூல் சைவத் திருமுறைகளின் பெருமையினை விளக்கும் ஒரு நூலாகும். யாழ்ப்பாணம், கந்தர் மடம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர், 1911 இல் அடங்கன் முறையில் எழுதி வெளியிட்ட திருமுறைப் பெருமை என்ற கட்டுரையும், க.சி. குலரத்தினம் அவர்கள் எழுதிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரின் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையும் இந்நூலில் அடங்கியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் சிவதொண்டர் நிலையத்தினர் ஒரு சஞ்சிகையை வெளியிட்டு வந்தார்கள். **சிவதொண்டன்** என்ற தலைப்பில் வெளிவந்த இச்சஞ்சிகையில் க.சி. குலரத்தினம் அவர்களின் கந்தபுராணக் கட்டுரைகள் பலத்த வரவேற்பைப் பெற்றிருந்தன. சண்முக விஜயம் என்ற தலைப்பில் இவை தொடராகவும் வெளிவந்தன.

தான் வாழ்ந்த காலத்தில் இவர் படைத்த குறிப்பிட்ட சில படைப்புகள் நூலுருவில் இன்றளவில் வெளிவந்ததாகத் தகவல் இல்லை. தன் ஆங்கில நுண்ணறிவைப் பயன்படுத்தி ஆங்கில இலக்கியத் தேடலையும் முன்னதாக இவர் மேற்கொண்டிருந்தார். கிரேக்க மகாகவி ஹோமர் இயற்றிய **எலியட், ஒடிசி** ஆகிய இரண்டு இலக்கியங்களையும் இவர் தமிழுக்கு மொழி பெயர்த்திருந்தார். துர்அதிர்ஷ்டவசமாக அவை இரண்டும் இன்று வரை நூலுருவில் வெளிவந்ததற்கான ஆதாரமே இல்லாதுபோய்விட்டது.

**தமிழ் தந்த தாதாக்கள்** என்ற நூல் க.சி. குலரத்தினம் அவர்களால் எழுதப்பட்டதும் அதிகம் பேசப்பட்டதுமான தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாற்று நூலாகும். யாழ்ப்பாணம், சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் மூலம் திரு. ஐ.தி. சம்பந்தன் அவர்கள் இந்நூலை செப்டெம்பர் 1987 இல் தனது சுடரொளி அச்சகத்தின் வாயிலாக வெளியிட்டிருந்தார். யாழ்ப்பாணத்தின் ஈழநாடு வாரமலரில் வெளிவந்த க.சி. குலரத்தினத்தின் இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பாக இது அமைந்திருந்தது. ஈழத்தமிழ்ப் புலவர்களில் எவ்வெப் புலவர்கள் எந்தெந்தத் துறைகளில் எத்தகைய காலங்களில் எவ்வாறெல்லாம் தமிழ்த்தாயை அணி செய்தார்கள் என்பதை இலகு நடையில் இலக்கியச் சுவையுடன் தந்திருந்தார். இந்நூலின் தொடர்ச்சியாக அமைந்தது யாழ்ப்பாணம் சுடரொளி வெளியீட்டுக் கழகம் இரண்டாண்டுகளின் பின்னர் 1989 இல் வெளியிட்ட **செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்** என்ற நூலாகும். செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் பின்னாளில் இதே சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினால் 2005இல் இலண்டனிலிருந்து 2ஆவது பதிப்பாகவும் வெளியிடப் பட்டிருந்தது. 217 பக்கங்களைக் கொண்ட கனதியான நூல் இது. தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலமாகத் திகழ்கின்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழநாட்டுப் புலவர்களின் ஆக்கங்களில் காணப்படும் சிறப்புகளைத் தமக்கேயுரிய முறையில் க.சி. குலரத்தினம் அவர்கள் இந்நூலில் தந்திருந்தார். புலமை யாழம் பொருந்திய ஈழத்துத் தமிழ்ப்புலவர்கள் தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியன. இத்தகைய சிறப்புமிக்க ஈழத்தவர்கள் பதினெண்மரின் பணிகள் பற்றி, எம்மவரால் மறக்கப் பட்ட அவர்களின் வாழ்வு பற்றி தேடித்தொகுத்த தகவல்கள் இந்நூலில் கோர்க்கப்பட்டிருந்தன. சேனாதிராய முதலியார், முத்துக்குமார கவிராயர், சைமன் காசிச் செட்டி, அருணாசலம் சுவாமிநாதர், அருணாசலம் சதாசிவம் பிள்ளை, ஹென்றி மார்ட்டின், விசுவநாதச் சட்டம்பியார், கறோல் விசுவநாதம்பிள்ளை, வல்வெட்டி குமார சுவாமி முதலியார், நெவின்ஸ் சிதம்பரபிள்ளை, ஆராய்ச்சியார் கந்தப்பிள்ளை, நட்டுவச் சுப்பையனார், மொட்டை வேலாப் போடியார், வே. அகிலேசபிள்ளை, குமாரகுலசிங்க முதலியார், கனகசபைப் புலவர், வைமன் கதிரைவேற்பிள்ளை, சிவசம்புப் புலவர் ஆகிய பதினெண்மரின் வாழ்வும் தமிழ்ப்பணிகளும் இந்நூலில் தொகுக்கப்பட்டிருந்தன.

**சைவமும் தமிழும் வளர்த்த சான்றோன்** என்ற நூலும் க.சி. குலரத்தினம் அவர்களால் 1983 இல் எழுதிப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. குப்பிளான், காசிவாசி சி. செந்திநாத ஐயர் அவர்களின் 254 ஆவது குருபூசை நினைவு வெளியீடாகப் பின்னர் ஒக்டோபர் 2002இலும் இது மறுபதிப்புச் செய்யப்பட்டிருந்தது. சைவசித்தாந்த சிகாமணி மகான் குப்பிளான் காசிவாசி சி. செந்திநாத ஐயர் அவர்களின் வாழ்வும் பணியும் பற்றி அமரர் க.சி. குலரத்தினம் அவர்கள் எழுதிய விரிவான கட்டுரை இது. ஆறுமுகநாவலர் அவர்களின் வலதுகரமாகத் திகழ்ந்த காசிவாசி சி. செந்திநாத ஐயர் நாவலரின் வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராக இருந்தவர். பல்வேறு கண்டன நூல்களையும் தேவாரம், வேதசாரம், சைவ வேதாந்தம் ஆகிய பிரபல நூல்களையும் எழுதியவர். இப்பெரியாரைப் பற்றித் தான் சேகரித்து வைத்திருந்த பல்வேறு தகவல்களையும் க.சி. குலரத்தினம் அவர்கள் இக்கட்டுரையில் விரிவாக வெளியிட்டிருந்தார். இக்கட்டுரைத் தகவல்கள் பின்னாளில் பல்வேறு தமிழ் ஆய்வாளர்களாலும் நன்றியுடன் எடுத்தாளப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணப் பொது நூலகம் பற்றிய முதலாவது வரலாற்று ஆவணப்பதிவினை மேற்கொண்ட பெருமையும் அமரர் க.சி. குலரத்தினம் அவர்களையே சாரும்.

அமரர் க.சி. குலரத்தினம் அவர்கள் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதும் வெறுமனே புலம்பித் திரியவில்லை. அவசர அவசரமாக யாழ்ப்பாண நூலகம் பற்றிய தகவல்களைத் தேடித்திரிந்து தொகுத்து யாழ்ப்பாணத்தில் வெளிவந்து கொண்டிருந்த ஈழநாடு நாளிதழில் 20-7-1982 முதல் 18-8-1982 வரை ஒரு தொடராக வெளியிட்டிருந்தார். இதுவே யாழ்ப்பாண நூலக

வரலாறு பற்றிய முதல் ஆவணத் தொடராகும். இதைப் பின்னர் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்திருந்த வரும், யாழ்ப்பாண நூலகத்தின் முன்னாள் நூலகருமான கலாநிதி வே.இ. பாக்கியநாதன் 1997 இல் ஒரு தனி நூலாக **யாழ்ப்பாண நூலகம் ஒரு ஆவணம்** என்ற தலைப்பில் சென்னை மித்ர வெளியீட்டகத்தின் வாயி லாகப் பதிப்பித்திருந்தார். இந்நூல் 1939களில் யாழ்ப் பாணத்து நூலகம் க.மு. செல்லப்பா அவர்களால் ஓலைக்கொட்டில் ஒன்றில் தொடங்கியது முதல், படிப் படியாக வளர்ந்து 1967இல் புதிய கட்டடத்துக்கு நூலகர் வே.இ. பாக்கியநாதன் பொறுப்பிற்கு மாற்றப்பட்டது வரையிலான ஒரு காலகட்டத்தினை விரிவாகப் பதிவு செய்திருந்தது. துர்அதிர்ஷ்டவசமாக அறியப்படாத சில காரணங்களால் க.சி. குலரத்தினம் அவர்களால் ஈழநாடு பத்திரிகையில் தொடர்ந்த இவ்வாய்வுக்கட்டுரை இடை நடுவில் நிறுத்தப்பட்டுவிட்டது. 1967க்குப் பின்னர் 1982 வரையிலான மிக முக்கிய வரலாற்றுப் பயணத்தை இந்நூல் பதிவுசெய்யாமலேயே போய்விட்டது மிகுந்த வருத்தத்திற்குரியதே.

**இந்து நாகரீகம்** என்ற துறையிலும் க.சி. குல ரத்தினம் அவர்கள் ஒரு நூலை சில பாகங்களில் எழுதி யிருந்தார். உயர்தர மாணவர்களுக்குரிய இந்நூலின் முதற்பாகத்தின் முதற்பதிப்பு 1979-1980 காலப்பகுதி களில் வெளிவந்திருக்கிறது. தமிழகத்தின் தென்நாட்டி லும் வடநாட்டிலும் நிலவிய பக்திநெறி இலக்கியம் பற்றி இந்நூல் விரிவான தகவல்களைத் தந்திருந்தது. அத்துடன் வட நாட்டில் நிலவிய பக்திநெறி, வைணவ சமயத்தின் எழுச்சி, தமிழிலக்கியத்திற் காணப்படும் தென்னாட்டுச் சைவ மரபு, இந்து சமயத்தில் இக் காலகட்டத்தில் இருந்த சீர்திருத்த இயக்கங்களின் செயற் பாடுகள் ஆகியனவும் விளக்கப் பெற்றிருந்தன.

தமிழறிஞர் க.சி. குலரத்தினம் அவர்களின் தமிழ் அறிவுடன் அரசியல் அறிவும் வியக்கவைப்பதாகும். **நலம் தரும் அரசு** என்ற தலைப்பில் பிரித்தானிய அரசியல் யாப்பினைப் பற்றி இவர் எழுதிய கட்டுரை களும், 1966 ஆம் ஆண்டில் இவர் எழுதிய **நோத் முதல் கொபல்லவா வரை** என்ற தலைப்பில் அமைந்த தும் 1798 முதல் 1947 வரையிலான இலங்கையின் அரசியல் வரலாற்றைக் கூறுவதுமான அரிய நூலும் இவரது அரசியல் வரலாற்றறிவை இன்றும் எமக்குத் தொட்டுக்காட்டிச் செல்பவையாகியுள்ளன. நலம் தரும் அரசு என்ற தலைப்பில் பிரித்தானிய அரசியல்யாப்பு பற்றிய 27 கட்டுரைகளும் விவேகியில் இவர் தொடர்ந்து எழுதியவையாகும். நோத் முதல் கோபல்லவா வரை என்ற இந்நூலின் 2ஆம் பாகமாக நலம் தரும் அரசு என்ற அந்நூல் திட்டமிடப்பட்டிருந்தது. இவ்வெளியீடு இதுவரை நூலுருவில் வெளியிடப்பட்டதற்கான குறிப்பு எதுவும் எனக்குக் கிடைக்கப்பெறவில்லை.

**நோத் முதல் கோபல்லவா வரை :** இலங்கை யின் அண்மைக்கால 1798-1962 அரசியல் வரலாறு கூறுவதும், எளிய நடையில் அமைவதுமான ஒரு நூல். யாழ்ப்பாணம், ஆசீர்வாதம் புத்தகசாலை, ஒக்டோபர் 1966 இல் 434 பக்கங்களில் இந்நூலை வெளியிட்டது. தமிழ் அறிஞர் க.சி. குலரத்தினம் 1934 ஆம் ஆண்டி லிருந்து அமரத்துவம் அடையும் வரை எராளமான ஆவணங்களையும் பத்திரிகைக் கட்டுரைகளையும் சேகரித்து வைத்திருந்தார். விவேகி என்ற திங்களிதழில் 36 தலைப்புகளில் எழுதிவந்த இலங்கை வரலாறு தான் இந்நூலில் திரட்டித் தரப்பட்டுள்ளது. சித்திர ஆசிரியர் க. இராசரத்தினம் (மேடம்), அவர்களின் கைவண்ணத்தில் சித்திரங்கள் இந்நூலுக்கு மேலும் அணிசேர்த்திருந்தன.

பிரித்தானிய காலனித்துவ காலப்பகுதியில் அதாவது ஆங்கிலேயர் வரவு தொடக்கம், அவர்களின் பிரிவு வரை இலங்கையில் இடம்பெற்ற அரசியல் நிகழ்வுகளையும், வளர்ச்சியையும் கூறுவதாக அமையும் நூல் இது. ஏறத்தாழ 200 ஆண்டுக்கால இலங்கையின் வரலாறு, சிறப்பாக அரசியல் துறையும், தேசத் தொண டர்கள் சிலரது வாழ்க்கை வரலாறும் விரிவாக இதில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பிரித்தானிய காலனித்துவக் காலப்பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களையும், கோல்புரூக் கமரன் திருத்தத்திலிருந்து டொனமூர் திருத்தம் வரை யாப்பு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களையும் இலங்கையரினால் சுதந்திரத்தை நோக்கி மேற்கொள்ளப்பட்ட அரசியல் முயற்சிகளை யும் மிக ஆழமாக இந்நூல் ஆராய்கின்றது. இக்காலப் பகுதியில் தமிழர்களின் வாழிடங்களில் பிரித்தானிய ஆட்சிக்கால அரசியல் பற்றிய உணர்வலைகள் அழகாகவும், யதார்த்தமாகவும் படம் பிடித்துக்காட்டப் பட்டுள்ளது. இந்நூல் அதன் முக்கியத்துவம் கருதி, அண்மையில் 2008இலும் கொழும்பு குமரன் பதிப்பகத் தால் மீள்பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

இந்நூல் பற்றி பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் அவர்கள் எழுதிய குறிப்பில் பின்வருமாறு குறிப்பிடு கின்றார்.

''திரு. க.சி. குலரத்தினம் அவர்கள் அறிவொளி வீசும் இவ்வாராய்ச்சி ஏட்டிதழ்களிலே உண்மை நிகழ்ச்சி களை அவற்றின் சரியான தோற்றங்களிலே வெளிப் படுத்த முனைந்துள்ளார். இத்துறையில், ஏனைய வர லாற்றாசிரியர்களும், எழுத்தாளர்களும், சஞ்சரித்துப் பழகிப்போன வழிகளிலே தாமும் செல்ல இவ்வாசிரியர் விழையாதது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. அவர் தமது ஆராய்ச்சி நூலை, ஒவ்வொன்றும் தற்கால இலங்கையின் வளர்ச்சியோடும் முன்னேற்றத்தோடும் நேரடித் தொடர்பு கொண்டுள்ள வரையறைவான பல தலைப்புகளில் தம் ஆய்வு முடிபுகளை வகுத்துள்ளார். இவையனைத்தும் ஒருமித்து இத்தீவின் ஒரு கால கட்டத்து வரலாற்றைப் பற்றியதான ஒரு நடுநிலை தவறாததும் நுண்ணாய்வுடையதுமான ஆய்வாக அமைந்துள்ளன. இந்நூல், வரவிருக்கின்ற பல ஆண்டு களுக்கு ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலுமுள்ள தற்கால

இலங்கை வரலாற்று மாணவர் அனைவருக்கும், அத் துறையிலமர்ந்த ஒரு பூரண நூலாக அமைவதோடமை யாமல் பொது வாசகர்களுக்கும் அளவிலாப் பயனை உண்டாக்கும்''

அமரர் க.சி. குலரத்தினம் தயாரித்து வைத்திருந்த ஹோமர் இயற்றிய **எலியட், ஒடிசி** ஆகிய இரண்டு இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள் போலவே, **நோத் முதல் கொபல்லவா வரை** என்ற நூலின் இரண் டாம் பாகமான **நலம் தரும் அரசு** என்ற நூலும் இன்றளவில் வெளிவரவில்லை என்பது வருத்தத்துக் குரிய செய்தி மட்டுமல்ல, நாம் எமது அறிவுத்தேட் டங்கள் பற்றிய அக்கறையின்மையால் இன்றளவில் எத்தனை பொக்கிஷங்களை இழந்து நிற்கின்றோம் என்பதை எமது மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டி அதிரவைப்பதாயும் இருக்கின்றது.

யாழ்ப்பாண மண்ணில் பிறந்து ஒரு ஆவண ஞானியாக, ஒரு பிரம்மச்சரிய விரதராகவே வாழ்ந்து மறைந்த அப்பெரியாரின் வாழ்க்கை வரலாறு பற்றிக் கூறும் ஒரு நூல் கூட ஈழத்திலிருந்து இதுவரை வராமல் போனது வேதனைக்குரிய விடயமாகும். அவரது காலத்தில் வாழ்ந்து, அவரால் பயன்பெற்ற பலர் இன்றும் எம்மிடையே உலாவந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அமரர் க.சி. குலரத்தினம் பற்றிய தமது மனப்பதிவு களையாவது அவ்வப்போது பத்திரிகைகளில் இவர்கள் பதிவு செய்தால் ஒரு காலத்தில் எவரோ ஒருவர் அவற்றைச் சேர்த்து அமரர் க.சி. குலரத்தினத்தின் வாழ்வும் பணிகளும் என்று ஒரு நூலையாவது பதிவு செய்து வைக்க முடியும். அன்று அப்பெரியார் வீடு முழுவதும் ஆவணங்களாகச் சேகரித்து வைத்திருந்த ஈழ மண்ணின் வரலாற்றுத் தடங்களுக்கு இன்று என்ன நடந்தது என்று தெளிவாகத் தெரியவில்லை. யாழ்ப் பாணப் பல்கலைக்கழக நூலகத்திற்கு அதன் ஒரு பகுதி மட்டும் வழங்கப்பட்டதாக ஒரு தகவல் உள்ளது. நான் இங்கே குறிப்பிட்ட நூலாக்கங்களின் கையெழுத்துப் பிரதிகள் அந்தச் சேகரிப்புக்குள் இடம்பெற்றிருப்பின் அவற்றை நூலுருவாக்கி வெளியிடும் ஒரு வரலாற்றுப் பணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உரியதாகும்.

இன்றைய உரையில் முடிந்தவரை அமரர் க.சி. குலரத்தினம் பற்றிய தகவல்களைத் தேடித் தொகுத்திருக் கின்றேன். அவரது நூல்களில் பல இன்னமும் எமது கைகளை எட்டாதவையாக உள்ளன. அண்மைக்காலத் தில் அமரர் க.சி. குலரத்தினம் பற்றி அவ்வப்போது அவரது காலத்திலும், பின்னாளிலும் பல்வேறு அறிஞர் கள் எழுதிய கட்டுரைகள், மற்றும் அமரர் குலரத்தினத் தின் நூல்களுக்கான முன்னுரைகள் என்பவற்றைத் தொகுத்து அவரது நூல் விபரப்பட்டியலுடன் ஒரு நூலை வெளியிடத் திட்டமிட்டுள்ளோம். தங்கள் மனப் பதிவுகளை இத்தொகுப்பில் பதிவு செய்துகொள்ள விரும்பும் இலக்கியவாதிகளின் தொடர்பினை ஆவலுடன் வரவேற்போம். ✱



# கற்பக நிழல் பரப்பிய தமிழவேள்

**வி. கந்தவனம்**, கனடா

**தமிழ வேளென் றெல்லோரும்**
**தகவே மதிப்போ டழைத்துவந்த**
**கமழும் புகழார் சான்றோர்நம்**
**கந்த சுவாமி மறைந்தனரோ?**
**தமிழ்தன் மகனை இழந்திடினும்**
**தமிழர் புலம்பிக் கதறிடினும்**
**அமரர் மகிழ்ந்து வரவேற்பார்**
**அமுதம் வானுக் கிவரென்றே!**

**சின்ன தம்பிப் புலவர்தமைச்**
**செந்தமி ழுக்குத் தந்தபதி**
**மன்னும் புகழார் இணுவிலிலே**
**வந்து பிறந்த தவச்செல்வர்**
**தன்னே ரில்லா ஆசிரியர்**
**தன்மா னத்தால் முன்னின்று**
**கன்னல் தமிழின் தொல்மரபைக்**
**கட்டிக் காத்த மூதறிஞர்!**

**கொழும்புத் தமிழ்ச்சங் கப்பணிகள்**
**குறைவில் லாது தொடர்ந்திடவே**
**தொழும்பாய்த் தொண்டு புரிந்துதமிழ்**
**துலங்கச் செய்த பெருமகனார்**
**கொழுகொம் பாகப் பலர்தங்கிக்**
**கொழும்பில் வாழவும் உதவியவர்**
**பழம்பண் பாட்டின் தனிச்சிறப்பைப்**
**பாருக் குணர்த்த இனியாரோ?**

**நாமகள் கலங்க நாவலர்கள்**
**நாக்களும் இரங்கத் தமிழ்வழங்கும்**
**பூமகள் தானும் பொலிவிழக்கப்**
**புத்தெழில் காட்டித் தேன்சொரிந்த**
**தாமரை ஒன்று வாடியதோ**
**தண்ணா றொன்று வற்றியதோ**
**காமுறு கொழும்புத் தமிழர்களின்**
**கற்பக நிழலும் சாய்ந்ததுவோ?**

## மதுரை ஆதீனத்திற்கு ஈழத்தமிழர் வரலாற்று நூல்

**கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்கள் எழுதிய ஈழத்தமிழரின் முழுமையான வரலாற்று நூலினை மதுரைக் கவிஞர் இரா. இரவி அவர்கள் மதுரை மகா சந்நிதானம் அருணகிரிநாத பரமாசாரிய சுவாமிகளுக்கு வழங்கினார். இலண்டனிலுள்ள சைவத் தொண்டன் திரு. தம்பு அவர் களின் சார்பில் இந்நூல் அன்பளிப்புச் செய்யப்பட்டது.**

# ஏன் வேண்டும் தனி ஈழம்?

## இந்தியர்கள் உணர வேண்டிய தருணம்!

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழ் ஈழ மக்கள் படும் துயர் பற்றிப் பேசும்போது எல்லாம், சமஅளவில் விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் வேலையையும் செய்து நிலைமையைச் சிக்கலாக்கிக் கொள்பவர்கள் - ஒரு புறம்.

இலங்கையின் மூத்த குடிகளான தமிழர்கள் ஒட்டு மொத்தமாக அழிக்கப்படுவது பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாமல், 'விடுதலைப் புலிகளை மன்னிக்க மாட்டோம்' என்பதை மட்டும், திரும்பத் திரும்பச் சொல்லி, ஓர் இனமே அழிவதை வேடிக்கை பார்ப்பவர்கள் - மறுபுறம்.

இந்த இரு தரப்புக்கும் இடையில் ஈழப் பிரச்சினை சிக்கிச் சின்னாபின்னமாகிக் கொண்டு இருக்கும் வேளையில்தான், மும்பையில் இதுவரை இல்லாத முறையில் கடல் வழியாகக் கரையேறிய தீவிரவாதிகள், அடுத்த சில மணிநேரத்துக்குள் இந்தியாவை மட்டுமல்ல, உலகையே அலற வைத்த கொடுமை நடந்தது. அமெரிக்காவில் செய்ததைப் போல, வான்வழித் தாக்குதலும் நடைபெறலாம்... இந்தியாவின் எந்த நகரமும் தாக்கப்படலாம் என்ற நிலைமை. எல்லாம் சேர்ந்து, இந்தியாவின் பாதுகாப்புக் குறித்துக் கேள்விக் குறியை ஏற்படுத்தியுள்ளன என்பது உண்மை. தீவிரவாதத்தின் பலமான நெருக்குதலுக்கு ஆளாகியுள்ளது இந்தியா.

நம் நாட்டின் மீதான பாகிச்தானின் தீவிரவாதத்துக்கு நம்முடைய வளர்ச்சியும் ஒரு காரணம் என்றாலும், பின்னணியில் பெரும் சக்தியாகச் செயல்படுவது, மதத் தீவிரவாதமே.

இந்தியாவின் மதச் சார்பற்றத் தன்மையைக் குலைத்து, அதைத் தங்களுக்கு அனைத்து வகைகளிலும் சாதகமாக வளைத்துக்கொள்வதும், மதம் சார்ந்த நமது நிலைப்பாடுகளை ஒட்டுமொத்த இந்தியாவிலும் பதிப்பதுமே மதத் தீவிரவாதத்தின் நோக்கம். இதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

உலக வரைபடத்தை உற்றுநோக்கினால் இந்தியாவின் பக்கம் ஒரு விபரீதம் புரியும். ஆம்! இந்தியாவைச் சுற்றியுள்ள ஒரு நாடுகூட மதச்சார்பற்ற தேசம் இல்லை. உண்மையைச் சொன்னால்; எல்லாமே மதவெறி பிடித்த நாடுகள் சிங்கள இலங்கை உட்பட!

வடமேற்கே பாகிச்தான், ஆப்கானிஸ்தான், வடகிழக்கே பங்களாதேஷ் மூன்றும் இசுலாமிய நாடுகள். வடக்கே நேபாளம் இந்து நாடு. திபெத்து, சீனா மற்றும் தெற்கே உள்ள இலங்கை மூன்றும் புத்த மத நாடுகள்.

இந்த நாடுகள் அனைத்துமே தங்கள் மதத்தை வளர்க்க, மற்ற மதத்தினரை இரண்டாம் தரக் குடி மக்களாக நடத்த என்ன வேண்டுமானாலும் செய்யும் என்ற நிகழ்கால நிஜத்தை எல்லோரும் உணரமுடிகிறது. நமக்கு அச்சுறுத்தலாக இருக்கும் சீனா, பாகிச்தான் இந்த இரண்டு தேசங்களுக்கும் இலங்கை எந்த வகையிலும் குறைந்தது அல்ல என்பதுதான் வரலாறு தெரிந்தவர்களின் கூற்று. ''இலங்கை நம் நட்பு நாடு. அதைத் தொடர்ந்து அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அது பாகிச்தானிடமும் சீனாவிடமும் உதவி கேட்கும். அது நமக்குப் பிரச்சினையாகும். அதனால்தான் தமிழர்களை அழிப்பதையும் பொறுத்துக் கொண்டு இலங்கைக்கு ஆயுதம் தரவேண்டியுள்ளது'' என்ற நமது மத்திய அரசின் வாதம் மடமையானது என்கின்றனர் இவர்கள்.

இதற்குப் பல ஆதாரங்களையும் அவர்கள் காட்டுகின்றனர். இந்திய-சீனப் போரின்போது, இலங்கைத் தமிழர்கள் அனைவரும் அமிர்தலிங்கம், செல்வா ஆகியோர் தலைமையில் இந்தியாவை ஆதரித்தார்கள். ஆனால், அன்றைய இலங்கை அரசாங்கமும், சிங்களர்களும் சீனாவைத்தான் ஆதரித்தனர். காரணம் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான (புத்த) மதப் பிணைப்பு.

இந்திய-திபெத்து பிரச்சினையின்போது, சீனாவின் சொற்படிதான் இலங்கை நடந்தது. காரணம் திபெத்து, சீனா, இலங்கை மூன்றும் புத்தமத நாடுகள்.

சரி, அதுதான் போகட்டும். இந்திய-பாகிச்தான் போரின்போது, இலங்கைத் தமிழர்கள் அனைவரும் இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்தனர். ஆனால், இலங்கை அரசோ, இந்தியாவுக்கு ஆதரவாக ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. இதுதான் நடந்தது. ஆக, புத்த மதம் சாராத பிரச்சினையாக, இந்திய-பாகிச்தான் போர் நடந்த போதுகூட, இந்தியா கெட்டு அழியட்டும் என்றே இலங்கை நினைத்தது. காரணம், இந்தியாவின் மதச் சார்பின்மை மீது இலங்கைக்கு உள்ள வெறுப்பு.

போர்களை விட்டுவிடுவோம். 'தனக்குப் பிரச்சினை வருமோ என்ற பயம் காரணமாகக்கூட, இந்திய-பாகிச்தான் போரில் இலங்கை நம்மை ஆதரிக்கவில்லை என்று சிலர் வாதம் செய்யலாம். ஆனால் விளையாட்டு விஷயத்தில்கூட, இந்தியா மீதான தனது காழ்ப்புணர்வையே காட்டியுள்ளது இலங்கை.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் நடந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி ஒன்றின் அரை இறுதியில் பாகிச்தானை இந்தியா தோற்கடித்தது. இறுதிப் போட்டியில் இந்தியாவை இலங்கை வென்றது. உடனே இலங்கையைவிட, பாகிச்தானில்தான் அதிகக் கொண்டாட்டம்.

''எங்களைத் தோற்கடித்த இந்தியாவை வென்று பழி தீர்த்த இலங்கை அணியைப் பாராட்ட ஆசைப் படுகிறோம். உங்கள் அணியாரைப் பாகிச்தானுக்கு அனுப்பி வையுங்கள்'' என்று அழைப்பு விடுத்தது. பாகிச்தான் கிரிக்கெட் வாரியம் அல்ல; பாகிச்தான் அரசாங்கமே! இவர்களின் உள்நோக்கம் புரிந்தும், சந்தோஷமாக இலங்கை அணியைப் பாகிச்தானுக்கு அனுப்பி வைத்தார் சந்திரிகா. அங்கே இரண்டு

அணிகளும் கூடி, கொண்டாடியது இலங்கையின் வெற்றியை அல்ல; இந்தியாவின் தோல்வியை!

இப்போதுகூடப் பாருங்கள் மும்பை தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகு இந்தியா வந்து கிரிக்கெட் விளையாட இங்கிலாந்து அணி தயங்குகிறது. ஆனால், இந்திய அணி பாகிஸ்தான் சென்று கிரிக்கெட் விளையாட வேண்டும், என்று இலங்கையில் கூடிய ஆசிய கிரிக்கெட் கவுன்சில் இந்தியாவை நெருக்குகிறது. இந்தியாவைக் கெடுக்கும் தீவிரவாதமும் செய்யப்பட வேண்டும். அதே நேரம் இந்திய அணி பாகிஸ்தான் வந்து விளையாடுவதன் மூலம் கிடைக்கும் வருமானமும் வேண்டும் என்று பேராசைப்படும் பாகிச்தான் அரசு, அதைத் தன் கள்ள நட்பான இலங்கை அரசிடம் கேட்டுக்கொள்ள... அதன் பேரிலேயே இலங்கை இப்படி வற்புறுத்தியுள்ளது. அதனால் பாகிச்தான் சென்று விளையாட வேண்டும் என்று ஆசிய கிரிக்கெட் கவுன்சில் இந்தியாவை வற்புறுத்துகிறது.

எனவே, 'இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடுகளை எடுப்பதில் பாகிச்தான், சீனாவுக்கு எந்த விதத்திலும் சளைத்தது இல்லை இலங்கை. இந்தியாவின் மதச் சார்பின்மையைப் பலவீனப்படுத்தி, நம் நாட்டின் முன்னேற்றத்தைக் கெடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கம் தான். இந்த மூன்று தேசங்களுக்கும்'' என்கின்றனர் விஷயமறிந்தவர்கள்.

இன்னொரு கருத்தும்கூட நியாயமாகப்படுகிறது. இலங்கையில் தமிழர்களைத் திட்டமிட்டு அழிக்கும் கொடுமையைத் தடுக்க, தமிழகத்தில் உணர்வுகள் கிளம்பும்போது, வேறுவழியில்லாமல் இந்திய அரசாங்கம் இலங்கையைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் உடனே, 24 மணி நேரத்திற்குள் பாகிச்தானுக்கும், சீனாவுக்கும் ஆள் அனுப்பி அதன் மூலம் இந்தியாவை 'பிளாக் மெயில்' செய்வார்கள் ராஜபக்ஷே உள்ளிட்ட இலங்கை ஆட்சியாளர்கள். சீனாவும் பாகிச்தானும் இதற்கு வசதி செய்து கொடுக்கின்றன.

இந்நிலையில் உலக அரங்கில் இந்தியா தனது வலிமையை நிரூபிக்க முதலில் செய்ய வேண்டியது, இலங்கையின் 'பிளாக் மெயிலுக்குப்' பயப்படுவதை நிறுத்திவிட்டு, இலங்கையை நிஜமான, கடுமையான எச்சரிக்கைக்கு உட்படுத்துவதுதான். அதன்மூலம் உலக நாடுகளின் முன்னால் தலைநிமிர்ந்து நிற்பது அதைவிட முக்கியமாக, உடனடித் தேவை... தன்னருகே தன்னைப் போன்ற-ஓர் உண்மையான-மதச்சார்பற்ற நாட்டை உருவாக்குவது. அது ஒன்றே இந்தியாவிற்கு ஒரு திசையிலாவது எதிர்காலத்தில் நன்மை தருவதாக அமையும்.

எங்கே உருவாக்கலாம்... பாகிச்தானில்..? மும்பை சம்பவத்தைப் பார்த்த பிறகுமா. ஆப்கானிஸ்தானில்..? கிண்டலா... சீனா...? அது சரி. திபெத்...? நோ சான்ஸ். நேபாளம்...? பயனில்லை... பங்களாதேஷ்...? கிழிஞ்சது கிருஷ்ணகிரி. இலங்கை... ஈழம்...? ஹுர்ர்ரே... இருக்கிறதே...! ஈழம் இருக்கிறதே!! யாழ்ப்பாணத் தமிழன் தீவிர இந்து. அவன் மதம் மாறமாட்டான். கிழக்கு மாகாண முசுலிம்கள் மதப்பற்று மிக்கவர்கள்... அசைக்க முடியாது. ஈழத் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் தீவிர கிறித்தவர்கள். ஆக, ஈழம் என்பது இப்போது மதச் சார்பற்ற தேசமாகத்தான் உள்ளது. நமது வேலை சுலபமான ஒன்றுதான். இந்தியா ஈழத்தை அங்கீகரித்து உலக அங்கீகாரம் பெற வழிவகை செய்தால் போதும்.

இந்தியாவின் தெற்கே மதச்சார்பற்ற தேசம் ஒன்று உருவானால், பிறகு மதவெறி பிடித்த சிங்களனை ஈழன் பார்த்துக் கொள்வான். இந்தியாவிற்குத் தெற்குப் பக்கம் தொல்லை தீர்ந்தது. பிறகு தென்பாகப் பாகிச்தானை-சீனாவை என்ன செய்தி என்று கேட்கலாம். கிழக்கு மாகாண முசுலிம்களுக்கும் புலிகளுக்கும் முன்பு பிரச்சினை இருந்ததே என்று கேட்கலாம். அது முன்பு... இனி 'மதரீதியாகப் பிரித்து நின்றால் உருப்படவே முடியாது' என்பதை ஈழத் தமிழர்கள் உணர்ந்துவிட்ட காலம் இது. ஈழம் மதச்சார்பற்ற தேசமாகவே நிலை பெறும்.

இதற்கும் ஆதாரமிருக்கிறது. ஈழத்தை இந்து மத தேசமாக்க முடிவு செய்து, அவர்கள் பால்தாக்கரேயிடம் உதவி கேட்டு இருந்தால் நிலைமை எப்போதோ மாறியிருக்கும். ஆனால், கும்பல் கும்பலாய்ச் செத்து மடியும் இந்த நிலையிலும்கூட ஈழத்தமிழர்கள் அந்தத் தவற்றை செய்யவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஆக, இன்றைய நிலையில் தனி ஈழம் அமைவது, ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, எதிர்கால இந்தியாவின் பாதுகாப்பிற்கும் தவிர்க்க முடியாத கட்டாயமாகிறது. ''என் பாட்டியான இந்திரா காந்தியை இரண்டு சீக்கியர்கள் கொன்றதற்காக, தில்லியில் உள்ள சீக்கியர்களைத் தாக்கியதும், தொடர்ந்து சீக்கியர்கள் மேல் வன்மம் பாராட்டுவதும் தவறு'' என்று இராகுல் காந்தியே கூறிவிட்ட நிலையில், இந்திரா காந்தியை நேரடியாகச் சுட்டுக்கொன்ற சிலரை தூக்கிலிட்டதோடு, கடமையை முடித்துக்கொண்ட மத்திய அரசு, அந்தச் சதியின் மூலங்களை மட்டும் அவ்வளவாகக் கண்டு கொள்ளவில்லை. இந்நிலையில் இந்திரா காந்தியைக் கொன்றவர்களுக்கு வருடா வருடம் இன்றும், பஞ்சாபில் வீரவணக்க விழா கொண்டாடப்படுவதைப் பஞ்சாபு மாநிலக் காங்கிரசு தலைவர் உள்பட எந்தக் காங்கிரசு தலைவரும் இன்று வரை கண்டிக்காதது மட்டுமல்ல, சில நேரம் அதை வேடிக்கை பார்க்கவும் செய்கிறார்கள்.

ஆனால் 'இராஜீவ்காந்தியின் மரணத்தை மட்டும் காரணம் காட்டி ஓர் இனம் முற்றிலுமாக அழிக்கப்படுவதை வேடிக்கை பார்ப்பது எந்த வகையில் நியாயமாக இருக்க முடியும்? தனி ஈழமே எதிர்கால இந்தியாவிற்குப் பாதுகாப்பு என்ற நிலையிலும், இராஜீவ் காந்தியின் மரணத்தைக் காட்டி ஈழம் அமைவதை நாமே தடுத்துத் தெற்கிலும் இலங்கை என்ற ஒரு மதவெறி பிடித்த நாட்டிற்குத் துணைபோகலாமா? அங்குள்ள தமிழர்கள் முற்றிலும் அழிந்த பின்பு சீனா, இலங்கை போன்ற மதவெறி பிடித்த நாடுகள் கைகோத்து இரண்டு திசையிலும் இந்தியாவை வேட்டையாடத் துணை போவது, கடைந்தெடுத்த முட்டாள்தனமானது' என்ற நியாயமான ஒரு கருத்து உருவாக்கம் எழுகிறது. 'மேடைப்பேச்சு' தமிழர்களை விடுங்கள். 'இந்தியர்கள்' யாராவது இந்த நியாயமான உண்மைகளை உணர்வார்களா? ✱

*நன்றி : தமிழக அரசியல், வார இதழ்*

# திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!!

சோம. வள்ளியப்பன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், சென்னை, தமிழ்நாடு

**வித்தியாசம்**

ஒருவன் தான் வகுத்துக்கொண்ட செயல்முறைகளை ஒருபோதும் தவறவிடுவதில்லை. அந்தச் செயல் முறைப்படி செய்கிறான். அது போதுமா? அவன் இலட்சியத்தை அடைந்துவிடுவானா?

சந்தேகம்தான். ஏனெனில், அவனுடைய செயற்பாட்டு முறை அந்த இலக்கை அடையப் போதுமான தாக உள்ளதா என்றும் பார்க்க வேண்டும்.


ஒரு மாணவன் தன்னுடைய அத்துணைப் பாடப் புத்தகங்களையும் மனப்பாடம் செய்துவிடுவது என்று 'செயற்பாட்டு முறை' செய்து விவர மான திட்டம் தீட்டி, மனப்பாடமும் செய்துவிடுகிறான்.

அவன் அனைத்துத் தேர்வுத் தாள்களிலும் 100/100 வாங்க இயலுமா? அவன்தான் பாடங்கள் முழுவதையுமே மனப்பாடம் செய்து விட்டானே! ஆனா லும், முடியாதுதான். ஏனெனில், தேர்வு வெறும் மனப் பாடத்திறமையை மட்டும் சோதிப்பது அல்ல.

சில கேள்விகளுக்குப் புரிந்துகொண்டு பதில் எழுதவேண்டும். எதற்கு எந்தப் பதில், எதில் பதில் இல்லை என்பது தெரிந்ததும், சில நேரம் சுருக்கியும், சில நேரம் விவரித்தும், சில பொது அறிவிலிருந்து யோசித்தும் எழுத வேண்டியிருக்கும். ஆகவே, அங்கு அடிக்குவசி எனப்படும் போது மான திட்டம் இல்லை. ஆனால், திட்டமிட்டது நிறைவேற்றப்பட்டது. ஆகவே, தன்னுடைய விவரமான திட்டமிடலுக்கும் வழித்தடம், மைல்கற்கள் அமைப்பதற்கும் 'போதுமான செயற் பாட்டு' திட்டம், முறை அவசியம்.

**மீன்முள் வரைபடம்**

இந்த முக்கிய வழித்தடம், குட்டி வழித்தடங்கள் எல்லாம் சேர்ந்து 'மொத்தப் பார்வை' (bird's Eye View) க்கு எப்படி இருக்கும்?




இந்தப் படம் ஃபிஷ் போன் டயகிராம் (fish bone diagram) என மேலாண்மையில் குறிப்பாக 'பிரச்சினைகளைத் தீர்த்தலில்' அதிகம் உப யோகப்படுத்தப் படுவதாகும். இதைக் கண்டுபிடித்தவர் 'இஷிகாவா டய கிராம்' என்றும் அழைப்பர்.

இத்தகையதொரு வரை படத்தை நம்முடைய ஒவ்வோர் இலட்சியத்திற்கும், இலக்கிற்கும் முயன்று உருவாக்கிவிட்டால், இலக் கினை அடையப் பெரிய உதவியாக இருக்கும்.

ஏன், எதனால், எப்பொழுது என்பவை தெளிவாக இருக்க முயற்சி கள், உழைப்பு தடங்கலின்றி வரும். வெற்றி தன்னால் வந்தடையும். திட்ட மிடுவோம், வெற்றி பெறுவோம்!

**தடைகளை வெல்லுவது அவசியம்**

இலக்கினை அடைய என்ன செய்ய வேணடும்?

இலக்கினை அடையத் திட்ட மிடுவது, கோலம் போடப் புள்ளி வைப்பது போல.

புள்ளிகள் வைத்தபடி அதன் மேல் கோலத்தைப் போட வேண்டும். இல்லாவிட்டால் கோலம், கோலம் போன்று இருக்காது; அலங்கோல மாய் ஆகிவிடும்.

மேலும் புள்ளி வைத்தபொழுது இருந்த ஆர்வம், அதை முழுவதும் போட்டு முடிக்கும் வரை இருக்க வேண்டும். இல்லையேல் புள்ளி வைப்பதில் செலவழித்த உழைப்பும், பொருளும், நேரமும் வீணாகி விடும்.

வைத்த புள்ளிகள் ஒன்றாகவே இருக்கலாம். ஆனால், ஒரே வித புள்ளிக் கோலத்தைச் சிலர் போடு

வதற்கும், வேறு சிலர் போடுவதற்கும்தான் எவ்வளவு வித்தியாசம்!

செய்யும் வேலையில் ஒரு நளினம், கைவண்ணம், அழகுணர்ச்சி, சிரத்தை எனப் பலவிதங்களிலும் வித்தியாசம் காட்டுபவர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் போடும் கோலங்கள், தெரு முழுக்க எத்தனையோ நபர்கள் கோலம் போட்டிருந்தாலும், நம்மைத் திரும்பிப் பார்க்க வைக்கும், கவனத்தைக் கவரும், பாராட்டுப் பெறும்.

அதுபோலவேதான் நாமும் நம் இலக்கினை அடையப் போட்ட திட்டத்தினை நிறைவேற்றும் முறையில், அக்கறை, மனஉறுதி, அழகுணர்ச்சி, தனித் தன்மை கொண்டு செய்தால் சூரியனாய் ஒளிர்வோம்.

எத்தனையோ கிரிக்கெட் வீரர்கள் உலக அரங்கில் வந்து போகிறார்கள். அனைவரும் இரசிகர்களின் இதய சிம்மாசனத்தில் இடம் பிடிக்கிறார்களா? இல்லையே!

ஏன் ஒரு பிராட்மனும், விவியன் ரிச்சர்ட்ஸ்சும், கவாஸ்கரும், கபில்தேவும், அசாருதீனும், டெண்டுல்கரும் மட்டும் இடம் பிடிக்கிறார்கள். செய்யும் விஷயத்தில் அக்கறையும், தனித்தன்மையும் தாமே காரணம்!

### கவனத்தை ஒருமுகப்படுத்துதல்

அகல உழுவதைக் காட்டிலும், ஆழ உழுவது பலனளிக்கும் என்பது விவசாயிகளின் அனுபவம் கண்ட உண்மை. இதையே நிறுவனங்களிலும் (Be focussed on what you do) என்கிறார்கள்.

செய்யும் வேலையில் 'கவனம் பிசகாது ஈடுபடு' என்பது அதன் பொருள். உழைத்து முன்னேறிய எத்தனையோ வெற்றியாளர்களின் சுயசரிதைகள் திரும்பத் திரும்பச் சொல்லும் உண்மை; உரக்கச் சொல்லப்படும் இரகசியம்; 'செய்யும் வேலையில் முழுமனத்தோடு ஈடுபடு'. Have Involvement! பட்டும் படாமல் செய்வது எப்படிப் பலனளிக்கும்? வேண்டா வெறுப்பாய், தந்தை சொல்கிறாரே என்பதற்காக, நமக்கும் ஒரு பிழைப்பு வேண்டும் என்பதற்காக, அடுத்தவர்கள் என்ன சொல்வார்களோ என்பதற்காக எல்லாம் செய்யும் வேலைகளில் ஒருவன் மிளிரவே முடியாது.

அதற்காகத்தான் தொடக்கத்தில் அழுத்தமாக என்னவென்று சொல்லியிருக்கிறோம். உங்களை உங்களுக்குத் தெரியுமா? தெரியலாம். தெரியாமலும் இருக்கலாம். நீங்கள் யார் என்பதை முதலில் கண்டு பிடியுங்கள். தானாகவோ, பிறர் உதவியுடனோ, பின்பு வரையறுங்கள் உங்கள் இலட்சியத்தை; இலக்கை.

அப்பொழுது அத்தகைய இலக்குகளை அடைவதில் சுணக்கம் ஏற்படாது. ஏனெனில், மனம் ஒன்றை அடைய விரும்பினால், அத்துணைப் புலன்களும் அதற்கு ஒத்துழைக்கும், ஒருங்கிணைந்து செயற்படும்.

### இடையில் வரும் இன்னல்கள்

நாம், நம் இலட்சியப் பாதையை அமைத்துக் கொண்டு அதில் பயணப்படும் பொழுது பல விதங்களிலும் நம்முடைய கவனம் சிதறலாம். அதற்கான வாய்ப்புகள் உண்டு.

- ☹ படிக்கும் வயதில் காதல்
- ☹ வேறு இலட்சியம் முயற்சி செய்கையில், பணத்தாசை
- ☹ சகவாசக் கேட்டால், மதுப்பழக்கம், பிற கேளிக்கைகளில் மனத்து நாட்டம்
- ☹ சேர்க்கை, சரியில்லாததால் சோர்வு, சோம்பல்
- ☹ பொறாமை, அதனால் விரோதம், பழிவாங்கல்
- ☹ நீயா, நானா என்ற 'ஈகோ' (Ego)
- ☹ தோல்வி கண்டு பயம்
- ☹ குடும்பத்தில் துக்கம்
- ☹ பொருளாதாரச் சரிவு
- ☹ பதவி ஆசை

இன்னும் பலவும்...

### தடைகளைத் தாண்ட வேண்டும்!

வெற்றிக் கனியை எட்ட, தடைகளை இலாவகமாகத் தாண்டி வரும் Hurdles Race குதிரையைப் போல நாமும் அவற்றைத் தாண்டி வரவேண்டும்.

வாழ்க்கை என்றால் நாம் மேலே பார்த்த அத்துணைச் சவால்களும் அதற்கு மேலும்கூட வரும். வெற்றியாளன் என்பவன் சவால்களைக் கண்டு பயந்தவன் அல்லன்; சவால்களை வென்றவன்.

### டெண்டுல்கரும் வெற்றியும்

டெண்டுல்கர் காலுக்குப் பேடு, கைக்கு கிளவுஸ் எல்லாம் போட்டுக்கொண்டு, கிரிக்கெட் போட்டியில் விளையாடக் களம் இறங்குகிறார்.

முதல் பந்து வீசப்படுகிறது. ஓங்கி அடிக்கிறார். பந்து பறக்கிறது. அது பவுண்டிரியாக (4 ரன்னாக) ஆகிவிடும். எல்லைக் கோட்டைத் தொட்டுவிடும் என நினைத்து அவர் ஓடவில்லை. ஆனால், விரைந்திடும் பந்தினை ஒரு ஃபீல்டர் ஓடிச் சென்று தடுத்துவிடுகிறார்.

அடுத்த பந்தை டெண்டுல்கர் அடிக்க, வேறு ஒருவர் தடுத்துவிடுகிறார். இப்படியே ஆறு பந்துகளும் அடித்தவுடன் தடுக்கப்படுகின்றன. டெண்டுல்கர் மட்டையைத் தரையில் எறிந்துவிட்டு 'நான் விளையாட்டுக்கு

வரவில்லை. என்ன இது? நான் அடித்ததையெல்லாம் தடுத்தால் எப்படி நான் ரன்கள் எடுப்பதாம்?' எனக் கோபித்தால் எப்படியிருக்கும்?

சிரிப்பாயிருக்கும் அல்லவா?

அடிக்கும் பந்துகளைத் தடுப்பது இயற்கை. தடுக்க முடியாதபடி அடிப்பதுதான் சாமர்த்தியம். அப்படித்தான் டெண்டுல்கரும் மற்றச் சிறந்த வீரர்களும் செய்கிறார்கள்.

வாழ்க்கையிலும் அப்படியேதான்.

நம் முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெற நம் முயற்சி கவனமானவையாக, வெற்றிதரக் கூடியனவாக இருக்கவேண்டும். ஓங்கி அடிப்பதால் ரன் கிடைக்காது. தடுப்பவர் கையில் படாமல் போவதில்தான் ரன் அல்லது பலன் கிடைக்கும்.

நாம் சற்றுமுன் பார்த்த தடைகள் எல்லாம் தடுத்து நிறுத்தும், 'ஃபீல்டர்கள்' போல, நம்மைச் சுற்றி அவை நிற்கும், நெருங்கிவரும். சில சமயம் பார்த்திருக் கிறோம், சுழற்பந்து வீச்சாளர்கள் பந்து வீசும் பொழுது 4,5 ஃபீல்டர்கள் மட்டையடிப்பவரைச் சுற்றி நெருக்க மாய் நிற்பார்கள். அதுபோல நம் வெற்றிப் பயணத் திலும், பணத்தாசை, காதல், பதவி, ஈகோ, அரசியல் எனப் பல ஈர்ப்புகள் வந்து கவனத்தைத் திசை திருப்ப லாம். கவனமாய் நம் இலக்கிலேயே குறியாய் இருத்தல் அவசியம்.

வரக்கூடிய தடைகளை முன்கூட்டியே ஆராய்ந்து, வலுக்கட்டாயமாக யோசித்து, வரக்கூடிய ஒவ்வொரு தடைக்கும் ஒரு வழி கண்டுபிடித்து அதை உடைக்கத் தயாராக இருப்பதன்மூலம் தடைகளை வலுவிழக்கச் செய்யலாம். ✱

*(தொடரும்)*

## தந்தை பெரியாரின் ஓய்வறியா உழைப்பு

**தமிழ் மக்களிடையே சுயமரியாதையை வளர்க்கவும்
பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பவும்
தீண்டாமைக் கொடுமையைத் தீய்க்கவும்
சமூக விழிப்புணர்வை உருவாக்கவும்
தம் வாழ்நாளெல்லாம் பாடுபட்ட
பகுத்தறிவுத் தந்தை பெரியார்**

**8600 நாள்கள் பயணம் மேற்கொண்டார்**

**13,12,000 கி.மீ. தூரம் பயணம் செய்தார்**

**21,400 மணிகளுக்கும் மேலாக உரை நிகழ்த்தினார்**

**10700 நிகழ்ச்சிகளில் பங்கேற்று உரையாற்றியுள்ளார்.**

**வாழ்க பெரியார் புகழ்!**

**வளர்க பெரியார் சிந்தனைகள்!**

## மரணம் வரை...

**பானுகோபன் சுகதினி,** ஐக்கிய இராச்சியம்

**அன்பு என்பது அழகானது
யாருமதைத் தொலைத்திடாத வரை.
நினைவு என்பது அழகானது
அதை நினைக்காத வரை.
காதல் என்பது தெய்வீகமானது
யாரையும் காதலிக்காத வரை.
நட்பு புனிதமானது
நமது துன்பத்தில்
நழுவும் நண்பர்களைக்
காணாத வரை.
பிரிவு என்பது கொடுமையானது
யாரையும் பிரியாத வரை.
சொந்தம் சுகந்தமானது
எதிர்பார்ப்புகள்
ஏமாற்றமாகாத வரை.
நிலவும் அழகானது
அமாவாசை இல்லாத வரை.
சூரியனும் அழகானது
இருட்டு வராத வரை.
மேகமும் அழகானது
மழை வராத வரை.
நெருப்பும் விசுவாசமானது
வீட்டை எரிக்காத வரை.
வாழ்க்கையும் கூட நிரந்தரமானது
மரணம் வரும் வரை.**

## எஸ். அகத்தியரின் 'லெனின் பாதச் சுவடுகளில்'' நூல் வெளியீட்டு விழா

எஸ். அகத்தியர் எழுதியுள்ள ''லெனின் பாதச் சுவடுகளில்'' என்னும் நூலின் வெளியீட்டு விழா 18-10-08 அன்று Breut Town Hallவில் சிறப் பாக நடைபெற்றது.

மு. நித்தியானந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கே. தங்க வடிவேல் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றுப் பிரதமப் பேச்சுரையை நிகழ்த்தினார்.

செவாலியர் அமுதுப் புலவர், சி. கருணை லிங்கம், முல்லை அமுதன், புதினம் இராஜகோபால், மு. நற்குண தயாளன், அங்கயற்கண்ணி செல்வராஜா முதலான பெருமக்கள் வாழ்த்துரை நல்கினர்.

எஸ். மகாலிங்கம் நூலை வெளியிட்டு உரை நிகழ்த்தினார். உதயா விஜயன், ச. வேலு, மாதவிசி வலீலன், எஸ். தினேஷ்குமார் ஆகியோர் நூலை விமர்சித்து உரையாற்றினர்.

# RATNA & COMPANY

## SOLICITORS

*Specialise in :*

- Immigration, Nationality, Asylum, EU Law
- Permanent resident applications if you have lived in the UK for 7/10/14 years
- Work Permit / Human Rights / Bail and detention matters
- Houses / Businesses buying and selling / re-mortgages / right to buy / transfer of equity (We are able to give you immediate quotations, by phone, fax, e.mail or post)
- Magistrates' Court and Country Court Litigation
- Power of Attorney / Last Will / Sponsorship Declarations etc.
- Family and Matrimonial Matters
- We are acredited both by the LAW SOCIETY and the LEGAL SERVICES COMMISSION, as providers of quality service, in all areas of Immigration Law.

| | |
|---|---|
| We are authorised by the Legal Services Commission to provide free legal advice (if you are entitled for the same) | எமக்குத் தொடர்ந்தும் **Immigration & Asylum** சட்டத்தில் இலவச சட்ட ஆலோசனை கொடுப்பதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்துள்ளது என்பதை அறியத் தருகிறோம். |

***Contract :***

**Mr. M or Mrs. K. Ratnapalan**

**169A, High Street North, East Ham, London E6 1 JB**

**Telephone : 020 8470 8818**

Fax : 020 8475 0131 Mobile : 07769 748409

e.mail : k_ratna@ratna.co.uk or mratnapalan@hotmail.com

www.ratna.co.uk

# THAMIL CLASSES IN SEYCHELLES



**"Education, Language and Culture promote multi-culturism, Peace and Harmony"** said Mr Martin Kenneddy, the Director of the International School while speaking as the Chief Guest in the First Annual Prize Giving of the Thamil Classes organized by the Seychelles Tamil Cultural Development Centre ( STCDC ) in the International school Mont Fleuri on Sunday the 23rd of October. This marked the end of the first year when almost 50 children divided into four groups sat for their annual examination in Tamil and came out successfully winning number of awards for their competence in the learning of Tamil. Mr G .Sivashanmugampillay, the Chairman of the STCDC welcomed the chief guest and thanked him for allowing the use of their classrooms for achieving such success in the learning of Tamil by these children.

" Education for all is our policy and we are keen to promote the study of as many languages as possible because proficiency in languages promotes better understanding and harmony in the world. Seychelles being a multi-cultural and multi-lingual country the STCDC should be congratulated for taking a bold step in the right direction and with the help of voluntary teachers, it is gratifying to note that many children have won trophies and prizes for their high attainments."

Mr V. Sivasupramaniam, the co-ordinator of programmes while explaining the strengths and weaknesses of the children's attainments emphasized the importance of parental care, involvement and interests to enhance learning habits and the necessity to have an educational environment and a school situation to further promote language learning that is being done according to modern language learning techniques that are provided by Mr Pollachi Nasan of Tamil Nadu and Mr Thambi Buvanendran of Germany to whom we are very thankful.

## தமிழக அரசு இன்னமும் இருக்க வேண்டுமா? முதல்வரின் பேச்சு நியாயமே:

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க இயலாத தமிழக அரசு இன்னமும் இருக்க வேண்டுமா? என்று தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்த கருத்து நியாயம்தான் என்று ஆனந்த விகடன் வார இதழ் கருத்து தெரிவித்துள்ளது. ஆனந்த விகடன் தன் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது :

'ஆயுதம் ஏந்திய விடுதலைப் புலிகளை ஒடுக்குகிறோம்' என்ற பெயரில், நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களின் இரத்தத்தைத் தொடர்ந்து குடித்துக் கொண்டே இருக்கிறது சிறிலங்கா இராணுவம்.

'ஒரு தமிழனைக் கொன்றால், நூறு சிங்கள ஓட்டு கிடைக்கும்' என்பதே தங்கள் சூத்திரம் என சிறிலங்கா அரசு செயற்பட்டுக் கொண்டு இருக்கிறது.

இப்போது, 'புலிகளின் கோட்டை எங்கள் கைவசம்' என்ற கொக்கரிப்பையும் கேட்க முடிகிறது.

கோட்டையைப் பிடிக்கும் அந்த முயற்சியில் அப்பாவித் தமிழர்கள் எத்தனை ஆயிரம் பேர் வேட்டையாடப்பட்டார்களோ!

இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கப் போராட்டம், ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், பதவி விலகல் மிரட்டல், அனைத்து கட்சிக் கூட்டம், டெல்லிப் பயணம் என்று தமிழகத் தலைவர்கள் எடுத்துக் கொண்ட எந்த முயற்சிக்குமே மத்திய அரசு கடைசி வரை செவிசாய்க்கவில்லை.

நம் இராணுவ அதிகாரிகள் அங்கு சென்று பயிற்சி தரும் தகவலையும் மத்திய அரசு மறுக்கவில்லை. 'மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை சிறிலங்காவுக்கு அனுப்பி வைக்கிறோம்' என்று கொடுத்த வாக்குறுதியைக்கூடத் தந்திரமாகத் தள்ளிப்போட்டுக் கொண்டே வருகிறது டெல்லி!

இதையெல்லாம் பார்க்கும்போது, 'புலிகளை நாங்கள் முழுதுமாக ஒடுக்கி விடுகிறோம். அதுவரை உங்கள் தேசத்து மக்களைத் திசை திருப்பும் வகையில் கண்ணா மூச்சி அரசியல் நடத்திக் காலத்தைக் கடத்துங்கள்' என்று மத்திய அரசோடு எழுதப்படாத 'புரிந்துணர்வு ஒப்பந்தம்' ஒன்றைப் போட்டிருக்கிறதோ சிறிலங்கா அரசு என்ற பலமான சந்தேகம்தான் எழுகிறது'

நினைத்ததை எல்லாம் நிபந்தனைகளாக விதித்து, குறித்த நேரத்துக்குள் சாதித்துக் கொள்கிற தமிழக ஆளுங்கட்சி, இந்த விடயத்தில் எள் முனையளவுகூட எதையும் சாதிக்கவில்லை என்பதுதான் வேதனையளிக்கும் நிதர்சனமான உண்மை!

'இதன் பிறகும் இந்த அரசு இருக்கத்தான் வேண்டுமா?' என்று பொதுக்கூட்ட மேடையில் தமிழக முதல்வர் தழுதழுத்த குரலில் எழுப்பிய கேள்வி, தமிழ் மக்களின் காதில் இன்னமும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது!

*- நன்றி : ஆனந்த விகடன் 9-1-09*

## இலண்டனில் நடைபெற்ற ஐ.தி. சம்பந்தன் அவர்களின் இல்லத் திருமணம்

திரு/திருமதி சம்பந்தன் அவர்களின் கனிஷ்ட புதல்வன் திரு. ஞானலிங்கம், எம்.பி.ஏ., அவர்கட்கும் திரு/திருமதி பாலசுப்பிரமணியம் அவர்களின் கனிஷ்ட புதல்வி மலர்விழி, எம்.எஸ்.சி. அவர்கட்கும் இலண்டன் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய திருமண மண்டபத்தில் 23-11-08 அன்று திருமணம் சிறப்புடன் நடந்தேறியது.

பல்துறை அறிஞர் பெருமக்கள் வருதைதந்து மணமக்களை வாழ்த்தியும் பாராட்டியும் சிறப்பித்தனர்.

பல அமைப்புகளும் மன்றங்களும் வாழ்த்து மடல்கள் வழங்கிக் கௌரவித்தன.

பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கம் வழங்கிய வாழ்த்து மடலிலிருந்து:

**ஈழத்துச் சிதம்பரமென்று ஆன்றோர் போற்றும்**
**இறைசிவனார் எழுந்தருளும் காரை நகரில்**
**நாள்தோறும் இறைநாமம் சொல்லி வாழும்**
**நற்குடியில் வந்துற்ற நல்சம் பந்தன்**
**வாழ்வோடு இணைந்தவரின் இல்லம் பேணும்**
**மாண்புடைய மனையாளாய்ச் செல்வ வதியார்**
**சூழ்ந்தநல்ல அறப்பயனாய்ச் சேர்ந்த மைந்தன்**
**சுபமான அருமகனாம் ஞான லிங்கம்**

**பாலசுப்ர மணியம்தம் பதியர் தம்மின்**
**பிறைநுதலாள் அருமகளாம் கன்னி தன்னை**
**ஆலமுண்ட கண்டத்தன் அருளி னாற்றன்**
**அருமனையாய்க் கைப்பிடித்தான் ஆன்றோர் முன்னால்**
**ஞாலமதில் பதினாறு நலமும் பெற்றே**
**நயமாக இருவீரும் அறங்கள் செய்தே**
**சீலநிறை வாழ்வுதனில் சிறப்பாய் என்றும்**
**திருபெருகி வாழ்கவென வாழ்த்து கின்றோம்.**

## இலண்டனில் இலங்கை உலக அமைதிக்கான யாகம்

18-5-2008 அன்று சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஓர் அங்கமான அறிவொளி வளையத்தின ரால் இலங்கை உலக அமைதிக்கான யாகமொன்று யோகி ராம் சுந்தர் அவர்கள் தலைமையில் சங்க வளாகத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் யோகப் பயிற்சிகளில் ஈடுபட்டுவரும் முந்நூறுக்கு மேற்பட்ட உறுப்பினர்களில் 45 குடும்பத்தி னர் பங்கு பற்றிக் காலை 9.00 மணியிலிருந்து 'பாபாஜி'யை வேண்டி, பாபாஜி மந்திரத்தைத் தொடர்ச்சியாக மாலை 5.30 மணி வரை ஒருவர் பின் ஒருவராக ஒலித்தனர். பாபாஜிக்கான சிறப்பு ஓம குண்டம் அமைக்கப்பட்டு, அக்கினி முன்பாக இந்த யாகம் நடத்தப்பெற்றது.

உணர்வுபூர்வமாகத் தமிழில் இந்த மந்திரம் பொது மக்களால் ஒலிக்கப்பட்டது. சிவாச்சாரியார் குருக் கள் பிராமணர் இல்லாமல் இந்த யாகம் நடத்தப்பட்டது. குறிப்பிடத்தக்கது. யாக இறுதியில் எல்லோரும் சேர்ந்து மந்திரத்தை ஒலித்தபோது மிகவும் உணர்ச்சிகரமாக இருந்தது.

இறுதி நிகழ்ச்சியாகப் பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்கள் பங்குபற்றிச் சொற்பொழிவுகள் நடத்தப்பெற்றது. குறிப்பாக கிறித்தவ, இசுலாமிய, யூத மதப் பிரமுகர்கள் கலந்து அமைதி வேண்டுதலைப் பாராட்டிப் பேசினார்கள். இங்கிலாந்திலுள்ள சகல ஆலயங்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்ட போதும், இல்போர்ட் சிறீ செல்வ விநாயகர் ஆலயத்தைத் தவிர வேறு எந்த ஆலயத்தினரும் இந்த அமைதி வேண்டிய யாகத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த யாகத்தை முன்னின்று நடத்திய திரு. ஜெயசந்திரபோஸ், திரு. அசோகன், டாக்டர் நவநீதராசா ஆகியோர் பாராட்டிற்குரியோராவர்.

## ஆசிரியர் சேனாதிராசா சோமசுந்தரம் அவர்களுக்கு அகவை 86 சைவ முன்னேற்றச் சங்கத்தில் பாராட்டு

கொப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சேனாதிராசா சோமசுந்தரம் அவர்கள் 36 வருடம் ஆசிரிய ராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

சங்கீதம், பக்திப் பாடல்களில் ஆர்வம் கொண்ட இவர் ரசிகலா மன்றம் என்ற பெயரில் சங்கீத வகுப்புகள் நடத்தி வந்தவர் தமிழ்க் கலைகளான வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம் ஆகியவற்றை மாணவர்களுக்குத் தகுதியான ஆசிரியர்கள் மூலம் பயிற்றுவித்து வந்தவர். ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்கி இக்கலைப்பாடங் களை மாணவர்களுக்கு முறையாகக் கற்றுக் கொடுத்தவர். கலைத் துறையிலும் பாடுவதிலும் ஆர்வம் கொண்ட இவர் இலண்டன் வந்த பின்னரும், ஆலயங்களிலும் முதியோர் நிலைய நிகழ்ச்சிகளிலும் பக்திப் பாடல்கள் பாடி வருகின்றார்.

அகவை 86 எய்திய நிலையிலும் கச்சிதமாகப் பாடிவரும் அவருக்கு அண்மையில் சைவ முன்னேற்றச் சங்க முதியோர் நிலையத்தில் பிறந்த நாள் விழாச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவர் நீண்ட காலம் வாழ்ந்து பக்திப் பாடல்களை வளர்க்க வேண்டுமெனச் 'சுடரொளி' வாழ்த்துகிறது.

# ஸ்பெயினில் ''நாடுகள் அற்ற தேசிய இனங்கள்'' மாநாடு

ஸ்பெயினில் அண்மையில் ''நாடுகள் அற்ற தேசிய இனங்கள்'' எனும் மாநாடு அனைத்துலக அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் நடத்தப்பட்டது.

இதில் கொசவோ, பாலஸ்தீனம், தமிழ், குருடிஸ், கத்தலோன், பாஸ்க் ஆகிய இன மக்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்த மாநாட்டில், பிரான்சு தமிழர் மனிதர் உரிமைகள் மையத்தின் பொதுச் செயலாளர் ச.வி. கிருபாகரனும் கலந்துகொண்டு தமிழீழ மக்களின் சரித்திரம், முறிவடைந்த பேச்சுவார்த்தைகளும் உடன் படிக்கைகளும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை ஆகியவற்றுடன், இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் தற்போதைய மனித உரிமை, மனிதாபிமான நிலைமைகள் குறித்தும் உரையாற்றினார்.

அவர் தனதுரையில் தெரிவித்திருப்பதாவது:

இலங்கைத் தீவில் காலனித்துவ ஆட்சியாளரின் வருகைக்கு முன்னரே தமிழ் மக்களுக்கு என ஒரு தனி ஆட்சி அங்கு நடைமுறையிலிருந்தது. இலங்கையின் காலனித்துவ ஆட்சியாளரான போத்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் எனப் பலரும் தமிழர்களின் தனி இராச்சியத்திற்குச் சாட்சிகளாக உள்ளனர்.

துரதிர்ஷ்டவசமாகப் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் 1833ஆம் ஆண்டு இலகுவான நிருவாகத்திற்காக எனும் சாட்டுப்போக்கில் பிரித்தானியர் இலங்கைத் தீவின் தென்பகுதியில் நடைமுறையில் இருந்த இரண்டு சிங்கள இராச்சியத்துடன் தமிழ் இராச்சியத்தை இணைத்தார்கள். அன்றில் இருந்தே தமிழர்களின் தனி இராச்சியம் இலங்கைத் தீவில் பறிபோனது.

பிரித்தானிய ஆட்சியாளரினால் 1948 ஆம் ஆண்டு இலங்கைத் தீவுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்ட போது, பாகிச்தான் என ஒரு புதிய நாட்டை உருவாக்கிய முகமது அலி ஜின்னா போன்று அல்லாது, அன்றைய தமிழ்த் தலைவர்கள், சிங்களவர்களுடன் ஒன்றாக இணைந்து மகிழ்ச்சியாக வாழ முடியும் என எண்ணினர். இதனால் 1833ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த தமிழர்களின் தனி இராச்சியம் மீண்டும் தமிழர்களிடம் கையளிக்கப்பட்ட வேண்டும் எனும் நிபந்தனையை முன்வைக்கத் தவறினர்.

இதன் காரணத்தினால் இன்று ஈழத் தமிழர்கள் சமூக பொருளாதார அரசியல் உரிமைகளை இழந்து பெரும் இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயங்கள் யாவும், சட்டத்திற்கு எதிரானதாகவும், அரசியல் யாப்புக்கு எதிரானதாகவும், ஜனநாயகத்திற்கு எதிரானதாகவும், பௌத்த மதத்துக்கு எதிரானதாகவும் பார்க்கப்படுவதனால் சகல சிறிலங்கா அரசுகளும் தமிழ் மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன.

சிறிலங்கா அரசு உடனடியாகப் போரை நிறுத்தி உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் யாவரையும் தமது சொந்த கிராமங்களிலும் குடிமனைகளிலும் மீளக்குடியமர்த்தும் அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றார் அவர்.

மாநாட்டில் கொசவோவின் சுயநிர்ணய உரிமை தொடர்பில் உரையாற்றிய கொசவோவின் பிரதிநிதியின் உரை அங்குச் சகலரையும் திகிலடைய வைத்துள்ளது. அவர் தமது உரையில் கூறியதாவது:

பெருமளவில் நாம் வாக்களிக்க சுயநிர்ணய உரிமை இன்னும் எமக்குக் கிடைக்கவில்லை. தற்போது அனைத்துலக சமுதாயமே எம்மை ஆள்கின்றனர். நாம் இன்னும் எமது கொசவோவின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராட வேண்டி உள்ளது என அவர் மேலும் கூறினார். ✱

## சிவத்தமிழ்ச் செல்வி நினைவாலய திறப்பு விழா



அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 84 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழாவும் சிவத்தமிழ்ச் செல்வியின் நினைவாலய திறப்பு விழாவும் அண்மையில் தெல்லிப் பளை துர்க்கையம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் இடம் பெற்றன.

கதை நேரம்-16

# முதலில் தூக்கி எறி

**தி.க. சந்திரசேகரன்,** மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், திருப்பத்தூர், தமிழ்நாடு

மிகப்பெரும் செல்வர் ஒருவர் தமது மாளிகையில் தன் நெருங்கிய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் விருந்தளித்தார்.

விருந்துக்கு வந்தவர்கள் அனைவரும் மிகவும் பகட்டான ஆடைகளை அணிந்திருந்தனர்!

ஆண்கள் 'டின்னர் ஜாக்கெட்' அணிந்திருந்தனர். பெண்கள் கவர்ச்சிகரமாகப் பட்டாடைகள் உடுத்தி, வைரங்களில் ஜொலித்தார்கள்.

மிகப்பெரிய, உயரிய தேக்கு மரங்களால் ஆன நீள் வட்ட மேசையின் மீது உணவு பரிமாற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தட்டுகள், கிண்ணங்கள், கரண்டிகள், பாத்திரங்கள் அனைத்துமே தூய்மையான வெள்ளியால் ஆனவை., மேசையே வெள்ளியால் பளபளத்தது.

தலை சிறந்த சமையற்காரர்கள் அற்புதமாகச் சமைத்த உணவு வகைகளை, சீருடை அணிந்த பணியாளர்கள், எப்படிப் பரிமாற வேண்டுமோ அந்த முறைப்படி பரிமாறினார்கள். காபூல் திராட்சைக் கனி, ஆஸ்திரேலியா ஆப்பிள், குவைத் நாட்டுப் பேரீச்சம் பழங்கள், இந்தியாவின் சேலத்து மாம்பழங்கள் எனப் பலவகையான பழவகைகளும் அப்பெரிய மேசையின் மீது ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தன! இத்தாலிய நாட்டு ஐஸ்கிரீம் வகைகள் வரவழைக்கப் பட்டிருந்தன.

விருந்து தொடங்கியது. நாற்காலியின் மீது அமர்ந்திருந்த ஒவ்வொருவரும் இடது கை விரல்களால் மூக்கைப் பிடித்துக் கொண்டு, வெள்ளிக் கிண்ணத்திலிருந்து 'சிக்கன் சூப்'பை வெள்ளிக் கரண்டியில் எடுத்து சுவைத்துக் கொண்டிருந்தனர்.

நீண்ட அந்த உணவு மேசையின் நடுவில் மிகப் பெரிய ஒரு வெள்ளித் தட்டு இருந்தது. அந்தத் தட்டில் 10 நாள்களுக்கு முன் அடிபட்டுச் செத்துப்போன, அழுகிக் கிடந்த ஒரு கழுதையின் உடல் நாறிக் கொண்டிருந்தது!

**குப்பைக்கு நடுவே குடியிருக்காதே!**

மேற்கண்ட சூழ்நிலையை நாம் பல இடங்களில் காண்கிறோம். மேலோட்டமாகப் பார்ப்பதற்கு எல்லாம் சிறப்பாக இருப்பது போலத் தோன்றும். ஆனால், ஏதோ ஒரு கசப்பான செய்தி அந்த இடத்தைக் கெடுத்து வைத்திருக்கும்.

அவ்வளவு சிறப்பான விருந்து நடைபெறுகிறது. ஆனால், அத்தனை பேரும் மூக்கைப் பிடித்துக்கொண்டு முகத்தைச் சுளித்தபடி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏன்? அழுகிக் கொண்டிருந்த கழுதையின் உடல் மேசை மேல் இருக்கிறது.

முதலில் என்ன செய்திருக்க வேண்டும்?

அழுகிக் கொண்டிருந்த அந்த உடலை அப்புறப் படுத்திவிட்டு, அறையை டெட்டால் ஊற்றிக் கழுவித் தூய்மைப்படுத்திப் பின் நறுமணத் திரவத்தைத் தெளித்து இனிய சூழ்நிலையை உருவாக்கி இருந்தால் விருந்து சிறப்பாக இருந்திருக்கும்.

ஒரு நல்ல சூழ்நிலையில் கூழைக்கூட மகிழ்ச்சியாகக் குடிக்க முடியும்; ஆனால், நாறிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் அறுசுவை உணவைக்கூட ஆறுதலாக உண்ண முடியாது!

பல குடும்பங்களில் சிக்கல்கள் நடுநாயகமாக வீட்டை ஆட்டிப் படைக்கும். அதைத் தீர்க்க யாரும் முயலமாட்டார்கள். ஆனால், குடும்பம் நடந்துகொண்டிருக்கும்.

ஓர் அலுவலகத்தில் வேலை செய்யும் அலுவலர்கள் - அதிகாரிகளிடம் பல மனக் குமுறல்களிருக்கும், அவற்றைத் தீர்க்காமலேயே அவர்கள் வேலைக்கு வருவார்கள்-போவார்கள், அலுவல் நடக்கும். ஆனால் யார் மனத்திலும் நிம்மதி இருக்காது.

அன்றாட வாழ்க்கையில் ஏதேனும் சிக்கல்கள் வந்துகொண்டே இருக்கும். அவற்றைத் தூக்கி எறிந்து விட்டு வாழ்க்கையை நடத்த வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் நம் வீட்டில் ஏதேனும் குப்பைகள் கண்டிப்பாக வந்து விழும். அறையைப் பெருக்கிவிட்டு வாழ வேண்டும். அடுத்த நாள் மீண்டும் குப்பை விழும்; பெருக்கித் தள்ள வேண்டியதுதான். மூன்றாம் நாளும் குப்பை விழும்; அகற்ற வேண்டியதுதான். அன்றாடம் விழும் குப்பையை அகற்றாவிடில் நம் வீடு குப்பைத் தொட்டியாக மாறிவிடும். நாமும் குப்பைத் தொட்டியில் குடியிருக்கும் குப்பையாய் ஆகிவிடுவோம்.

ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிவிட்டோம், உடனே தீர்த்துவிட வேண்டும். ஆனால், தொடர்ந்து பல ஆயிரங்கள் கடன் வாங்கி, இலட்சக்கணக்கில் கடன் சேர்ந்து விட்டால் அந்தச் சுமையே நம்மைக் கொன்று விடும்.

சிக்கல்கள், கெட்ட வழக்கங்கள், தீய நண்பர்கள், கடன்கள் ஆகியவற்றைச் சேர்த்து நடு அறையில் வைத்துக் கொள்ளாதீர்கள்! வாழ்க்கை கெட்டுப் போகும்.

அவ்வப்போது அவற்றைத் தூக்கி எறிந்து விடுங்கள்! ✱

**கலைவாணர் தருமலிங்கம் அவர்களின்**

**'மனிதர்களைப் புரிந்து கொள்ளுதலும் மனித இயல்புகளை விளங்கிக் கொள்ளுதலும்'**

என்னும் தலைப்பிலான கட்டுரைத் தொடர் அடுத்த இதழிலிருந்து இடம்பெறும் என்பதை சுடரொளி வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

*- ஆசிரியர்*

# திருமண சேவை



**தங்கள் சளைக்காத தேடல் இலங்கை மணமகளா?**

*அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி வேல் அமுதனிடம் இலங்கை மணமகள் கையிருப்பு மொத்தம் 480 கடிதக் கோப்புகள். இவற்றுள் 25 வயதுக்குட்பட்டவர் 28 பேர்; 26 முதல் 30 வரை 125 பேர்; 31-35 முதல் 35 வரை 158 பேர்; 36 முதல் 40 வரை 88 பேர், 41வயதுக்கு மேல் 81 பேர்.*

*இன்னுமேன் தாமதம்?... இன்றே குரும்பசிட்டியுர் மாயெழு வேல் அமுதனைச் சந்தியுங்கள்!*

**மேலதிக விவரங்களைச் சுயதெரிவுமுறை முன்னோடி மூத்த புகழ்பூத்த, சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் வேல் அமுதனிடம் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் விசாரித்தறிக.**

**கொழும்பு நேரடித் தொலைபேசி: 2360488, 2360694, 4893929**

முகவரி: 6-3-3, மெற்றோ மாடிமனை,
(வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு முன்பதாகவுள்ள 33ஆம் ஒழுங்கை வழி),
55ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06, இலங்கை

*சுலபமான தெரிவுக்குச் சுயதெரிவுமுறையே!*
*மகோன்னத மணவாழ்வுக்கு குரும்பசிட்டியூர் மாயெழுவேல் அமுதனே!*

# வெளிவருகிறது!

# தமிழ் ஓலைகள் 2009

## ஐரோப்பிய தமிழ் தகவல் ஏடு

**வழமைபோல் தமிழ்ப் புத்தாண்டு அன்று தமிழ் ஓலைகளின் 16ஆவது பதிப்பு வெளிவருகிறது. தங்கள் விபரங்கள், விளம்பரங்களை இணைக்க விரும்புவோர் தயவு செய்து உடனடியாக தொலைபேசி, தொலைநகல், தபால் அல்லது மின்அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்**

**தொடர்புக்கு**

**020 8543 2126 , 020 8942 8745**
**Mobile: 0771 800 3838, 0771 800 3839**
52, Kingsley Road, Wimbledon, London SW19 8HF
Fax: 020 8540 3442, E-mail: editor@tamilpages.org, Web: www.tamilpages.org

**தமிழரின் சேவைக்கு தமிழ் ஓலைகள்**

ELAKKIA Sri Lankan Taste Short-Eats

# New
Range of Products from ELAKKIA

**NO more Pans**
**NO more Frying**
**Pre Fried!**
**Just Bake it!! Eat it!!**










NOW AVAILABLE IN ALL SRI LANKAN SHOPS!...

RUBY'S Food Products
Unit-4, Walmgate Road, Perivale, Middx, UB6 7LH

Tel: 020 8799 7180
mail@rubysfoodproducts.co.uk